
பக்கம் 06
குஜராத் கலவரம்: மோடிக்கு எதிரான மனு தள்ளுபடி


பக்கம் 07
அரபாத்தின் சாவு இயற்கையானது


பக்கம் 22
டயமன்ஸ், மோரிஸ் அணிகள் வெற்றி


பக்கம் 23
அஸ்வினுக்கு விருது



# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 032 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 13, சனி 28.12.2013

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30



மப்பான வானிலை
29 C 24 C

# ஜெனிவாவில் பரப்புரைக்கு தயாராகிறது கூட்டமைப்பு

## சர்வதேச விசாரணை வலியுறுத்தப்படும் என்கிறார் சுரேஷ்

கொழும்பு, டிசெ. 28
இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணைப் பிரேரணையை நிறைவேற்றுமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளை வலியுறுத்தி ஜெனிவாவில் இம்முறை தீவிர பரப்புரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபடவுள்ளது.
இத்தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று உறுதிப்படுத்தினார்.
வவுனியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய சந்திப்பில், அரச படைகளின் கொடூரங்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க இம்முறை ஜெனிவாவில் கூட்டமைப்பு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கட்சியின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகளின் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.
இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் வெளிநாடுகளின் இராஜதந்திரிகளைச் சந்தித்துவிட்டு ஜெனிவா சென்று அங்கு இறுதிக்கட்ட போரில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தீவிர பரப்புரையில் ஈடுபடத்



21 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் கைதி ஒருவர் தப்பியோட்டம்

வவுனியா, டிசெ.28
வவுனியா நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட கைதி ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தப்பியோடியுள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட வவுனியா சிதம்பரபுரத்தைச் சேர்ந்த செல்வநாயகம் ரவிக்குமார் என்பவரே இவ்வாறு தப்பியோடியுள்ளார்.
தப்பியோடிய கைதிக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றிலும் பல வழக்குகள் உள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் அவரைத் தேடும் பணி இடம்பெற்று வருவதாகவும் கூறினர். (த-400)

## நுவரெலியாவில் கடும் குளிர்

கொழும்பு, டிசெ. 28
நுவரெலிய மாவட்டத்தில் நேற்று 4.9 செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியதால் அங்கு கடும் குளிர் நிலவியது என வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.
இந்தக் காலநிலையால் நுவரெலியா மாவட்டத்தில் நேற்று நிலமேற்பரப்பில் உறைபனி காணப்பட்டுள்ளது. இந்த நிலைமை இன்னும் இரண்டு மூன்று நாள்களுக்கு நீடிக்கும் என வானிலை அவதான நிலைய அதிகாரி கே.டீ.சுஜீவ தெரிவித்தார்.
நுவரெலியாவில் நேற்று நில

21 ஆம் பக்கம் பார்க்க

## திருமலை வெடி விபத்தில் 6 வயதுச் சிறுவன் சாவு

### சகோதரர்கள் இருவர் படுகாயம்

திருமலை,டிசெ 28
திருகோணமலை,செந்தூர் பகுதியில் நேற்று வெடிபொருள் ஒன்று வெடித்ததில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். அவனது சகோதரர்கள் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரும் காயமடைந்தவர்களும்ஒரே குடும்பத்தைச்சேர்ந்தவர்களாவர்.
6 வயது சிறுவனான றினோஸ் காயமடைந்து திருகோண

21 ஆம் பக்கம் பார்க்க


## 19 வயது யுவதி மீது 5 பேர் வன்புணர்வாம்

யாழ்ப்பாணம், டிசெ.28
வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த 19 வயது யுவதி சாவகச்சேரியில் வைத்து ஐந்து பேரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
இது தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் இதுவரை எவரையும் கைது செய்யவில்லை என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தெரிவித்தார்.
நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வவுனியா, நெளுக்குளம் பகுதியில் இருந்து குறித்த யுவதி சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்

21 ஆம் பக்கம் பார்க்க

## இப்படியும் நிறைவேறுகிறது வல்வை நகரசபை பட்ஜெட்

### கூட்டமைப்பின் உள்முரண்பாடுகளால் சூடுபறக்கிறது



யாழ்ப்பாணம், டிசெ. 28
வல்வெட்டித்துறை நகர சபையின் 5 உறுப்பினர் களை ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியே தடுத்து நிறுத்தி வைத்திருக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினரின் ஆதரவுடன் சபையின் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.
இந்த வரவு செலவுத் திட்டம் முதல் தடவையாகச் சமர்ப்பிக்கப்பட்டபோது தோற்கடிக்கப்பட்டிருந்தது. இதனை அடுத்து

21 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர்கள் பேச்சு ஜனவரியில்

புதுடில்லி, டிசெ.28
இலங்கை - .இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பான பேச்சு ஜனவரி மாதத்தில் புதுடில்லியில் நிச்சயம் நடைபெறும் எனத் தமிழக மீனவர் பிரதிநிதிகளிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்

21 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க உதவிச் செயலர் ஜனவரியில் இலங்கைக்கு

கொழும்பு, டிசெ.28
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானித்தின் மூலம் பெறப்பட்ட முன்னேற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஷ்வால் அடுத்த மாதம் இலங்கை வருகிறார்.
மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடருக்கு முன்னர் இந்த மதிப்பீட்டை மேற்கொள்வதற்காகவே புதிதாக நியமனம் பெற்றுள்ள உதவிச் செயலர் நிஷா தேசாயை இலங்கைக்கு அனுப்புகிறது அமெ


21 ஆம் பக்கம் பார்க்க

## கால அவகாசம் வழங்குங்கள் சர்வதேசத்திடம் அரசு கெஞ்சல்

### நம்பிக்கை அடிப்படையில் ஆதரவளிக்க கோருகிறார் பீரிஸ்

கொழும்பு, டிசெ. 28
நம்பிக்கையின் அடிப்படையில் ஆதரவு தருமாறு சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.
போரால் இடம்பெயர்ந்த 4 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும், காணாமற்போன ஆயிரக்கணக்கானோரைத் தேடுவதற்கும் மேலும் கால அவகாசம் தேவை என்றும் அரசு தெரிவித்துள்ளது.
சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், வெளிவிவகார அமைச்சரும் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.
கற்றுக்கொண்ட பாடங்களுக்கும், நல்லிணக்கப்பாட்டுக்குமான ஆணைக் குழுவின்

21 ஆம் பக்கம் பார்க்க



## மன்னார் மனிதப் புதை குழியை தோண்டும் பணி மீண்டும் இன்று

மன்னார், டிசெ.28
மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி இன்று சனிக்கிழமை மீண்டும் தோண்டப்படவுள்ளது.
மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம், அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியரட்ண ஆகியோர் முன்னிலையில் இன்று காலை 8.30 மணிக்குப் புதைகுழியை மீண்டும் தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
கடந்த 20 ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் வீதி ஓரத்தில் குடிதண்ணீர்க் குழாய் இணைப்பு வேலைக்

21 ஆம் பக்கம் பார்க்க

# ஆலயத்தில் திருட்டு; பூசகரிடமும் விசாரணை

யாழ்ப்பாணம், டிசெ.28

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஆலயத்தின் பூசகரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. அத்துடன் திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கண்டறிவதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமல சேன நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி நள்ளிரவில் கூரை பிரித்து அங்கிருந்த சுமார் 150 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டன.

இது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும், குறித்த ஆலயத்தின் பூசகரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும், இதற்கென விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளதெனவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

ஆலயத்துக்குப் பொதுமக்களால் காணிக்கையாகக் கொடுக்கப்படுகின்ற நகைகள், பொருள்கள் என்பவற்றை ஆலய நிர்வாகிகள் ஏதாவது பதிவேட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போது அது ஆலயத்துக்கும் எமக்கும் பயனுள்ளதாக அமையும் எனவும் அவர் மேலும் கூறினார்.

(கு-21-4)

# முல்லைத்தீவுக்கு முறையற்ற சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு தற்காலிகத் தடை

## இதனையடுத்துப் பணிப் புறக்கணிப்பும் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.28

முறையற்ற சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களை சேவையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்துவதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் உறுதிமொழி வழங்கியதை அடுத்து வெளி மாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் நேற்று பணிப் புறக்கணிப்பைக் கைவிட்டன.



வவுனியாவில் இருந்து முல்லைத்தீவுக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் முறையற்ற விதத்தில் குறுந்தூரப் பாதையைத் தவிர்த்து நீண்ட தூர சேவையில் ஈடுபடுவதை எதிர்த்து வெளி மாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன.

அனைத்து பஸ்களும் சாரதிகளும், நடத்துனர்களும் பரந்தன் பஸ் தரிப்பிடத்தில் ஒன்றுகூடி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோருடன் கலந்துரையாடியதை அடுத்து முறையற்ற சேவையில் ஈடுபடும் பஸ்களைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அரச அதிபர் உறுதி மொழி வழங்கினார். இதனையடுத்து நண்பகல் 12 மணியுடன் பணிப் புறக்கணிப்பு கைவிடப்பட்டது.

வவுனியாவில் இருந்து மாங்குளம் மற்றும் நெடுங்கேணி ஊடாக முல்லைத்தீவு செல்ல வேண்டிய பஸ் சேவை வவுனியாவில் இருந்து பரந்தன் ஊடாக புதுக்குடியிருப்பு சென்று முல்லைத்தீவை அடைகின்றது. இந்தச் சேவையில் 8 பஸ்கள் ஈடுபடுகின்றன. இதனைக் கண்டித்தே வெளிமாவட்டங்களுக்கான பஸ்கள் புறக்கணிப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை –

போக்குவரத்தில் ஈடுபட்ட இரண்டு பஸ்கள் மீது தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது. மாங்குளம் பகுதியில் வைத்து ஒரு பஸ்ஸும் ஏ35 வீதி தேராவில் பகுதியில் வைத்து மற்றுமொரு பஸ்ஸும் தாக்குதலுக்கு உள்ளாகின. (கு-க-6-14)

# வீதியில் சிறுமியை மோதிய பொலிஸ் அதிகாரிக்கு மறியல்

மதுபோதையில் மோட்டார் சைக்கிளை ஓட்டி மூன்றரை வயதுச் சிறுமியொருத்தியை மோதிக் காயப்படுத்திய புத்தளம் பொலிஸ் குற்றத்தடுப்புப்பிரிவின் பொறுப்பதிகாரியை அடுத்த திங்கட்கிழமை (30 ஆம் திகதி) வரை விளக்க மறியலில் வைக்குமாறு புத்தளம் நீதிவானும், மேலதிக மாவட்ட நீதிவானுமான செல்வி பாரதி விஜேரத்ன உத்தரவிட்டுள்ளார்.

புத்தளம் - அநுராதபுரம் வீதியில் வில்லுவத்த பிரதேசத்தில் பாதையைக் கடந்து கொண்டிருந்த சிறுமியின் மீது மோட்டார் சைக்கிள் மோதியதால் அவள் காயங்களுக்குள்ளாகி புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் சார்பில் ஆஜரான இரண்டு சட்டத்தரணிகள் இந்த விபத்து கவனயீனத்தால் நடந்தது அல்ல எனவும் இந்தச் சிறுமி பாதையின் மறுபுறம் நின்றிருந்த தனது தந்தையை நோக்கி சடுதியாக ஓட முயன்றதால் ஏற்பட்ட விபத்தே எனவும் நீதிவானிடம் கூறினர்.

அத்துடன், விபத்து நடந்த இடத்திலிருந்து சில மீற்றர் தூரத்தில் பாதசாரிக் கடவை இருந்த போதிலும் இந்தச் சிறுமி அதை விடுத்து நடுப் பாதையில் நடந்ததாலேயே மோட்டார் சைக்கிளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிய வில்லை எனவும் அவர்கள் விளக்கினர்.

மேலதிக விசாரணைகள் அடுத்த திங்கட்கிழமைக்கு (30ஆம் திகதி) ஒத்திவைத்த நீதிவான் அதுவரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# வாடகை வாகனங்களை வாங்குபவர்களும் கைது

## யாழ்.பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.28

தென் பகுதியில் வாடகைக்கு அமர்த்தப்பட்டு யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்படும் கார்கள், பஜிரோக்கள், ஹைஏஸ் வாகனங்கள் ஆகியவற்றை எவராவது வாங்கினால் அல்லது அடைவு எடுத்தால் திருட்டுக் குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமல சேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடத்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் வாடகைக்கு அமர்த்தப்பட்டு இங்கு கொண்டுவந்து விற்பனை செய்யப்படும் வாகனங்கள் எந்தவித ஆவணமுமின்றி பெற்றுக் கொள்கிறார்கள். வாகனங்களின் உரிமையாளர்கள், தமது வாகனங்கள் காணாமற்போய் விட்டதாகக் கூறிப் பொலிஸில் முறைப்பாடு செய்கிறார்கள். இதன் அடிப்படையில் பொலிஸார், அத்தகைய வாகனங்களை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களிடமிருந்து வாகனங்களைப் பறிமுதல் செய்வதுடன் அவற்றை வைத்திருந்தவர்களையும் கைது செய்ய முடியும். எனவே அத்தகைய வாகனங்களை எவரும் கொள்வனவு செய்யவோ, அடைவு எடுக்கவோ வேண்டாம் - என்றார்.

(கு-4)

# மீள் குடியமர்வு கொடுப்பனவை பெற்றுக்கொள்க

புதுக்குடியிருப்பு, டிசெ.28

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட மீள் குடியமர்வுக் கொடுப்பனவைப் பெறாதவர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வந்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலப் போர் அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து பின்னர் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

இந்தக் கொடுப்பனவைப் பெறத் தகுதி பெற்றவர்களில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதுவரை தமக்குரிய கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை கொடுப்பனவைப் பெறாத குடும்பங்களை எதிர்வரும் திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.திலீபன் அறிவித்துள்ளார். (கு-400)

# ரயில் கடவை இடமாற்றம் எதிர்த்து நேற்று போராட்டம்

பளை, டிசெ. 28

வடபகுதிக்கான ரயில் சேவை ஆரம்பகாலம் தொடக்கம் அமைக்கப்பட்டிருந்த ரயில் கடவை வேறு இடத்துக்கு மாற்றப்பட்டதை எதிர்த்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பளை வேம்பொடுகேணியில் இடம்பெற்றது.

பளை, இத்தாவில் பகுதியில் ஏ - 9 வீதியிலிருந்து வேம்பொடுகேணிச் சந்தியில் இருந்து கச்சார் வெளி, செல்வபுரம், புலோப்பளை ஊடாக அல்லிப் பளைக்குச் செல்லும் வீதி நீண்ட காலமாக ரயில் கடவையாகப் பயன்படுத்தப்பட்டுவந்தது.

இந்தக் கடவை ஊடாக முகமாலை, கிளாலி ஆகிய பிரிவுகளுக்குச் செல்லும் வாகனங்கள் பயன்படுத்தி வந்தன.

தற்போது ரயில் பாதை புதிதாக அமைக்கப்படும் போது இந்தக் கடவையில் இருந்து 500 மீற்றருக்கு அப்பால் கடவை அமைப்பதற்கான ஆயத்த வேலைகள் இடம்பெறுகின்றன.

அந்த வீதி தண்டவாளம் வைத்து போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை கடந்த வருடம் இந்தக் கடவையிலிருந்து கச்சார் வெளி, செல்வபுரம் ஊடாக அல்லிப்பளை வரை தார் வீதியை அமைத்துள்ளது.

இந் நிலையில் திடீரென ரயில் கடவை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதை எதிர்த்து வேம்பொடுகேணி, கச்சார் வெளி, செல்வபுரம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் ஒன்று திரண்டு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

(கு-9)

# தீப்பிடித்த ரயிலில் இருந்து பாய்ந்தவர்களில் மூவர் சாவு

## மேலும் பலர் படுகாயம்

கொழும்பு டிசெ.28

பயணித்த ரயிலில் தீ விபத்து ஏற்பட்டதை அடுத்து அதில் இருந்து தப்பவதற்காக ரயிலில் இருந்து பாய்ந்தவர்களை மற்றொரு ரயில் மோதித் தள்ளியது. இதில் மூவர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாங்கொடையில் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

மாத்தறையில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த ரயிலின் இயந்திரத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் ரயிலில் இருந்து பயணிகள் பலர் பாய்ந்து தற்பிக்க முயன்றுள்ளனர். அவ்வேளையில் மற்றொரு ரயில் பாதையில் கொழும்பை நோக்கி வந்த ரயிலில் இருந்து பாய்ந்தவர்களை மோதித்தள்ளியது. இதில் மூவர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயடைந்த நிலையில் வத்துப்பிட்டிய வல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கு-400)

# நூல் வெளியீடு

திருமதி மங்கையர்க்கரசி லோகேஸ்வரன் எழுதிய கோவைப் பதியில் சைவமும் தமிழும் (இரண்டாம்பதிப்பு) என்ற நூல் வெளியீட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

வித்தியா பூஷணம் பிரம்ம ஸ்ரீ ப.சிவானந்த சர்மா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வாழ்த்துரையை கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபனும், நூலின் அறிமுகவுரையை ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளரும், எழுத்தாளருமான திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ஆகியோர் நிகழ்த்துவர். நூலின் முதற்பிரதியை கோப்பாய் ஹூவாய் சுப்பிரமணிய கோட்டத்தைச் சேர்ந்த திருமதி கனகரத்தினம் சிவலோஜினி அம்மையார் பெற்றுக்கொள்வார்.

(கு-400)

# நுணாவிலில் நேற்று இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி, டிசெ.28

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் சாவகச்சேரி பொலிஸாரும் இணைந்து இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை நேற்று கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் நடத்தினர். மருத்துவ பரிசோதனை முகாமில் கண், இரத்த அழுத்தம், நீரிழிவு, வாய்ப் புற்று, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

> “மருத்துவ பரிசோதனை முகாமில் கண், இரத்த அழுத்தம், நீரிழிவு, வாய்ப் புற்று, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்க்ளைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

பரிசோதனை முகாமில் நுணாவில் மேற்கு, தென் மட்டுவில், கைதடி நுணாவில், சாந்திபுரம், மட்டுவில் நுணாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பெருமளவானோர் கலந்துகொண்டனர். (கு-9)

# கடைகளின் முன்பாக 3 அடிக்கு பொருள்களை வைக்க அனுமதி

யாழ்.நகரில் மின்சார நிலைய வீதியில் உள்ள புடவைக் கடைகள், அழகு சாதனக் கடைகள் என்பன தமது கடைகளிலிருந்து முன்புறமாக 3 அடி தூரத்துக்குப் பொருள்களைக் காட்சிப்படுத்தி விற்பனையில் ஈடுபட முடியாது.

இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 5ஆம் திகதி வரை இது நடைமுறையில் இருக்கும் என்றும், இந்தப் பரீட்சார்த்த திட்டம் வெற்றியளிக்குமாயின் பண்டிகைக் காலங்களில் இந்த நடைமுறையைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்றும் யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ்.வணிகர் கழகத்துக்கும் யாழ்.மாநகர ஆணையாளர் முதல்வர் உள்ளிட்டவர்களுக்கும் இடையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற சந்திப்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.கே.கே.எஸ் வீதியிலிருந்து யாழ்.பஸ் நிலையம் வரையான மின்சார நிலைய வீதியில் உள்ள புடவை மற்றும் அழகுசாதன பொருள் விற்பனை நிலையங்களுக்கு மாத்திரம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் வாகனப் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருக்கும். எதிர்வரும் 5ஆம் திகதிக்குப் பின்னரே வாகனப் போக்குவரத்து அனுமதிக்கப்படும். இந்த நடைமுறை வெற்றியளிக்குமாயின் எதிர்காலத்தில் பண்டிகைக் காலத்திலும் இதனைத் தொடர்ந்து பின்பற்ற முடியும்.

யாழ்.நகரில் நகர சபையால் ஒழுங்குபடுத்தப்பட்ட இடங்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் நடைபாதை கடைகள் நடத்தமுடியாது. -என்றார். (கு-4)

## வலி.தெற்கில் 3 வீதிகளுக்கு விமோசனம்

வலி.தென்மேற்கு, டிசெ.28
வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 5 கோடி ரூபா செலவில் மூன்று வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. இவற்றில் இரு வீதிகளின் புனரமைப்புப் பணிகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மருதனார்மடம் பொதுச் சந்தைக்குப் பின்புறமாக அமைந்துள்ள தோட்டவெளி ஊடாகச் செல்லும் விவசாயிகள் பயன்படுத்தும் கலட்டி வீதி சுமார் 2 கோடியே 14 லட்சத்து 61 ஆயிரத்து 74 ரூபா செலவிலும், மாங்கலாமன் வீதி 1 கோடியே 68 லட்சத்து 6 ஆயிரத்து 837 ரூபா செலவிலும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இணுவிலிலுள்ள அன்னமார் வீதி சுமார் ஒரு கோடி ரூபா செலவில் புனரமைக் கப்படவுள்ளது.

(வ-115)



கண்டியில் இருந்து தருவிக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட யானையில் ஐயப்ப சுவாமிகளின் பவனி வந்தபோது... (ஒ-14-21)

## குற்றச் செயல்கள்; பலர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.28
யாழ்.குடாநாட்டில் போக்குவரத்துப் பொலிஸார் தமது வீதிப் பரிசோதனை நடவடிக்கைகளை அதிகரித்துள்ள நிலையில், மது போதையில் வாகனம் செலுத் திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களைத் தவிர, திருட்டு மின்சாரம் பெற்றுவந்த குற்றச்சாட்டில் 9 பேரும், அத்துமீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில் ஒருவரும், சந்தேகத்தின் பேரில் 8 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 3 பேரும், விபத்து ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 4 பேரும், மிருகவதை புரிந்த குற்றச்சாட்டில் 4 பேரும், சட்ட விரோதமாக மணல் ஏற்றிய ஒருவரும், கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவரும், மது போதையில் இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 2 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலி ஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ-4)

## ஒரு லட்சம் பனை நாற்று நடுகை செய்யத் திட்டம்

*வடக்கு, கிழக்கு மாகாணங்களில்*

யாழ்ப்பாணம், டிசெ.28
2014 இல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒரு இலட்சம் பனை நாற்றுக்களையும், 50 ஆயிரம் பனம் விதைகளையும் நடுகை செய்ய பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளது என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பனை வளங்கள் ஆங்காங்கே அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் எதிர்காலத்தில் பனை வளத்தின் அபிவிருத்தி பெரியளவில் பின்னடைவைச் சந்திக்க நேரிடலாம். இதனைக் கருத்தில் கொண்டு பனை அபிவிருத்திச் சபையால் வருடந்தோறும் பனம் விதை மற்றும் நாற்றுக்கள் நடுகை செய்யப்படுகின்றன. வடக்கு மட்டுமல்லாது கிழக்கு மாகாணத்திலும் பனை வளத்தை பாதுகாப்பதற்கு ஏதுவாக இந்த நடுகைத் திட்டம் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் 2014 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் பனம் நாற்றுக்களையும் , 50 ஆயிரம் விதைகளையும் நடுகை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. பிரதேசங்கள் தோறும் விதைகள், நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் நடுகை செய்யப்படும் என்றும் தெரிவித்தார். (வ-14)

# மகரஜோதி மண்டல பூர்த்தி விழாவில் யானையில் பவனி வந்தார் ஐயப்பன்

யாழ்ப்பாணம், டிசெ.28
ஈழத்து சபரிமலை என அழைக்கப்படும் அகில இலங்கை யாழ்.கோண்டாவில் சபரீச ஐயப்பதேவஸ்தான மகரஜோதி மண்டல பூர்த்தி பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை நல்லூர் நட ராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் சிவஸ்ரீ கி.ஹரிஹரசுத சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றது.

காலை 8 மணிக்கு கோண்டாவில் ஐயப்ப சுவாமி கோயிலில் இருந்து சுவாமி ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் விசேட பூசைகள் இடம்பெற்றன. இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட சிங்காரி மேளக்கச்சேரி அனைவரையும் ஈர்த்தது.

> “ ”
> நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் விசேட பூசைகள் இடம்பெற்றன. இந்தியாவில் இருந்து தருவிக்கப் பட்ட சிங்காரி மேளக்கச்சேரி அனைவரையும் ஈர்த்தது.

நண்பகல் கண்டியில் இருந்து தருவிக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட யானையில் ஐயப்ப சுவாமிகளின் பவனி ஆரம்பமானது.

பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லி வீதி, காங்கேசன் துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, பலாலி வீதி வழியாக யானையுடன் கூடிய ஊர்வலம் மீண்டும் கோண்டாவில் ஆலயத்தைச் சென்றடைந்தது. (வ-7)

## காசோலை மோசடியில் நான்கு முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ.28
யாழ்.குடாநாட்டில் காசோலை மோசடி தொடர்பில் கடந்த வாரம் 4 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வியாபார ரீதியான கொடுக்கல் வாங்கல் தொடர்பிலேயே இத்தகைய மோசடிகள் குறித்து முறைப்பாடுகள் பதிவாகின்றன என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:-

4 லட்சம் ரூபா பெறுமதியானது என்று கூறி போலியான காசோலை வழங்கப்பட்டுள்ளது தொடர்பில் யாழ்.மடம் வீதியைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

சுதுமலை வடக்கைச் சேர்ந்த ஒருவர் நம்பிக்கை அடிப்படையில் 2 லட்சம் ரூபா பணம் பெற்று திருப்பிக் கொடுக்காது மோசடி செய்துள்ளமை தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார் என்று தெரிவித்தார். (வ-4)

## பொலிஸில் சிக்கினர் கிடாரத் திருடர்கள்

வலி.தென்மேற்கு, டிசெ.28
வீட்டுக்குப் பின்புறமாக வைக்கப்பட்டிருந்த 25 ஆயிரம் ரூபா பெறுமதியான செப்புக் கிடாரத்தைத் திருடிச் சென்ற மூன்று இளைஞர்களில் இருவர் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டனர். கிடாரத்தைக் கைப்பற்றிய பொலிஸார் இருவரையும் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். இருவரையும் 14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சுதுமலையிலுள்ள வீடொன்றுக்கு இரவு நேரம் சென்ற திருடர்கள் வீட்டுக்குப் பின்புறமாக வைக்கப்பட்டிருந்த 25 ஆயிரம் ரூபா பெறுமதியான செப்புக் கிடாரத்தைத் திருடிச் சென்றிருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, உத விப்பொலிஸ்பரிசோதகர்பண்டார தலைமையில் சென்ற பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சாவற்கட்டைச் சேர்ந்த இருவரைக் கைது செய்தபோது திருட்டு அம்பலத்துக்கு வந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள கடை ஒன்றில் 12 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்ட கிடாரத்தைக் கைப்பற்றிய பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்த இரு இளைஞர்களையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இருவரையும் 14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தத் திருட்டுடன் சம்பந்தப்பட்டுத் தலைமறைவாக இருக்கும் மூன்றாவது நபரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (வ-115)

## 18 இலட்சம் பெறுமதியான பொருள்கள் கொள்ளை

*நேற்றைய பொலிஸ் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு*

யாழப்பாணம், டிசெ.28
யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற வீட்டுக் கதவு உடைத்துதிருட்டுமற்றும்கொள்ளைச் சம்பவங்களில் சுமார் 18 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊர்காவற்றுறை சுருவில் பகுதியில் பெண் ஒருவர் அணிந்திருந்த 12 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி திருடப்பட்டுள்ளது. கடந்த 19ஆம்திகதி இந்தச்சம்பவம்இடம்பெற்றது. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் மாத்திரம் வீட்டுக் கதவு உடைத்து, மேற்கொள்ளப்பட்ட 5 திருட்டுச் சம் பவங்களில் 3லட்சம்ரூபாபெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

குருநகரில் இரவு நேரம் வீட்டுக் கதவு உடைத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும், யாழ்.நகரில் வீட்டுக் கதவு உடைத்து 20 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்களும், சங்கானையில் வீட்டுக் கதவு உடைத்து பெறுமதிமிக்க பொருள்களும், சுன்னாகம் மயிலங்காடு பகுதியில் வீட்டுக் கதவு உடைத்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், நெல்லியடியில் வீட்டுக் கதவு உடைத்து ஒரு லட்சத்து 8 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும், பருத்தித்துறையில் வீட்டுக் கதவு உடைத்து பெறுமதிமிக்க பல பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

அரியாலையில் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் மின் மோட்டர் திருடப்பட்டுள்ளது. யாழ்.நகரில் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டர் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் அது மீட்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாயில் இரவு நேரம் பாடசாலை ஒன்றின் ஜன்னல் கண்ணாடி உடைக்கப்பட்டு சுமார் 15 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுதுமலையில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளவாலையில் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது. காங் கேசன் துறையில் 32 ஆயி ரத்து 400 ரூபா பெறுமதியான தண்டவாளங்கள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வல்வெட்டித்துறையில் 9 ஆயிரம் ரூபா பெறு மதியான 2 ஆடுகள் திருடப்பட் டுள்ளன- என்று தெரிவித்தார். (வ-4)

## கைவிடப்பட்ட காணிகள் கையகப்படுத்தி துப்புரவாக்கப்படும்

*மாநகர சபை எல்லைக்குள்*

யாழ்ப்பாணம், டிசெ.28
யாழ்.மாநகர எல்லைக்குள் உரிமையாளர்கள் இல்லாது கைவிடப்பட்டுக் கிடக்கும் காணிகளை மாநகர சபை கையகப்படுத்தித் துப்புரவை மேற்கொள்ளும் என்று யாழ். மாநகர சபை முதல்வர் தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்புத் தொடர்பாக சபை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இவ்வித செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க டெங்கு ஒழிப்புச் சட்டத்துக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பாக தீர்மானமும் உறுப்பினர்களால் ஏக மனதாக நேற்று முன்தினம் நடைபெற்ற மாநகர

> “ ”
> 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க டெங்கு ஒழிப் புச் சட் டத்துக்கு அமைய இந்த நட வடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது

சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

மாநகர சபை துப்புரவு செய்யும் காணிகளுக்கான செலவினம் உரிமையாளர்கள், பாதுகாவலர்களிடமிருந்து பெறப்பட்டு மீளஒப்படைக்கப்படும். இன்னமும் இரண்டு வாரங்களுக்குள் கைவிடப்பட்ட காணிகளை சம்பந்தப்பட்டவர்கள் துப்புரவு செய்ய வேண்டும். அவ்வாறு தவறினால் மாநகர சபை இந்த நடவடிக் கையை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

# இலவச மருத்துவ முகாம் உரும்பிராயில் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.28

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட ஏழை மக்களின் நலன் கருதி உரும்பிராயிலுள்ள இராமகிருஷ்ண மிஷனில் இலவச ஆயுள்வேத சிகிச்சை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையத்தை வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி சியாமா துரைரட்ணம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்குத் திறந்து வைக்கவுள்ளார்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்த தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஸ்ரீமத்சுவாமி இராஜேஸ்வரா நந்தாவின் சிறப்புப் பஜனையும் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் கணவனைப் பிரிந்து வாழும் இளம் பெண்களின் வாழ்வாதாரத் துக்கு உதவும் முகமாகத் தையல் இயந்திரமும் வழங்கப்படவுள்ளது.

ஆயுள்வேத சிகிச்சை நிலையம் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3 மணியிலிருந்து மாலை 5 மணிவரை இயங்கும் என்று இராம கிருஷ்ணமிஷன் இணைப் பாளர் எஸ்.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அன்றைய தினம் காலை கிளிநொச்சியிலுள்ள கிருஷ்ணபுரம் நலன்புரி நிலையத்துக்கு வருகை தரும் சுவாமிகள், சுவாமி விவேகானந்தரின் நலன்புரி நிலையத்தில் பெண்களுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பையும் ஆரம்பித்து வைப்பார். (ஒ-115)

# ஜன.2 முதல் செயற்படும் சுருவில் றோ.க.த.க

யாழ்ப்பாணம், டிசெ.28

கடந்த 28 வருடங்களுக்கு மேலாக போர் காரணமாக செயலிழந்திருந்த சுருவில் றோ.க.த.க. வித்தியாலயம் எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பிக்கப்படும் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

முதல் கட்டமாக தரம் ஒன்று வகுப்பு மாணவர்கள் மட்டுமே இங்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

வேலணை துறையூர் ஐயனார் வித்தியாலயம், வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம் ஆகியவற்றில் ஏற்படும் இட நெருக்கடியைத் தவிர்க்கும் நோக்கில் இரு பாடசாலைகளுக்கும் மத்தியில் குறித்த பாடசாலை உள்ளதால் அது ஜனவரி யில் மீள ஆரம் பிக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

இதன் அதிபராக க.ஸ்ரீசெல் வம் நியமிக்கப்பட் டுள்ளார். (வ-7)

# தமிழ்ப் பத்திரிகையாளரை விடுவிக்க உதவுக

## பிரதமருக்கு வைகோ கடிதம்



சென்னை, டிசெ.28

இலங்கையில் கைது செய்யப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் மகா.தமிழ் பிரபாகரனை விடுதலை செய்ய உதவிடுமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுற்றுலா நுழைவு உரிமை பெற்று இலங்கைக்குச் சென்ற தமிழகச் செய்தியாளர் மகா தமிழ் பிரபாகரன், இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ள செய்தியை, உடனடியாகத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன்,வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப் பிள்ளை ஆகியோருடன், மகா. தமிழ் பிரபாகரன் பொன்னாவெளி என்ற கிராமத்துக்குச் சென்றார்.

அங்கிருந்து வலைப்பாடு கிராமத்துக்குச் சென்று,புனித அந்தோனியார் தேவாலயத்தின் பங்குத் தந்தையுடன் உரையாடிக் கொண்டு இருந்த போது, கடந்த 25 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணி அளவில், இலங்கை இராணுவத்தால் அவர்கள் சுற்றி வளைக்கப்பட்டனர். மூவரையும் கைது செய்த இராணுவத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனையும் பசுபதிப் பிள்ளையையும் மாலையில் விடுவித்தனர். மகா தமிழ் பிரபாகனை மட்டும் தொடர்ந்து சிறை வைத்துள்ளனர்.

செய்தியாளர்கள், உலகம் முழுமையும் பயணிப்பதற்கும் மக்களோடு கலந்து உரையாடுவதற்கும் உரிமை பெற்றவர்கள். ஆனால் இலங்கைத் தீவில், மனித உரிமைகள் நசுக்கப்பட்டு வருவதையும் செய்தியாளர்களுக்கு எவ்வித சுதந்திரமும் இல்லை; அவர்கள் உயிர் ஆபத்தை எதிர் கொண்டு இருக்கின்றனர் என்பதையும் உலகம் அறியும்.

சண்டே டைம்ஸ் ஏட்டின் ஆசிரியர் லசந்த விக்கிரம துங்க, அரசுப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்; மேலும் பல செய்தியாளர்களும் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர்.

அண்மையில் இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்ட பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இக்கூற்றை உறு திப்படுத்தி உள்ளார். எனவே மகா தமிழ் பிரபாகரனின் உயிருக்கு இலங்கை இராணு வம் மற்றும் பொலிஸ் துறையினரால் தீங்கு நேரக்கூடும் என்று அஞ்சுகிறேன்.

“ - ”

**இலங்கைத் தீவில், மனித உரிமைகள் நசுக்கப்பட்டு வருவதையும் செய்தியாளர்களுக்கு எவ்வித சுதந்திரமும் இல்லை; அவர்கள் உயிர் ஆபத்தை எதிர்கொண்டு இருக்கின்றனர் என்பதையும் உலகம் அறியும்.**

தாங்கள் உடனடியாக நமது வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் வழியாக நடவடிக்கை மேற்கொண்டு, செய்தியாளர் மகா தமிழ் பிரபா கரனை விடுவித்திட ஆவன செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன் -என்றுள்ளது. (வ)

# சந்திக்கு அருகில் நிறுத்தப்படும் ஓட்டோக்களால் நெருக்கடி

காங்கேசன்துறை வீதியின் தாவடிச் சந்தியிலிருந்து மானிப்பாய்க்குச் செல்லும் வீதியில் இரு மருங்கும் வரிசையாக ஓட்டோக்களை நிறுத்தி வைப்பதால் வாகனப் போக்குவரத்துக்குச் சிரமங்கள் ஏற்பட்டு வருவதாகக் கவலை தெரிவித்துள்ள மக்கள், இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

போக்குவரத்து விதியின்படி சந்திகளிலிருந்து குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்பது நடைமுறையாகும். ஆனால் இந்த விதிமுறையை மீறி தாவடிச் சந்தியில் ஓட்டோக்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. வலி.தெற்கு பிரதேச சபையால் "ஓட்டோக்கள் நிறுத்தப்படும் இடம்" என்ற பெயர்ப் பலகையும் அங்கு நடப்பட்டுள்ளது.

“ - ”

**பஸ் தரிப்பு நிலையத்துக்கான இடம் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் தனியார் பஸ்கள் சந்தியில் வைத்துப் பயணிகளை ஏற்றுவதிலும் இறக்குவதிலும் ஈடுபட்டு வருகின்றன**

இதேவேளை, பயணிகளின் நலன்கருதி காங்கேசன்துறை வீதியில் தாவடிச் சந்தியில் பஸ் தரிப்பு நிலையத்துக்கான இடம் ஒதுக்கப் பட்டிருந்த போதிலும் தனியார் பஸ்கள் சந்தியில் வைத்துப் பயணிகளை ஏற்றுவதிலும் இறக்குவதிலும் ஈடுபட்டு வருகின்றன. இதனால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-115)

# தருமபுரம் தபால் நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் வேண்டும்

## பொது மக்கள் அவசர கோரிக்கை

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் நிரந்தரமாகத் தபாலக கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தருமபுரம் கிராமத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த நிலையில் தருமபுரம் பகுதியில் இயங்கிவரும் உபதபாலகம் கடந்த பல ஆண்டுகளாக தனியாரின் வீடுகளிலேயே இயங்கி வருகின்றது.

1958 ஆம் ஆண்டு தருமபுரம் கிராமம் உருவாக்கப்பட்ட போதிலும் அங்கு நிரந்தரத் தபாலகத்துக்கென நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட வில்லை. தனியாருக்குச் சொந்த மான இடங்களிலேயே மாறி மாறி இயங்கி வருகின்றது.

பரந்தன் பிரதான தபாலகத்தின் கீழ் உள்ள மேற்படி உபதபால் அலுவலகத்தைத் தினமும் ஏராளமான பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் உபதபாலகம் தனியார் வீட்டில் தொடர்ந்தும் இயங்கி வருவதால் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன.

எனவே இந்தத் தபால கத்துக்கென இனியாவது ஒரு நிரந்தரக் கட்டடத்தை அமைத்து வழங்குமாறு பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# மறக்கக்கூடிய அழிவை பேரலை கொடுக்கவில்லை

## வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

ஒன்பது வருடங்கள் கடந்தாலும் ஆழிப் பேரலை இடர் இழப்புக்களை மறந்து விட முடியாது. மறக்கக்கூடிய அழிவுகளை பேரலை இடர் கொடுக்கவில்லை என்று வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்தார்.

ஆழிப் பேரலை இடரின் 9 ஆவது ஆண்டு நினைவு தினம் சங்கானை பிரதேச சபையில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

ஆழிப் பேரலை இடரால் பாதிக்கப்பட்ட மக்களை அதிலிருந்து மீட்டெடுக்க இடர் முகாமைத்துவ அமைச்சு பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது. குறிப்பாக பாண்டுவாட்டைப் பகுதி மக்களுக்கு பல உதவிகளை அந்த அமைச்சு வழங்கியுள்ளது.

தற்போது அந்தப்பகுதி மக்களின் அமை தியான வாழ்வுக்கு இடர் முகாமைத்துவ அமைச்சு முக்கியமான பங்காற்றியுள்ளது. அதே போன்று மூளாய் பகுதியிலும் குறித்த அமைச்சு பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

அனைத்து அமைச்சுக்களும் அரசியலைக் கடந்து மக்களின் நலன் குறித்து செயற்பட வேண்டும். அரசியல் அபி லாசைகளுக்காக மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்படுவது ஏற்றுக்கொள்ளப் பட முடியாதது. இந்த வகையில் ஏனைய அமைச்சுக் களும் இடர் முகாமைத்துவ அமைச்சின் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்- என்றார்.

(வ-10-21)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29 . 07. 1936

மறைவு
07. 01. 2013

அமரர்
பத்மநாதன் சிவயோகம்
(வட்டக்கச்சி மகா வித்தியாலய ஆசிரியர்)

குடும்ப குளவிளக்காய் விளங்கிய
எம் அன்புத் தெய்வமே
ஆண்டொன்றென்ன பல கடந்தாலும்
ஆறாது உம் பிரிவுத் துயர்
என்றென்றும் உம் அன்பு நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

3 ஆம் கட்டை, மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

# 40 இற்கும் மேற்பட்ட வழக்குகள் சுன்னாகத்தில்

## சட்டவிரோத சாராய விற்பனை தொடர்பில்

வலி.வடக்கு, டிசெ.28

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் கடந்த ஒரு மாத காலத்தில் சட்டவிரோதமான முறையில் சாராயம் விற்பனை செய்தமை தொடர்பாக நாற்பதுக்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று சுன்னாகம் பொலிஸ் நிலையப்பதில் பொறுப்பதிகாரி சுன்னாகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

“ - ”

**ஒரு மாத காலத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட சட்ட விரோதமான முறையில் சாரா யம் விற்பனை செய்தமை தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட் டுள்ளன**

கடந்த காலத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்பட்ட போதிலும், பொலிஸாரும் மதுவரித் திணைக்களத்தினரும் கிராம அலுவலர்களும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக அதனைக் கட்டுப்படுத்திய நிலையில் தற்போது அரச சாராயத்தை அனுமதிப்பத்திரம் இன்றி விற் பனை செய்யும் நடவடிக்கை கள் இடம்பெறத் தொடங்கியுள் ளன.

இத்தகைய சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இன்றி சாராய விற்பனையை மேற்கொள்வோர் மீது பொலிஸார் தொடர் நடவடிக்கை களை மேற்கொண்டு அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-86)

# மீண்டும் உணவு தவிர்ப்பில் பல்கலை ஒப்பந்தப் பணியாளர்

*வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாததால்*




*யாழ்.பல்கலைக்கழகப் பிரதான நுழைவாயிலுக்கு முன்பாகச் சாகும்வரை உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக ஒப்பந்தப் பணியாளர்கள் (21)*

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி இடைநிறுத்தப்பட்ட தொழிலாளர்கள் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி மீண்டும் நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ்.பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்குமுன்பாக சாகும்வரையான உணவு தவிர்ப் புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1989 ஆம் ஆண்டு சுற்றறிக்கைக்கு அமைய பல்கலைக்கழக ஊழியர்களின் பிள்ளைகளாகிய நாம் ஒப்பந்த அடிப்படையில் பல்கலைக்கழகத்தினுள் உள்வாங்கப்பட்டு பொறியியலாளரின் மேற்பார்வையில் பராமரிப்புப் பகுதியில் பணியாற்றி வந்தோம். தொழிலாளர் வெற்றிடத்துக்கான நிரந்தர ஆள்சேர்ப்பின்போது 17 பேர் கொண்ட நாம் உரிய தகைமைகளைக் கொண்டிருந்தும், ஏற்கெனவே பணியில் இருந்த நிலையில் கூட பல்கலை நிர்வாகத்தினரின் பொறுப்பற்ற செயலால்- அலட்சியத்தால் முன்னறிவித்தலின்றி இடை நிறுத்தப்பட்டோம். பதிலாக புதியவர் களை அந்தப் பதவிகளுக்கு நியமித்துள்ளனர்.

இதனையடுத்து கடந்த ஒக்ரோபர் 21 ஆம் திகதி பல்கலை வாயிலில் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தினோம்.

அதன்போது, எமது கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலிப்பதாகவும், எமது பெயர்ப் பட்டியலை உயர்கல்வி அமைச்சு, பல்கலை மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றுக்கு அனுப்பிவைப் பதாகவும், ஒக்ரோபர் மாத பேரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிப்பதாகவும் உறுமொழி வழங்கப்பட்டு, கடிதமும் தரப்பட்டது. பிரதித் தொழில் ஆணையாளர், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் முன்னிலையில் உறுதிமொழி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தோம். இந்த நிலையில் இதுவரை எந்தப் பதிலும் கிடைக்காததால் மீண்டும் சாகும்வரை உணவு தவிர்ப்பை ஆரம்பித்துள்ளோம். என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பல்கலைக்கழக பதிவாளர் வி.காண்டீபனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, உறுதிமொழியில் என்ன கூறப்பட்டுள்ளதோ அவற்றை நாம் மேற்கொண்டோம்- என்றார். (வ-4-86)

## 2 லட்சம் ஆள் பிணை; வழக்கு ஒத்திவைப்பு


வடமராட்சி,டிசெ.28

கரவெட்டி அரசடிச் சந்தியில் இடம்பெற்ற ஹன்ரர் - ஓட்டோ விபத்துச்சம்பவம்தொடர்பாக'ஹன்ரர்' வாகனச் சாரதியை இரண்டு லட்சம்ரூபாஆள்பிணையில்விடுவிக்க பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஓட்டோ சாரதி சிகிச்சை பயனளிக்காத நிலையில் சாவடைந்தார். தப்பியோடிய 'ஹன்ரர்' சாரதி நெல்லியடிப் பொலிஸில் சரண டைந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு பருத்தித்துறை பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் விசார ணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதிக்கு பிணைஅனுமதிவழங்கிவழக்கு விசாரணை பிறிதொரு திக திக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந-8)

## உடுவில் வெதுப்பகங்கள் மீது திடீர் பரிசோதனை



வலி.வடக்கு. டிசெ.28

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வெதுப்பகங்கள் மீது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையின்போது 9 வெதுப்பகங்கள் சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சுகாதாரச் சீர்கேடான முறையில் காணப்பட்ட வெதுப்பகங்களின் உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளதுடன் அங்கிருந்த பழுதடைந்த ஒரு தொகுதி பாண்களும் அழிக்கப்பட்டும் உள்ளன.

குறிப்பாக வெதுப்பகத்தில் கடமையாற்றுவோரின் சுகாதாரம் கவனிக்கப்பட்டதுடன் வெதுப்பகத்தில் நடைபெறும் உற்பத்திகள் சுகாதார முறையில் நடைபெறுகின்றனவா என்பது குறித்தும் கவனிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-86)



யாழ்.விக்ரோறியா வீதியில் பல இடங்களில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. யாழ்.போதனா வைத்தியசாலைக்குப் பின்புறமாக அமைந்துள்ள குறித்த வீதி சேதமடைந்து காணப்படுவதால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் போக்குவரத்து நெருக்கடியை அனுபவித்து வருகின்றனர். (வ-51)

## பச்சிலைப்பள்ளி 'பட்ஜெட்டில்' 22 வேலைத்திட்டங்கள்

பளை, டிசெ.28

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட பொழிப்பில் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி திட்ட வேலைத் திட்டத்துக்கு 22 வேலைத் திட்டங்களை முன்மொழிவு செய்துள்ளனர்.

போர் வேளையில் அழிவடைந்த புலோப்பளை, முகமாலைஆகியஇடங்களில்ஆயுள் வேத மருந்தகங்கள் அமைத்தல், தம்பகாமம் காட்டுப் பகுதி மலக்கழிவு அகற்றும் இடத்துக்கு மண் அணை அமைத்தலும்வீதி அமைத்தலும், புலோப்பளை கழிவு கொட்டும் இடத்துக்கு செல்லும் வீதி புனரமைத்தல்-

சேமக்காலை பண்டமாவடி இணைப்பு வீதி, புகையிரத நிலைய சமாந்தர வீதி, வண்ணான்கேணி இணைப்பு வீதி, இத்தாவில்-மொண்டுவான் இணைப்பு வீதி, பளை வைரவர் கோயில் வீதி, பெரியபளை பிரதான வீதி, கிளாலி வித்தகம் வீதி, இத்தாவில் முருகமூர்த்தி கோயில் வீதி, சோரன்பற்று அம்மன் கோயில் வீதி, சோரன்பற்று கலிவில் வீதி, மாசார் டிப்போ வீதி, மாசார் சோமசுந்தரம் வீதி ஆகியவை திருத்தம்- இயக்கச்சி உப அலுவலகப் பகுதியில் வீதி விளக்கு அமைத்தல், முள்ளிப்பற்று உப அலுவலக வளாகத்தில் பொதுநூலகம் அமைத்தல், இளந்தென்றல் ச.ச.நிலையம், உதயசூரியன் சனசமூக நிலையம், முகாவில் பாரதி சனசமூக நிலையம், கச்சார்வெளி ஔவையார் ச.ச.நிலையம் ஆகியவை அமைத்தல் ஆகியவற்றுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளதாக தலைவர் ப.டொ. அன்ரன் அறிவித்துள்ளார். (வ-9)

## உடுத்துறை சதுக்கத்தை புனித பகுதியாக பாதுகாக்குக

*வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் கோரிக்கை*

வடமராட்சி, டிசெ.28

ஆழிப்பேரலை இடரில் காவு கொள்ளப்பட்டோர் துயிலும் உடுத்துறை நினைவுச் சதுக்கத்தை புனித பகுதியாக மாற்றுவதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்க வேண்டும் என்று வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உடுத்துறை சதுக்கத்தில் ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டோருக்கான அஞ்சலி செலுத்தும்நிகழ்வுக்குதலைமை வகித்த கிராம சேவையாளர் பா.தவராசா தமது தலைமை உரையில் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சதுக்கம் புனிதமாகப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். சகல மக்களும் ஒன்றிணைந்து இந்தச் சதுக்கத்தை ஓர் ஆலயமாக்க வேண்டும்- என்றார்.

> இந்தச் சதுக்கம் புனிதமாகப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். சகல மக்களும் ஒன்றி ணைந்து இந்தச் சதுக் கத்தை ஓர் ஆலய மாக்க வேண்டும்

ஓய்வு நிலை பிரதேச செயலர் க.புத்திரசிகாமணிபேசுகையில்; காவு கொள்ளப்பட்டோரின் உறவுகள் படும் அவலம் வேதனைகள் எமக்கும் புரியும். எனது உறவினர்கள் 32 பேர் காவு கொள்ளப்பட்டு இந்தச் சதுக்கத்தில் சங்கமமாகியுள்ளனர்.

இது எனது கிராமம். பேரலையால் பரம்பரை இல்லாது போனவர்களும் உள்ளனர். இனி இப்படி ஒரு பேரவலம் வரக் கூடாது என அனைவரும் பிரார்த்திப்போம். கடற்றொழிலாளர் சங்கம் கடந்த 9 வருடங்களாக இந்த நிகழ்வை நடத்தி வருவது பாராட்டுக்குரியது-என்றார். (வ-8)

## யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

*ஜனவரி 17 இல் ஆரம்பம்*

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 5 ஆவது தடவையாக எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் பிரமாண்டமான முறையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. வழமை போன்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறைமன்றம்மற்றும்இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள், தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து இந்த வர்த்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்கின்றன. தொழில் துறை அபிவிருத்தி யில் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ள இந்தக் கண்காட்சியானது வட பகுதிக்கும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையே ஓர் இணைப்புப்பாலமாக விளங்கு வதுடன், வர்த்தக மற்றும் கைத்தொழில் தொடர்புகளைப் பலப் படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகின்றது. வழமை போன்று இந்த முறையும் 250 இற்கும் மேற் பட்ட பல்வேறு தரப்பட்ட கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையினர் கண்காட்சியில் தத்தமது உற்பத் திகள்மற்றும்சேவைகளை வழங்கவுள்ளனர்.

குறிப்பிட்டளவு எண்ணிக்கையான காட்சிக்கூடங்களே இருப்பதனால் மேற்படி கண்காட்சியில்காட்சிக்கூடங்களைஅமைக்க விரும்புவோர் இல.124, இராசாவின்தோட்டம் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்துடன் தொடர்புகொண்டு எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் தமது பதிவு களை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# குஜராத் கலவரம்: மோடிக்கு எதிரான மனு தள்ளுபடி

புதுடில்லி, டிசெ.28

குஜராத் மாநிலம் குல்பர்கா கலவரம் தொடர்பான வழக்கில் முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு எதிரான மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது நீதிமன்றம்.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்கு பாரதிய ஜனதா கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது.

2002ஆம் ஆண்டு கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்திற்குப் பின்னர் குஜராத்தின் குல்பர்க் சொசைட்டியில் நிகழ்ந்த வன்முறையின் போது காங்கிரஸ் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈசன் ஜப்ரி உட்பட 69 பேர் எரித்துக் கொல்லப்பட்டனர். அந்தச் சம்பவம் தொடர்பாக குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி உட்பட 58 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது.

அதனை விசாரிப்பதற்கு சிறப்பு விசாரணைக்கு குழு ஒன்றை அமைத்தது இந்திய உயர் நீதிமன்றம். வழக்கை விசாரித்த சிறப்பு விசாரணைக் குழு தற்போது குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி உள்ளிட்ட 58 பேரையும் குற்றமற்றவர்கள் எனக் கூறி விடுவித்தது.

அதனை எதிர்த்து ஈசன் ஜப்ரியின் மனைவி ஜாகியா ஜப்ரி




அஹமதாபாத் நடுவர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். வன்முறையில் மோடிக்கு தொடர்பு இருந்தது என்று தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். அந்த மனு மீதான விசாரணைகள் முடிவடைந்த நிலையில், அந்த மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது அஹமதாபாத் நடுவர் நீதிமன்றம்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள நரேந்திர மோடி, உண்மையே வெல்லும் என்பதை இந்தத் தீர்ப்பு உணர்த்தியுள்ளது என்று தெரிவித்துள்ளார். எனினும் நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவேன் என்று தெரிவித்துள்ள ஈசன் ஜப்ரியின் மனைவி ஜாகியா ஜப்ரி, உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ற)

# பதவியேற்பு விழாவுக்கு மெட்ரோ ரயிலில் பயணம்

## அரவிந்த் கெஜ்ரிவால் அறிவிப்பு



பதவியேற்பு விழா நடைபெறவுள்ள லீலா மைதானம்.

புதுடில்லி, டிசெ.28

இன்று புதுடில்லியில் முதலமைச்சராகப் பதவி ஏற்கவுள்ள ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால், தனது பதவி ஏற்பு விழா நடைபெறும் டில்லி ராம் லீலா மைதானத்துக்கு மெட்ரோ ரயிலில் செல்லவுள்ளேன் என்று அறிவித்துள்ளார். அதேபோன்று பதவியேற்கவுள்ள அனைத்து அமைச்சர்களும் மெட்ரோ ரயில் மூலமே பதவியேற்பு நடைபெறும் இடத்துக்குச் செல்வார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மத்திய டில்லியில் உள்ள ராம் லீலா மைதானத்தில் கெஜ்ரிவால் முதல்வராகப் பதவி ஏற்பதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

தமக்கு பாதுகாப்பு எதுவும் தேவையில்லை என்று அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்திருந்த போதும், டில்லி பொலிஸார் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். (ற)

# தி.மு.க.-காங். கூட்டணி கற்பனையிலும் இல்லை

## மு.க.ஸ்டாலின் திட்டவட்டம்

நாகர்கோவில், டிசெ.28

தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணி மீண்டும் மலரும் என்று கற்பனை கூடச் செய்ய வேண்டாம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியல் கட்சிகளில் இருப்பவர்களின் பிறந்த தினத்தின் போது ஒருவருக்கு ஒருவர் வாழ்த்து தெரிவிப்பதும் நேரில் சென்று வாழ்த்துவதும் அரசியல் பண்பாடு. அப்படித் தான் அன்புமணி ராமதாஸை சந்தித்தேன். அதனை கூட்டணிக்கான அச்சாரமாக கருதக் கூடாது.

தே.மு.தி.க.வுடன் கூட்டணி அமைக்கப்படுமா என்பதையும் நான் இப்போது தெரிவிக்க முடியாது. தேர்தல் நெருங்கி வரும்போது தான் எந்த கட்சியுடன் கூட்டணி அமைக்கப்படும் என்பது முடிவு செய்ய முடியும்.

தி.மு.க.வை பொறுத்த வரை, கட்சியின் பொதுக்குழுவும், கருணாநிதியும் கூட்டணியை முடிவு செய்வார்கள். அதனால் நான் இப்போது எதையும் சொல்ல முடியாது. அதேநேரத்தில் தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணி மீண்டும் மலரும் என்று கற்பனை செய்ய வேண்டாம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஆந்திராவை பிரிப்பதை எதிர்த்து மனு

புதுடில்லி, டிசெ.28

ஆந்திராவை இரண்டாகப் பிரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியினர் இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்து மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி நேற்று ஹைதராபாத்துக்குச் சென்றிருந்தார். அங்கு அவரைச் சந்தித்த வை.எஸ்.ஆர். காங் கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான குழுவினர் ஆந்திராவை இரண்டாகப் பிரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மனுவொன்றைக் கையளித்தனர். (ற)

## கூடங்குளத்தின் மின் உற்பத்தி நிறுத்தம்

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ள தாக அறிவிக் கப்பட்டுள்ளது.

பலத்த எதிர்ப்பின் மத்தியில் நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் அணுமின் நிலை யம் தொடங்கப்பட்டு, அண்மை யில் மின் உற்பத்தியும் மேற்கொள் ளப்பட்டது. தற்போது 445 மெகாவோற்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருவ தாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அணுமின் நிலையத்தில் இரண்டு நாள் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளதால் இதனால் இன்று மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள் ளதாகவும், இரண்டு நாள் ஆய் வுக்கு பின் மீண்டும் மின் உற் பத்தி ஆரம்பிக்கப்படும் என வும் அணுமின் நிலையம் சார் பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## அமெ.கப்பல் பணியாளர் 35 பேருக்கு பிணை

சென்னை, டிசெ.28

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அமெரிக்கப் பலின் மாலுமி உட்படப் பணியாளர்கள் 35 பேருக்கும் நிபந்தனை பிணை வழங்கியுள்ளது நீதிமன்றம். அதையடுத்து புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பிணைத் தொகையாக 10 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும், தூத்துக்குடி க்யூ பிரிவு அலு வலகத்தில் தினந்தோறும் கையெழுத்திட வேண் டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் 35 பேருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் கைது செய்யப்பட்டு 60 நாள்கள் கடந்த நிலை யிலும் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாததை அடுத்தே நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. (ற)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
தனபாலசிங்கம் தர்மினி
மாவட்ட நிலை 2
தேசிய நிலை 87
எமது நிறுவனத்தில் கல்விகற்ற இ.தர்மினி
க.பொ.த் உயர்தரப் பரீட்சையில்
கலைப்பிரிவில் 3A சித்தியைப் பெற்றமையினை இட்டு
மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.
ஆசிரியர்கள்; மாணவர்கள்.
S.E.C பளை.




**சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)**

**பாரவூர்தி விற்பனைக்கான கூறுவிலை கோரல்**

எமது சங்கத்துக்குச் சொந்தமான 48 - 1105 இலக்க அசோக் லேடன் பாரவூர்தி விற்பனை செய்யப்படவுள்ளது. இப்பாரவூர்தியைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கூறுவிலைகளை 20.01.2014 ஆம் திகதிக்கு முன்னதாகப் பொதுமுகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி எனும் முகவரிக்குக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கூறுவிலை கோரல் பாரவூர்தி விற்பனை'' எனக் குறிப்பிட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(சி/7620)(6.2.3)

குறிப்பு:

01. பாரவூர்தியின் செயற்பாடு, தன்மையினை காரியாலய நேரத்தில் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.
02. கூறுவிலை திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம். பொதுமுகாமையாளர்.

**வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம்**

**வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2014**

எமது சபையானது 2014ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவுசெய்ய விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

01. கணினி, பிரதியாக்கல் இயந்திரதிருத்தமும் சுத்திகரிப்பும்
02. வாகனங்களுக்கு ரீயூப் ஒட்டுதல்
03. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்தம்
04. நீர்த்தாங்கி திருத்தம்

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 03.01.2014 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(சி/10806)(6.2.3)

திருமதி நா.ஐங்கரன், தவிசாளர்,
வலிகாமம் மேற்குபிரதேசசபை, சுழிபுரம்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

நல்லூர்
சரவணா ரெக்ஸ்
Saravana Tex
770, கே.கே.எஸ்.வீதி (தட்டாதெருச் சந்தி)
யாழ்ப்பாணம்.

புதுவருடம், தைப்பொங்கலை முன்னிட்டு மாபெரும்
பிரமிக்க வைக்கும் விசேட விலைக்
கழிவும் பெறுமதிமிக்க
அன்பளிப்புக்களும்
இன்றே முந்துங்கள்

05
அதிர்ஷ்டசாலிகளுக்கு
மடிக்கணினிகள்
(Laptop)

| | | |
|---|---|---|
| ஆண்களுக்கான கொட்டன் சேட் (Modern Shirt) | 1650/= | 800/= |
| ஆண்களுக்கான T.சேட் | 1200/= | 700 |
| சிறுவர்களுக்கான T.சேட் | 900/= | 450/= |
| ஆண்களுக்கான ரவுசர் ரெடிமேற் சோக்கோ | 2400/= | 1650/= |
| ஆண்களுக்கான (Wedding சேட்) | 1600/= | 900/= |
| கொட்டன் பஞ்சாபி துணிகள் | 1450/= | 850/= |



யார் அந்த 05 அதிர்ஷ்டசாலிகள்

மற்றும் சில்க் சாறிகள், கொட்டன் சாறிகள்,
பன்சி சாறிகள், பட்டு சாறிகள், சீக்குன்ஸ் சாறிகள்
மற்றும் றெடிமேற் சல்வார்கள், ரொப் வகைகள்
எனப் பல டிசைன்களில் புதுப் புது தெரிவுகள்



(C/10805)(2.6.3)

3000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளரே
குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்படுவர்

# தென்சூடான் விரைகின்றனர் ஆபிரிக்கத் தலைவர்கள்

## அமைதியை ஏற்படுத்துவதற்குப் பகீரதப் பிரயத்தனம்

ஜூமா, டிசெ.28

தென்சூடானில் உள்நாட்டுப் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளதை அடுத்து அங்கு அமைதியை ஏற்படுத்தும் முயற்சியாக ஆபிரிக்கத் தலைவர்கள் அந்த நாட்டுக்கு விரைந்துள்ளனர்.

கடந்த வாரம் அந்த நாட்டின் முன்னாள் துணை ஜனாதிபதி ரீக் மச்சரால் தூண்டிவிடப்பட்ட அரசு எதிர்ப்புப் போராட்டம் தற்போது தீவிரமடைந்துள்ளது. அதனை முறியடிக்க அந்த நாட்டின் ஜனாதிபதி சல்வார் கிர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காத நிலையில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் படையினர் உதவிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் மோதல்கள் தீவிரமடைந்து வருகின்றனவே தவிர குறைவடைவதாகத் தெரியவில்லை. "முன்னாள் துணை ஜனாதிபதி சதி முயற்சியின் மூலம் வன்முறையைத் தூண்டிவிட்டு நாட்டை அழிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றார்" என்று ஜனாதிபதி சல்வார் கிர் குற்றம் சாட்டியுள்ளார்.

இருதலைவர்களுக்கும் இடையே பேச்சுக்களை நடத்தி சமரசத்தை ஏற்படும் முயற்சியாக ஆபிரிக்கத் தலைவர்கள் தென்சூடான் விரைந்துள்ளனர். கென்யாவின் ஜனாதிபதி உரு கென்யாட்டாவும், எதியோப்பியாவின் பிரதமர் ஹைறலே மரியம் டஸ்லெகனும் ஜனாதிபதி சல்வார் கிர்ரை நேற்றுச் சந்தித்து ஆலோசனைகளை மேற்கொண்டனர்.

ரீக் மச்சர் தனது கிளர்ச்சியைக் கைவிட்டால் மட்டுமே அரசு அவருடன் பேச்சுக்களில் ஈடுபடும் என்று மூத்த அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். முன்னாள் துணை ஜனாதிபதி ரீக் மச்சருடன் தங்களது அரசு இன்னமும் முறையாகத் தொடர்பு கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுள்ள தகவல் தொடர்பு அமைச்சரான மைக்கேல் மக்யுயி லியுத் "மச்சாின் தொலைபேசி எண்கள் அனைத்தும் செயலிழந்துள்ளன. அவருடன் பேசும் எண்ணம் தற்போது இல்லை" என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எண்ணெய் வளம் மிக்க பகுதிகளான யூனிட்டி மற்றும் அப்பர் நைல் ஸ்டேட் பகுதிகளில் உள்ள நகரங்களிலிருந்து புரட்சியாளர்களை விரட்டும் முயற்சியில் அரசு தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. ஏனெனில் இங்கு தொடரும் வன்முறைகளும், அமைதியின்மையும் நாட்டின் உயிர் நாடியான பொருளாதார வளத்தைப் பாதித்து விடக்கூடும் என்ற அச்சம் அரசுக்குத் தோன்றியுள்ளதே இதற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்று கூறப்படுகின்றது. (ற)



## தாய்லாந்தில் தொடர்கிறது அரச எதிர்ப்புப் போராட்டம்

### வன்முறைகளில் பொலிஸார் சாவு

பாங்ஹொக், டிச.28

தாய்லாந்தில் பிரமருக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன. நேற்று இடம்பெற்ற வன்முறைகளில் பொலிஸார் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தாய்லாந்துப் பிரதமர் யங்லக் ஷினவற்ரா பதவி விலக வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றன. எனினும் பதவி விலக மறுக்கும் யங்லக், போராட்டங்களை அடக்கும் முயற்சிகளை முடுக்கிவிட்டுள்ளார்.

நேற்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. அதில் ஒரு பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. சிகிச்சை பயனின்றி அவர் மருத்துவமனையில் உயிரிழந்தார். அதையடுத்து போராட்டங்களை அடக்கும் நடவடிக்கைக்கு பெரும் எண்ணிக்கையான பொலிஸார் களமிறக்கப்பட்டுள்ளனர். அதனால் அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (ற)

## பின்லேடனின் மருமகனது குடியரிமை இரத்து

குவைத் சிட்டி, டிசெ.28

அல்குவைதா இயக்கத்தின் முன்னாள் தலைவர் ஓசாமா பின்லேடனின் மருமகனுடைய குடியரிமையை இரத்துச் செய்துள்ளது குவைத்.

பின்லேடனின் மருமகனான சுலைமான் அபு காயித் அல்குவைதா அமைப்பின் செய்தித் தொடர்பாளராகப் பணியாற்றி வந்தார். அவருக்கு குவைத் அரசு குடியுரிமை வழங்கியிருந்தது.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி உலக வர்த்தக மையத்தின் மீது அல்-குவைதா அமைப்பு தாக்குதல் நடத்திய பின்னர் சுலைமானின் குடியுரிமையை இரத்துச் செய்தது குவைத்.

அதை எதிர்த்து சுலைமான் வழக்குத் தொடர்ந்திருந்திருந்தார். எனினும் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்துள்ள குவைத் நீதிமன்றம், சுலைமானுக்கு எச்சந்தர்ப்பதிலும் குடியுரிமை வழங்க முடியாது என்று தீர்ப்பளித்துள்ளது. (ற)

## அரபாத்தின் சாவு இயற்கையானது

### உறுதியாகக் கூறுகின்றது ரஷ்யா

மொஸ்கோ, டிசெ.28

பலஸ்தீனத்தின் முன்னாள் ஜனாதிபதி யசீர் அரபாத்தின் சாவு இயற்கையானது என்று உறுதியாகத் தெரிவித்துள்ளது ரஷ்யா.



பலஸ்தீனத்தின் முன்னாள் தலைவர் யசீர் அரபாத் 2004ஆம் ஆண்டு பாரிஸில் உயிரிழந்தார்.

அவரின் சாவில் மர்மம் உள்ளது என்றும், அவரை விஷம் கொடுத்துக் கொன்றிருக்கக் கூடும் என்றும் பல்வேறு யூகங்கள் வெளியாகிய வண்ணம் இருந்தன. அதையடுத்து அவரது உடல் உறுப்புகளைச் சேகரித்து பல்வேறு நாட்டு நிபுணர்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அவ்வாறு ஆய்வு மேற்கொண்ட பிரான்ஸ் நாட்டின் நிபுணர் குழு, அரபாத்தின் உடலில் கதிரிக்கத்தின் தாக்கம் காணப்படுகின்றது என்றும், அவரது உடலுக்குள் கதிரிக்கதுடன் கூடிய விஷம் செலுத்தப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிட்டிருந்தது. எனினும் ஆய்வுகளை மேற்கொண்டிருந்த சுவிஸ் நிபுணர் குழுவோ அரபாத்தின் உடலில் எந்த வகை நச்சுப் பதார்த்தங்களும் இருக்கவில்லை என்று கூறியிருந்தது.

இந்தநிலையில், ஆய்வுகளை மேற்கொண்டிருந்த ரஷ்ய நிபுணர் குழுவினர் தற்போது தமது முடிவுகளை அறிவித்துள்ளனர்.

"யசீர் அரபாத்தின் உடலில் எந்தவித நச்சுப் பொருள்களும் இருக்கவில்லை. அவரது சாவு இயற்கையானதே" என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை, யசீர் அரபாத்தின் சாவுக்கு ரஷ்யாவே காரணம் என்று பலஸ்தீனியர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். (ற)

## இந்தியாவுடன் பேசத் தயார்

### பாக்.தகவல்துறை அமைச்சர் கூறுகின்றார்

இஸ்லாமாபாத், டிசெ.28

இந்தியாவுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் தயாராக உள்ளது என்று அந்த நாட்டின் தகவல் துறைஅமைச்ச்ர் பர்வேஷ் ரஷீத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"இரு நாட்டு இராணுவ அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இரு நாட்டு எல்லையிலும் அமைதியை உருவாக்க இது முதல் படியாக அமைந்தது. காஷ்மீர் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் உட்பட இரு தரப்பு வர்த்தகம் குறித்தும் பேசுவதற்கு பாகிஸ்தான் தயாராக உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.(ற)


## தாய்லாந்தில் பஸ் விபத்து: 29 பேர் சாவு

பாங்ஹொக், டிசெ.28

தாய்லாந்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் 29 பேர் உயிரிழந்துள்ளர். 4 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

40 பயணிகளுடன் பயணித்த அந்த பஸ், பெட்சபுன் என்ற பகுதியில் 30 மீற்றர் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான பஸ் முற்றிலும் உருக்குலைந்து விட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

"வேகமாகச் சென்ற பஸ் பள்ளத்தில் பாய்ந்தது என்று சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் எமக் குத் தகவல் தெரிவித்தார். நாம் அங்கு சென்றபோது 30 மீற் றர் பள்ளத்தில் பஸ் உருக்குலைந்து கிடந்தது. அதிலிருந்து 29 உடல்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன" என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)



அந்தாட்டிக்கா கடலில் பயணம் செய்துகொண்டிருந்த சொகுசுக் கப்பல் ஒன்று பனிக்கட்டிகளுக்குள் சிக்குண்டுள்ளது. ரஷ்யாவில் கட்டப்பட்ட ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த இந்த சொகுசுக் கப்பலில் 50 பயணிகளும், 20 பணியாளர்களும் பயணித்திருந்தனர். அந்தாட்டிக்கா கடற்பரப்பில் பயணித்தபோது அந்தப் பகுதி நீர் முழுவதும் பனிக்கட்டியாக உறைந்ததால் பனிக் கட்டிகளுக்கு நடுவே கப்பல் சிக்கிக் கொண்டுள்ளது. கப்பலை மீட்கும் நடவடிக்கைகளை குறித்த கப்பல் நிறுவனம் முடுக்கி விட்டுள்ளது. அந்தப்பகுதிக்கு பனிக்கட்டிகளை உடைக்கும் இரு கப்பல்கள் விரைகின்றன என்று

# ராஜபக்ஷ அரசின் தேவைகளையே பொலிஸார் நிறைவேற்றுகின்றனர்

## நாட்டில் ஜனநாயகமே இல்லை என்கிறது அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றியம்



கொழும்பு,டிசெ.28

இலங்கையில் ஜனநாயகத்துக்கு இடமே இல்லை. ராஜபக்ஷவின் ஆட்சிக்குத் தேவையான வரையறுக்கப்பட்ட சட்டமே நாட்டில் செயற்படுத்தப்படுகின்றது. பொலிஸார், ராஜபக்ஷ அரசின் தேவைகளையே நிறைவேற்றி வருகின்றனர்.

இவ்வாறு அனைத்துப் பல்லைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஜனநாயகமும் சட்டமும் ராஜபக்ஷ நிர்வா கத்தின் கட்டளையின்படியே செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

தமக்கு ஏற்படும் அநீதிகளுக்கு எதிராக எதிர்ப்பை வெளியிட நாட்டில் வாழும் சகல பிரஜைகளுக்கும் உரிமையுள்ளது.

நாட்டில் ஜனநாயகம் செயற்பாட்டில் உள்ளதென்றால் அநீதிக்கு எதிராக எதிர்ப்புகளை வெளிக் காட்ட சந்தர்ப்பம் இருக்க வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்கள் தமக்கு ஏற்படும் ஏதோ அநீதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினால் அது மக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துகிறது என்றும், அது சட்டவிரோதமான நடவடிக்கை என்றும் ராஜபக்ஷ அரசு கூறுகின்றது. ஆனால், இந்த அரசுக்கு ஆதரவாகப் பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அதற்கு எதிராக சட்டம் செயற்படுத்தப் படவில்லை.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்போது குற்றத் தடுப்பு பிரிவினரோ அல்லது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளோ தலையிடுவதில்லை.

ஜனாதிபதியின் மகன் கார்ப் பந்தயம் நடத்த கொழும்பில் வீதிகள் மூடப்பட்டன.

பொதுநலவாய மாநாடு நடைபெற்றபோது அநுராதபுரத்தில் சனல் - 4 ஊடகவியலாளர்கள் சென்ற ரயிலை நிறுத்தி ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டது.

இவ் வாறான செயற்பாடுகளின்போது மக்களுக்கு இடையூறுகள் ஏற்படாதா? - என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ஒ-சி)

# தேவாலயம் அமைப்பதை எதிர்த்துப் போராட்டம்

கொழும்பு,டிசெ.28

மொனறாகலை - வெல்லவாய பகுதியில் உள்ள ஆனைப் பள்ளம் பிரதேச மக்கள், கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்தப் பகுதியில் உள்ள சுதர் சனாராம விகாரை வளாகத்தில் இந்த தேவாலயம் நிர்மாணிக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பௌத்த மக்கள் செறிந்து வாழ்கின்ற பகுதியில் இவ்வாறு கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த பகுதியில் ஒரேஒரு இந்துக் குடும்பம் மாத்திரமே இருப்பதாகவும், ஏனையவர்கள் பௌத்தர்கள் என்றும், இதனால் அங்கு கிறிஸ்தவ தேவா லயம் ஒன்று அமைக்க வேண்டிய தில்லை என்றும் அந்த மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், இது தொடர்பில் குறித்த தேவாலயத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்துள்ள பாதிரியாரை தொடர்பு கொண்டு கேட்ட போது, உரிய அனுமதியுடனேயே இதனைத் தாம் நிர்மாணிப்பதாக தெரிவித்தார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி பரமானந்தன் சாயா

கோப்பாய் அஞ்சல் அலுவலகத்தில் இதுவரைகாலமும் தரம் II அஞ்சல் அதிபராக கடமையாற்றி தற்போது **தரம் I அஞ்சல்** அதிபராக பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, அஞ்சல் சமூகத்தினராகிய நாம் அவரைப் பாராட்டிவாழ்த்துகின்றோம்.




கோப்பாய் அஞ்சல் அதிபர்களும், சக ஊழியர்களும்,
அச்செழு, கோப்பாய் வடக்கு, நீர்வேலி, சிறுப்பிட்டி
உபதபால் அதிபர்களும், சக ஊழியர்களும்!
(41704)(3.6.4)

## ஆண்டு இறுதி இருப்பு அகற்றும் சிறப்பு விற்பனை

**காலம் : 2013 டிசெம்பர் 28, 29, 30, 31**
**நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை**
**இடம் : 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
*(கனடா ஜெயசாஜி சுப்பர் சென்ரர் முன்றிலில்)*

ஆண், பெண், சிறியோர், பெரியோர் ஆகிய அனைவருக்கும் ஏற்ற அனைத்து ஆடைகளும்!!!
(41694) (7.6.3)

## கார் விற்பனைக்கு

10 - XXXX இலக்கமுடைய மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 5787 (41723)(2.6.3)

## வீடு வாடகைக்கு

வவுனியா A9 வீதிக்கு அண்மையில் உள்ள சாந்தசோலை வீட்டுத் திட்டத்தில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 494 3816 (43365)(7.6.3)

## School Service

அளவெட்டி, அம்பனை, மாகியப்பிட்டி ஊடாக சுன்னாகம், யாழ்ப்பாணத்திற்கு பாடசாலை சேவை வாகன ஒழுங்கு. (42929) (7.6.3)
அழையுங்கள் : கோபி 077 967 3395

## மணமக்கள் தேவை

★83 இல் பிறந்த 12 இல்சூரியனும் செவ்வாயும் 8¾ பாவமுடைய சுவிஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
★81 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 5½ பாவமுடைய லண்டனில் எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
★83 இல் பிறந்த 39½ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற விவாகரத்துப் பெற்ற எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகளுக்கு லண்டனில் மணமகன் தேவை.
தொடர்பு: நாலிங்கன்னன் திருமண சேவை
இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.
T.P:077 607 0862 (41722)(4.6.3)

## வேலையாள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு - கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் தேவை. தங்குமிட வசதியும் மூன்று நேர உணவும் வழங்கப்படும். ஆரம்ப வேதனம் ரூபா 10.000 இல் இருந்து வழங்கப்படும். ஆண்கள் மட்டும். வயது 18 - 22 வரை. (41717) (2.6.3)
தொடர்பு: 11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**T.P. 021 222 3857**

## பெண் உதவியாளர் தேவை

இங்கிலாந்து பிரஜாவுரிமை பெற்ற இலங்கைத் தமிழ்க் குடும்பத்தினரின் மகளின் (வயது 13) படிப்பிற்காக இந்தியாவில் தங்கியிருக்கும் காலப்பகுதிக்கு மட்டும் உதவக்கூடிய பெண் உதவியாளர் தேவை. போக்குவரத்து உட்பட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
**077 315 0497**
**Dr.S.Thivakaran**
(41705)(2.6.3)

## HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE

## வயோதிபரை பராமரிக்கும் தாதிய பயிற்சிநெறி

**பயிற்சிநெறிக் காலம் : 9 மாதங்கள்**
**ஆரம்பம்: தை மாதம் 2014**

**க.பொ.த.சாதாரண தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களைத் திருச்சிலுவை சுக நிலையம், இல.767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குச் சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும். முதலில் விண்ணப்பிக்கும் ஐவருக்குச் சலுகைகள் வழங்கப்படும்.**

**- பணிப்பாளர்.**

தொ.பே.:- (41714 )(6.2.3)
021 300 1102, 077 427 0120

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

## யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்

விவசாயப்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது. பதிவிலக்கம் TVEC p25/0026

- புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய செய்முறை ஊடான பயிற்சி
- க.பொ.த (சாதாரணம்/உயர்) தரம் கற்ற அனைத்துப்பிரிவு மாணவர்களுக்கும்
- 17-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாருக்குமான இலவச பயிற்சி நெறி
- பயிற்சி பெறும் காலத்தில் உதவு தொகை வழங்கப்படும்.
- நூலக வசதிகளை உள்ளடக்கியது.
- உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புக்களைப் பெறவும் சுயதொழில் வாய்ப்புக்களைப் பெறவும் ஏற்ற பயிற்சி நெறி.

விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி
விவசாய மூலதத்துவம், பயிர் வேளாண்மை, விலங்கு வேளாண்மை, பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல், உணவுத் தொழில்நுட்பம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய ஒரு வருட கால பயிற்சி நெறி.

விவசாய சான்றிதழ் பயிற்சி நெறி
விவசாய மூலதத்துவம், பயிரியல், விலங்குவேளாண்மை, பூங்கனியியல் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய 4 மாத பயிற்சி நெறி.

டிப்ளோமா பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 06.01.2014இலும் சான்றிதழ் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 07.01.2014 இலும் காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெற இருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமூகமளிக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு:
அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம். (41716) (7.6.3)

## Green Grass Mega Blast Dancing & Musical Show



யாழ்.மண்ணில் முதன் முறையாக இலங்கையில் புகழ்பெற்ற அழகு நடன மங்கையான
“Shashila Perera” உடன் இன்னும் பல நடன தாரகைகள்,
கலந்து சிறப்பிக்கும் மாபெரும் நடன நிகழ்ச்சியும்
சாரங்கா இசைக்குழுவின் இன்னிசை நிகழ்ச்சியும்
இன்று 28 ஆம் திகதி சனிக்கிழமை
மாலை 7.00மணியளவில் Green Grass
சங்கிலியன் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

Free Dinner Buffet & BBQ



இன்று மாலை

**021 222 4385, 077 780 3210**

# டெங்கு நோயைத் தவிர்ப்பதற்கு சுற்றாடலின் தூய்மைக்கு வேண்டுகோள்

கிளிநொச்சி, டிசெ.28

மழைகாலம் என்பதால் டெங்கு நோய் பரவக் கூடிய சாத்தியம் அதிகரித்துள்ளது. இதனால் சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருக்கும் வகையில் மக்கள் விழிப்புண ர்வுஉள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு விழிப்புணர்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்;

பாடசாலைகளின் விடுமுறைக் காலம் என்பதால் வெளியிடங்களைச் சேர்ந்த மக்கள் கிளிநொச்சிக்கு வருகை தருகின்றனர். இதன் காரணமாகவும், மழைக் காலம் என்பதாலும் கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு பரவக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

கடந்த காலங்களிலும் டெங்கு நோயாளர்கள் பலர் இனம் காணப்பட்டனர். ஆனால்டெங்கு தொடர்பான விழிப்புணர்வு மக்களிடையே போதிய அளவில் காணப்படவில்லையென சுகாதாரத் திணைக்களத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

டெங்கு பரவக்கூடிய இடங்களையும் சூழலையும் சுத்தமாகபேண வேண்டும். டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்கள் பிரதேச செயலகங்களில் அமைக்கப்பட்டு டெங்கைக் கட்டுப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இதற்கென சிரமதானப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, பஸ்களில் பயணிக்கும் மக்கள் தேவையற்ற பொருள்கள், பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்கள் ஆகியவற்றை பாதை ஓரங்களில் வீசி விட்டுச் செல்வதாலும் டெங்கு பரவக் கூடிய நிலை உருவாக்கப் படுவதாகவும் தெரிவித்தார்.

(க-18)


"_"

பாடசாலைகளின் விடுமுறைக் காலம் என்பதால் வெளியிடங் களைச் சேர்ந்த மக்கள் கிளிநொச்சிக்கு வருகை தருகின்றனர். இதன் காரணமாகவும் மழைக் காலம் என்பதாலும் அங்கு டெங்கு பரவக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

*கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் அறிவுரை*

## வன்முறைச் சம்பவங்களுக்கு முக்கிய காரணம் கசிப்பே

*கிளிநொச்சி பொலிஸார் தெரிவிப்பு*



அக்கராயன், டிசெ.28

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் கசிப்பு உற்பத்தி மற்றும் பாவனை முன்னிலை வகிப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கிளிநொச்சி அரச செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே பொலிஸாரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

பெண்களே கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாகவும், இதன் காரணமாகவே குடும்ப வன்முறைகள் அதிகளவில் இடம்பெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கு கசிப்பு பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் நடமாடும் வியாபாரம் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபடும் குடும்பங்கள் வறுமை காரணமாகவே இதில் ஈடுபடுவதாகத் தெரிவிப்பதாகவும் பொலிஸார் கூறுகின்றனர். (க-18)

# இணையத்தள நிலையங்களில் திறந்த அமைப்புகளைப் பேணுக

*வவுனியா பெற்றோர் கோரிக்கை*

வவுனியா, டிசெ.28

மாணவர்களின் நலன்கருதி இணையத்தளப் பாவனை நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள கூடுகளைத் திறந்த நிலையில் வைத்திருக்குமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலைகள் ஆகியவற்றை அண்மித்த பகுதிகளில்இணையத்தளபாவனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள் அமைக்கப்பட்டுள்ள சில கூடுகள் இருபுறமும் மூடிய நிலையில் காணப்படுகின்றன. இதனால் கலாசார சீரழிவுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அண்மையில் சில மாணவர்கள் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டும் இத்தகைய கூடுகளைத் திறந்த நிலையில் வைத்திருக்குமாறு வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் அறிவுறுத்தல் வழங்கியிருந்தனர். இதனையடுத்து சில நிலையங்களில் அமைக்கப்பட்டிருந்த கூடுகள் திறந்த நிலையில் வைக்கப்பட்டன. ஆனால் வேறு சில நிலையங்களில் அவை இன்னமும் மூடிய நிலையிலேயே இந்தக் கூடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையங்களுக்கு தற்போது மாண வர்கள் அதிகளவு செல்வதையும் காண முடிகின்றது.

இணையத்தளப் பாவனை கற்றல் நடவடிக்கைக்கு உதவுமாயின் அதனை மாணவர்கள் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால் கலாசாரத்தைச் சீரழிக்கும் படங்களை இரகசியமாகப் பார்ப்பதற்கு இவை உதவுமாயின் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே இந்த நிலையங்கள் மாணவர்களின் நலனைக் கவனத்தில் கொண்டு கூடுகளைத் திறந்த நிலையில் வைத்திருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

"_"

கலாசாரத்தைச் சீரழிக்கும் படங்களை இரகசிய மாகப் பார்ப்பதற்கு இவை உதவு மாயின் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

## கரைச்சிப் பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வுச் செயற்பாடு

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வுச் செயற்பாடு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்தநிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசனும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட உதவி அரச அதிபர் திருமதி ப.ஜெயதாரணி, கிளிநொச்சியி லுள்ள யு.என்.எச்.சி.ஆர்.தலைமை அதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

மீள்குடியமர்வின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில் மாவட்டச்செயலகம்,பிரதேசசெயலகங்கள் ஆகியன விழிப்புணர்வுச் செயற்பாடுகளைமுன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## பிரதான வீதியில் மேம்பாலம் அமைக்கவும்

*வவுனியா மக்கள் கோரிக்கை*

வவுனியா, டிசெ.28

வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள பிரதான வீதியில் மேம்பாலம் ஒன்றை அமைக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாநகரில் அமைந்துள்ள பல்வேறு வீதிகளிலும் தற்போது போக்குவரத்துநெருக் கடி காணப்படுகின்றது. இத னால் அரச அலுவலர்கள், வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள், மருத்துவ மனைக்குச் செல்வோர் எனப் பலரும் இடர்களை எதிர்கொண்டுவருகின்றனர். மேலும் மஞ்சள் நிறக் கோட்டைக் கடப்பதற்கும் நீண்ட நேரம் காத்திருக்க நேர்வதாக வும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பெரும் எண்ணிக்கையில் பயணிகள் மஞ்சள் கோடுகளைக் கடப்பதற்கு நீண்ட நேரம் எடுப்பதால் வீதிகளில் பெருமளவான வாகனாங்கள் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டு வருகிறது. இதேவேளை கடமையில் நிற்கும் பொலிஸாருக்கும் சிரமங்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கண்டி வீதியில் மேம்பாலம் ஒன்று அமைக்கப்படுவதன் மூலமாக இந்தப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க முடியும் எனப் பலரும் தெரிவித்துள்ளனர். (க-402)

# குழு மோதலில் ஈடுபட்டோர் பிணையில் செல்ல அனுமதி

முல்லைத்தீவு, டிசெ.28

முல்லைத்தீவில் இரு கட்சியினரிடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்கள் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவு வண்ணான் குளத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவாலயத்துக்குக்கருகில் கடந்த 25 ஆம் திகதி இரவு வடமாகாண சபை பிரதித் தவிசாளர் அன்ரனி ஜெகநாதனின் மகனும் அவரது நண்பர்களும் மறுநாள் இடம்பெறவிருந்த சுனாமி நிறைவுநாள் தொடர்பான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பாகப் போட்டியிட்ட அருள் ஜெனிபட் என்பவர் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும் இதில் பிரதித் தவிசாளரின் மகனுக்குக் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் இது தொடர்பாக பிரதித்தவிசாளர் அந்த இடத்துக்குச் சென்று விசாரித்தபோது அவரும் தாக்குதலுக்கு ஆளானதாகவும் காயமடைந்த இருவரும் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு பதிவு செய்ய முயன்றபோது பொலிஸார் அதனை ஏற்க மறுத்ததாகவும் தெரியவருகின்றது.

இதன் பின்னரும் இரண்டு குழுக்களும் மோதிக் கொண்டதில் அருள் ஜெனிபட், அவரது மகன் உட்பட மேலும் மூவர் காயமடைந்தனர். இதன் பின்னர் முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட பிரதித் தவிசாளர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். காயமடைந்த ஏனையவர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு நீதிமன்ற பதில் நீதிவான் அ.பரஞ்சோதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று பார்வையிட்டதுடன் அனைவரையும் சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார். அத்துடன் பிணையில் விடுவிக்கப்பட்டவர்களை எதிர்வரும் 7 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் அவர் உத்தரவிட்டார்.

(க-433)

## நெஞ்சை விட்டகலா நினைவுகளில் முதலாம் ஆண்டு நினைவு

அமரர்

**யுவக்கீன்பிள்ளை செபமாலை இராசா**



உயிர்ப்பு 11.11.1922

இறப்பு 28.12.2012



ஊர் உலகம் போற்ற வாழ்ந்தீர்கள்
உறவுகள் மகிழ்ந்திட நடந்தீர்கள்
பிள்ளைகள் உயர்ந்திட உழைத்தீர்கள்
இறுதியில் கண்ணீரில் நனையவிட்டு சென்றீர்கள்
உலகில் நாம் உருவாக உறுதுணையாய்
இருந்த எம் தந்தையே! வாழ்க்கை யாதெனக் கேட்டபோது
வாழ்ந்து பாருங்கள் எனப் பணித்தாய்.
வாழ்வில் நாம் நல்ல நிலையினை அடையும் பொழுது.
அதனைப் பார்த்து வாழ்த்தி நீ சென்றுவிட்டாய்
ஊர் போற்றும் ராசாவின் பிள்ளைகளாய் பெருமையுடன்
வாழ்ந்த நாம் பொலிவிழந்து ஒளியிழந்து ஆளுக்கொரு நாடாக
ஆயனை இழந்த மந்தைகளாக ஆங்காங்கே
வெவ்வேறு நாடுகளில் இருந்து. கண்ணீரும்
கவலையுடனும் பப்பா என்ற அன்புள்ளத்தைத் தேடுகின்றோம்
உறங்காத ஈர் ஏழு விழிகள் இங்கே வழிந்தோடும் கண்ணீரோடு.
வாழ்வில் கடந்து வந்த பாதைகளில்.
நீர் தந்த வண்ண வண்ண நினைவுகளுடன்.
ஓர் ஆண்டைக் கடந்துவிட்ட விந்தைதனை எண்ணி எண்ணி.
வாய்பேச வார்த்தைகள் எதுவுமின்றி. வாயடைத்துப் போய் நின்று.
கண்ணீரால் கவலையினைத் தீர்க்கின்றோம்.
பப்பா உம்மில் மகிழ்ந்த மருமக்களும்
உம்மை அறிந்த பேரமாரும், பூட்டமாரும்
அறியாத பேரமாரும் பூட்டமாரும்
உமது இனிய இவ்வுலக வாழ்வின் சுவடுகளை நினைத்து,
இறைவனிடம் உமக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
பப்பா என்ற மையப்பொருளை வைத்து உரையாடும்
உமது ஏழு பிள்ளைகளும் உரையாடி உறவாட
கருப்பொருளாகிய நீர் இல்லையே எனக் கண்ணீர் விடும் காட்சி,
உமது கண்களில் தெரிகிறதோ யாம் அறியோம்!
உமது ஆன்மா சாந்தியடைந்து.
இறைவனின் இன்ப வீட்டில் இளைப்பாற
இவைனிடம் இருகரம் ஏந்தி உருக்கமாய் மன்றாடுகின்றோம்!


நினைவுத் திருப்பலி இன்று (28.12.2013) சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு போயிட்டி புனித லூர்து அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

போயிட்டி, இளவாலை.

(41680) (7.6.3)

# ஏறாவூர் பிரதான வீதியின் அகலிப்புப் பணிகள் ஆரம்பம்



அம்பாறை,டிசெ.28
தேசிய நெடுஞ்சாலைக்கு ஏற்றதாக ஏறாவூர் நகரை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதி அகலிப்புக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளும் அதன் ஊழியர்களும் ஏறாவூர் நகரில் வீதி அகலிக்கப்படும் எல்லையை அளந்து அடையாள மிட்டு வருகின்றனர்.

முன்னர் அகலிக்கப்பட்டுள்ள குறித்த பிரதான வீதி ஒரு வழிப் பாதையாகவே உள்ளது.

தற் போதுள்ள வீதியில் ஒரே நேரத்தில் இரு வாகனங்கள் மாத்திரமே பயணிக்கக் கூடிய தாகவுள்ளது.

அகலிக்கப்படும் நவீன நெடுஞ்சாலையின் ஒரு மருங்கு 36 அடி அகலமானதாக இருக்கும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வீதி அகலிப்புப் பணிகள் ஆரம்பமாகும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை வீதி அகலிப்புக் காரணமாக ஏறாவூர் நகர கடைத் தொகுதிகளிலுள்ள பல கடைகளை உடைக்கப்பட வேண்டிய நிலைமை தோன்றியுள்ளதாக கடை உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-157)

# மேய்ச்சல் தரை சர்ச்சை; எட்டப்படவில்லை தீர்வு

மட்டக்களப்பு,டிசெ.28
வட்டமடு விவசாய மேய்ச்சல் தரைச் சர்ச்சை தொடர்பான பேச்சு இணக்கப்பாடின்றி முடிவடைந்தது. அம்பாறை மாவட்ட அரச அதிபர் நீல் அல்விஸ் தலைமையில் கடந்த 26 ஆம் திகதி அரச அதிபர் அலுவலகத்தில் பேச்சு இடம்பெற்றது.

இதில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எச். உதுமாலெப்பை மற்றும் மாட்டுப் பண்ணையாளர்களும் கலந்து கொண்டனர்.

சுமார் 3 மணித்தியாலம் நடைபெற்ற பேச்சு எவ்வித இணக்கப் பாடுமின்றி முடிவடைந்தது.

இது தொடர்பாக மாட்டுப் பண்ணையாளர்களிடம் கேட்ட போது இம்முறை மேய்ச்சலுக்காக கூடுதலான மாடுகளை அங்கு கொண்டு வந்து விட்டோம். முதலில் அதற்கு ஒரு தீர்வு தாருங்கள் என்று கூறினார்.


**"-"**

**மேய்ச்சலுக்காக கூடுதலான மாடுகளை அங்கு கொண்டு வந்து விட்டோம். முதலில் அதற்கு ஒரு தீர்வு தாருங்கள்.**

இதற்கு அமைச்சர் இந்தப் போகத்துக்கு குறைந்த அளவிலாவது செய்வதற்கு விட்டுக்கொடுங்கள் என்று கேட்டபோது பண்ணையாளர்கள் இணங்கவில்லை. இது தொடர்பாக நாங்கள் ஏனைய பண்ணையாளர்களுடன் கலந்தாலோசித்துக் கூறுவதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பல சுற்றுப் பேச்சு நடத்திய கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவமுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தாம் இதிலிருந்து சற்று விலகியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கட்சி பேதமின்றி இந்தப் பிரச்சினையை அணுகி இந்த போக விவசாயத்தை மேற்கொள்ள அனுமதி யைப் பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுகின்றனர். (வ)



ஆழிப்பேரலை ஏற்பட்டு 9 வருடங்கள் கடந்தும் அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கட்டி முடிக்கப்பட்ட நுரைச்சோலை வீடுகளை வழங்காதிருப்பதை ஆட்சேபித்தும் அந்த வீடுகளை தங்களிடம் வழங்கக் கோரியும் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று மக்கள் நேற்று வீதியில் சமைத்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# கடற்றொழிலாளர்களுக்கு உயிர் காக்கும் அங்கி கட்டாயம்

## *மட்டு. கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு*

மட்டக்களப்பு,டிசெ.28
ஜனவரி முதலாம் திகதியிலிருந்து கடற்றொழிலாளர்களுக்கு உயிர் காப்பு அங்கிகளும், காப்புறுதியும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு கடற்றொழில் நீரியல் வள உத விப் பணிப்பாளர் ர. ஜோர்ஜ் தெரிவித்தார். குறித்த மாவட்டத்தில், 1,693 இயந்திரப்படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. அவற்றில் 1,223 வெளியிணைப்பு இயந்திரப் படகுகள், 360 ஆழ்கடல் இயந்திரப் படகுகள், 70 ஒருநாள் இயந்திரப் படகுகள் என்பன உள்ளடங்குகின்றன.

அவற்றில் இருவர் வீதம் மீன்பிடிக்காகச் செல்கின் றனர். அவர்களுக்காக உயிர் காப்பு அங்கிகள் கட்டாயமாகும்.

அதே நேரம் படகுக்கும் பயணிப்பவர்களுக்கும் காப்புறுதியும் கட்டாயமாகும். மீனவர்களுக்கான காப்புறுதிகள் மேற்கொள்ளப்படும் போது, ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கப்படுகிறது. அதே நேரம் மீன்பிடிக்குச் சென்று காணாமற் போகும் மீனவர்களுக்கு அவர்கள் வீடு திரும்பும் வரையில் மாதாந்தம் ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்படுகின்றது- என்றார். (வ)

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னதான நிகழ்வும்



தோற்றம்
01.02.1959

மறைவு
24.11.2013

## செல்வி கமலாம்பிகை ஆறுமுகம்

(ஆங்கில ஆசிரியை, யா/சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயம்)

கடந்த 24.11.2013இல் சிவபதமடைந்த செல்வி கமலாம்பிகை ஆறுமுகம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (29.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு. **அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் அன்னதான மண்டபத்தில்** நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் அன்னதான நிகழ்விலும்பங்குபற்றும் வண்ணம் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**கேணிக்கரை,**
**அளவெட்டி.**

திருமதி மனோன்மணி ஆறுமுகம்,
ஆறுமுகம் வித்தியானந்தன்.

(41718) (7.6.3)

# அம்பாறை மாவட்டத்துக்குள்ளும் யானைவேலி அமைக்கப்படுமா?

அம்பாறை,டிசெ.28
அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து வருகிறது. அவைகரும்பு, நெல், வீடு என்பவற்றை சேதப்படுத்துவதால் இரவு வேளைகளில் சொந்த வீடுகளில் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இறக்காமம், தமண போன்ற பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கரும்புச் செய்கையையே யானைகள் சேதப்படுத்தி வருவதோடு, இரவுவேளைகளில் காவலுக்குச் செல்பவர்களை யானைகள் தாக்கும் சம்பவங்கள் ஆங்காங்கே இடம்பெற்ற போதும் அவை தொடர்பாக இதுவரை காலமும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததையிட்டு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

**"-"**

**இரவு வேளைகளில் வீடுகளை உடைத்து விறாந்தைகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூடைகளைச் சேதப் படுத்துகின்றன.**

சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி, மல்வத்த, இஸ்மாயில்புரம் மற்றும் இறக்காமம் பிரதேச செயலகத்தின் கீழுள்ள வரிப் பத்தான் சேனை, குடுவில், மாணிக்கமடு, தமண பிரதேசத்தின் கீழுள்ள 17 ஆம் கட்டை, எக்கல் ஓயா, விட்டினாகல, அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள தீகவாவி, அஷ்ரப் நகர், 36 ஆம் கிராமம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களின் நெல், கரும்பு, வீட்டுத் தோட்டம் போன்றவற்றை யானைகள் நாசமாக்குகின்றன. இரவு வேளைகளில் வீடுகளை உடைத்து விறாந்தைகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூடைகளைச் சேதப்படுத்துகின்றன.

இதனால் மக்கள் அச்சம், பீதி கொண்டு அயல் கிராமங்களிலுள்ள உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று இரவு வேளைகளைக் கழித்து வருகின்றனர்.


எனவே, அம்பாறை மாவட்ட மக்களின் கரும்பு, நெல் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் உயிர்களைக் காப்பதற்குமாக காட்டு யானைகள் அப்பகுதிகளுள் பிரவேசிக்காமல் தடுப்பதற்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ)

# நாடு முழுவதும் பால்மாவுக்கு தட்டுப்பாடு நீடிக்கிறது

## விலையேற்றத்துக்கு அனுமதி கிடைக்காததன் எதிரொலி

கொழும்பு.டிசெ.28

நாடளாவிய ரீதியில் பால்மா வகைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இதன் காரணமாகத் தங்களது அன்றாட தேவைக்கு பைக்கற் பால் மாவைப் பயன்படுத்துபவர்கள், விசேடமாகக் குழந்தைகளுக்கு பவுடர் பாலைக் கொடுக்கும் தாய்மார்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள் எனத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மார்சூக் தெரிவித்தவை வருமாறு:-

பால்மாவின் விலைகளை உயர்த்த வேண்டுமென பால்மா நிறுவனங்கள் விடுத்த கோரிக்கைக்கு வர்த்தக அமைச்சு அனுமதி கொடுக்கவில்லை.

அதனால் அந்த நிறுவனங்கள் பால் மாவை சந்தைக்கு விநியோகிக்காமல் பதுக்கி வைத்திருக்கின்றன. அது சட்டவிரோதமான செயல். அந்த நிறுவனங்கள் கோரும் விலை உயர்வு அனுமதி அசாதாரணமானது என்பதால் அதை அனுமதிக்க முடியாது.

இவ்வாறு பால்மாவைப் பதுக்கி வைக்கும் நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் இந்தச் சோதனை நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பால்மாவைப் பதுக்கி வைத்திருக்கும் நிறுவனங்கள், பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்கள் ஆகியவை தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் 077 1088922 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு எமக்கு அறிவிக்கலாம்.- இவ்வாறு கூறினார் ரூமி மார்சூக். (ஓ-சி)

## புதையல் தோண்ட முயற்சித்த ஒன்பது பேர் சிக்கினர்

கொழும்பு.டிசெ.28

எம்பிலிபிட்டிய போசிரிகம பிரதேசத்தில் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதேச சபை உறுப்பினரொருவர் உட்பட ஒன்பது பேர் எம்பிலிபிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போசிரிகம பிரதேசத்தின் 100ஆவது மைல்கல்லுக்கு அருகிலிருந்த வீடொன்றில் இவர்கள் புதையல் தோண்டப் பயன்படுத்தப்படும் உபகரணங்களுடனும் பூஜைப் பொருள்களுடனும் புதையல் தோண்ட ஆயத்தமாக இருந்த வேளையிலேயே பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர்.



தேசிய பாதுகாப்புத் தினம் நேற்று முன்தினம் களுத்துறையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதமர் டி.எம்.ஜயரத்ன மாணவி ஒருவருக்கு சான்றிதழை வழங்கினார்.

## லங்காபுர பிரதேச சபை 'பட்ஜெட்' தோல்வியில்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆளுகைக்குட்பட்ட பொலனறுவை, லங்காபுர பிரதேச சபையின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கினால் தோற்கடிக்கப் பட்டுள்ளது.

பிரதேச சபையின் தவிசாளர் ஸ்ரீ அளுத்வத்தவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 5 வாக்குகளும், எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

உப தவிசாளர் உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மூவர், பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மூவருடன் சேர்ந்து வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

## ஓட்டோச் சாரதி கொலை; சந்தேகநபர்கள் கைது

### *ஒருவரிடமிருந்து கைக்குண்டும் மீட்பு*

கொழும்பு.டிசெ.28

வென்னப்புவ, கம்மல பிரதேசத்தில் ஓட்டோ ஒன்றின் சாரதியைக் கொலைசெய்த சந்தேகத்தின்பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திச் சென்றவேளை தங்கொட்டுவ பிரதேசத்தில் வைத்து இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கண்டி பஸ் நிலையத்தில் வைத்து ஒருவரைக் கைதுசெய்தனர். அப்போது அந்த நபரிடமிருந்த கைக்குண்டொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

அந்த நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் இரண்டாவது சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வடக்கு, கிழக்கில் தேசிய கீதத்தை தமிழில் இசைப்பதற்குத் தடையா?

### *விசாரணைகள் இடம்பெறுகின்றன என்கிறார் அமைச்சர் வாசுதேவ*

கொழும்பு.டிசெ.28

வடக்கு, கிழக்கில் நடைபெறும் அரச நிகழ்வுகளின்போது தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உதயனுக்குத் தெரிவித்தார்.



வட, கிழக்கில் மட்டுமல்ல, அம்பாந்தோட்டையில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கூட தமிழில் தேசிய கீதம் இசைக்கலாம். அதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. இதைத் தடுப்பதானது சட்டவிரோதச் செயலாகும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மொழி நிர்வாக மொழியாக இருக்கின்ற போதிலும், அங்கு நடைபெறும் அரச நிகழ்வுகளில் தமிழில் தேசிய கீதம் இசைப்பதற்கு அனுமதி மறுக்கப்படுகின்றது என கூட்டமைப்பு முன்வைத்துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் அமைச்சரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இது தொடர்பில் நாடாளுமன்றில் பேசியிருந்தார். இதன்போது, எங்கு நடைபெற்ற நிகழ்வில், யாரால், எச்சந்தர்ப்பத்தில் இவ்வாறு தடை ஏற்படுத்தப்பட்டது என்ற விவரங்களை நான் அவரிடம் கோரினேன். அவர் சில விவரங்களை வழங்கினார். அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் அமைச்சர் வாசு கூறினார்.

அதேவேளை, தமிழர்களின் அடையாளங்களைப் பிரதிபலிக்காததால் தேசியக் கொடியைப் புறக்கணிக்கப் போவதாக கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் ஒருவர் வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பில் அமைச்சரிடம் வினவியபோது,

" தேசியக் கொடி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஏன், சம்பந்தன்கூட ரணிலுடன் இணைந்து தேசியக்கொடியை ஏந்தினார்.

எனவே, அந்த வடமாகாண சபை உறுப்பினரின் கருத்துக் குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை"- என்றார். (ஓ-சி)

## துணிகளுக்கு அலங்காரமிடும் இயந்திரத்தில் சிக்கியவர் சாவு

கொழும்பு.டிசெ.28

பியகம பகுதியில் தனியார் நிறுவனமொன்றின் ஊழியர் ஒருவர், துணிகளுக்கு அலங்காரமிடும் இயந்திரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் குறித்த இயந்திரத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்தவேளையே, அவர் இந்த விபத்தில் சிக்கியுள்ளார்.

" - "
குறித்த இயந்திரத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்த வேளையே, இவர் இந்த விபத்தில் சிக்கியுள்ளார்.

பின்னர் பியகம வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போதே, இவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் பதுளை, கந்தேகெதர, பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பியகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வரிப்பணம் செலுத்தாத சொத்துகள் ஏலத்தில்

### *கொழும்பு மாநகரசபை தீர்மானம்*

கொழும்பு.டிசெ.28

வரிப்பணம் செலுத்தாக வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களை ஏலத்தில் விடுவதற்கு கொழும்பு மாநகர சபை தீர்மானித்துள்ளது.

இவ்வாறு 260 நிலையங்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன என்று மாநகர சபையின் பொருளாளர் கே.டி.மித்ரபால தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை மற்றும் புறக்கோட்டைப் பகுதிகளிலேயே இவ்வாறான நிறுவனங்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த ஏலத்தின் மூலம் 3 ஆயிரம் இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மஹிந்த அரசு ஆட்சியில் இருக்கும்வரை நாட்டில் இன ஒற்றுமை சாத்தியப்படாது

### *அடித்துக்கூறுகிறது ஐக்கிய சோஷலிஸக் கட்சி*

இலங்கையில் சிங்கள பௌத்த ஆதிக்கம் தலைதூக்கியுள்ளது என்றும், மஹிந்த அரசு ஆட்சியில் இருக்கும்வரை நாட்டில் நல்லிணக்கம் என்பது சாத்தியப்படாத விடயமாகவே இருக்கும் என்றும் ஐக்கிய சோஷலிஸக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜய சூரிய மேலும் கூறியவை வரு மாறு:

வடக்கிலுள்ள இராணுவ ஆளுநரை நீக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் நிறைவேற்றி யுள்ளது. இந்தப் பிரச்சினையை இலகுவில் தீர்க்கலாம். ஆனால், தான் நியமித்த ஒருவரை அப்பதவியில் இருந்து நீக்குமாறு எவ்வாறு அரசியல் கட்சியொன்றால் கோரிக்கை விடுக்கமுடியும் என ஜனாதிபதி நினைப்பதாலேயே இப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளது.

அதேவேளை, தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படக்கூடாது என உத்தரவிடப்படுகின்றது. இதன் பின்னணியிலும் ஜனாதிபதியே இருக்கின்றார். இது பயங்கரமான செயலாகும். தமிழர்களுக்கு இந்த உரிமையை வழங்காவிட்டால் எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்- என்றார்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எகிப்தில் அடக்குமுறைகள்

எகிப்தில் இராணுவத்தின் ஆதரவுடன் இயங்கும் அரசு, பதவி நீக்கம் செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள மொஹ்மட் மோர்சி தலைமையிலான முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்ததையடுத்து, எகிப்தில் உள்நாட்டு நெருக்கடி மோசமடையக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சதாம் ஹுசேய்னின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஈராக்கிலும், கடாபியின் வீழ்ச்சிக்குப் பின்னர் லிபியாவிலும் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மை மற்றும் வன்முறைகள் போன்ற நிலைக்கு எகிப்தும் உள்ளாகலாம் என்று சர்வதேச அரசியல் நிபுணர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கம் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்யப்பட்ட மறுநாளே, எகிப்தில் சமூக ரீதியில் மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ள முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் உறுப்பினர்கள் பலர் கைதாகியுள்ளனர். அவர்களுக்குச் சொந்தமான காணிகள், சொத்துகள், வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்ததன் மூலம் அந்த இயக்கத்துக்கு எதிரான ஒடுக்குமுறையை மேலும் தீவிரப்படுத்த பொலிஸாருக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

நத்தார் தினத்தன்று நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலையடுத்து, நீண்ட அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர் எகிப்தின் துணைப் பிரதமர் ஹொஸன் ஈஸா முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாக அறிவித்தார். நைல் நதிக்கரை நகரான மன்சூராவிலுள்ள பொலிஸ் தலைமையகத்தின் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர். முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை வேரோடு அழிக்க திடசங்கற்பம் பூண்டிருந்த எகிப்திய அரசுக்கு இந்தத் தாக்குதல் ஒரு வாய்ப்பாகிவிட்டது. அதன் விளைவுதான் அந்த இயக்கம் மீதான தடைவிதிப்பு.

உலக வரலாற்றில் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகள் அடக்குமுறையின்போது எழுச்சியடைகின்றன. கெய்ரோவின் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்துக்கு அருகில் பயணிகள் பஸ்மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல், வன்முறைகள் தொடரப்போவதற்கான ஆபத்தைத் தோற்றுவித்துள்ளது. முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துடன் சிறிய அளவில் தொடர்புகளை வைத்திருந்த சமூக மற்றும் தர்ம ஸ்தாபனங்கள் கூட இராணுவ ஆதரவு அரசினால் அடக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றன.

கடந்த பல மாதங்களாக வன்முறைகளாலும் குழப்பங்களாலும் பாதிக்கப்பட்டுள்ள எகிப்தில் தற்போதைய புதிய அடக்குமுறைகள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. பயங்கரவாத எதிர்ப்பு உடன்படிக்கைக்கு மதிப்பளிக்குமாறும் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துக்கு நிதியுதவி மற்றும் புகலிட உதவிகளை வழங்குவதை நிறுத்துமாறும் அரபு நாடுகளிடம் எகிப்தின் புதிய ஆட்சியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எகிப்தில் ஜனநாயக அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பிரதமர் மொஹமட் மோர்சியின் கட்சியான முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துக்கு எதிரான அடக்குமுறைகள் உள்நாட்டில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் தொடரப்போகின்றன. குறிப்பாக இந்த இயக்கத்தின் நிதி முடக்கப்படலாம்.

எகிப்தில் முபாரக்கையும் லிபியாவில் கடாபியையும் பதவி நீக்குவதில் குறியாகவிருந்த, சிரியாவில் அஸாத்தைப் பதவி நீக்க திட்டமிட்ட அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளால் பதவி நீக்கத்துக்குப் பின்னர் ஏற்படக்கூடிய அரசியல் மாற்றங்களை முன்கூட்டியே ஊகிக்க முடியாது போனமை வியப்பளிக்கிறது. அரபு வசந்தத்தின் பின்னர் எகிப்திலும் லிபியாவிலும் மேற்கு நாடுகளுக்கு ஏற்பட்ட மோசமான பின்னடைவுகளால் சிரியாவில் அஸாத்தின் ஆட்சிக்கவிழ்ப்புத் தொடர்பாக உறுதியான முடிவை எடுக்கமுடியாது தடுமாறுகின்றன. அஸாத் கவிழ்க்கப்பட்டால் அல் - குவைதா போன்ற இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகள் ஆட்சியைக் கைப்பற்றிவிடக்கூடும். எல்லையில் இஸ்ரேலுக்கு புதிதாக நெருக்கடிகள் உருவாகும்.

மத்திய கிழக்கில் அமைதி ஏற்படுவதற்கு சிரியாவில் அஸாத்துக்கு எதிரான கிளர்ச்சிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசு பதவியில் அமர்த்தப்படவேண்டும். அதேபோன்று எகிப்தில் மோர்சி விடுவிக்கப்படவேண்டும். முஸ்லிம் சகோரத்துவ இயக்கம் மீதான தடைகள் நீக்கப்பட வேண்டும். அடக்கு முறைகள் தீவிரவாதம் மேலும் எழுச்சி பெறுவதற்கே வழிவகுக்கும். ஆப்கானில் தலிபான்கள் பலமடைவதற்கும் இத்தகைய அடக்கு முறைகள்தான் காரணமாக உள்ளன. இன்று தலிபான்களை பேச்சுக்கு வருமாறு கெஞ்ச வேண்டிய நிலைமை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது.

# நளினியின் உயிருக்கு ஆபத்து

*தியாகராஜனின் வாக்குமூலம், அதற்குப் பேரறிவாளனின் உணர்வுகள் என கடந்த வாரங்களில் பரபரப்பு பற்றிக் கொண்டது. இந்த நிலையில் முருகனின் சில பதிவுகள்...*

**சாவுத் தண்டனைக்கு எதிரான இயக்கம் பேரறிவாளனை முன்னிறுத்தி உயிர் வலி என்ற ஆவணப்படத்தை வெளியிட்டிருக்கிறது. அதுபற்றி அறிந்தீர்களா? அது குறித்து உங்களின் கருத்து என்ன?"**

அதுபற்றிப் படித்தேன். தியாகராஜன் கொடுத்த பேட்டி பற்றி மட்டும்தான் முழுமையாகத் தெரியும். இன்னும் அதில் பல சிறப்பான விடயங்கள் இருப் பதாக கேள்விப்படுகிறேன். மிகவும் அருமையான முயற்சி. எமது விடுதலையில் மிகப்பெரிய திருப்பு முனையை உண்டு பண்ணும் என்று சொல்கிறார்கள்.


மிகச் சந்தோசமான விடயம். மனச்சாட்சியின் கண்களைத் திறந்த அந்த ஆவணப்படத் தொகுப்பில் நளினி பற்றிய குறிப்பில் மனச்சாட்சியும், உள ஈரமும் தடம்புரண்டிருப்பது மட்டும் வருத்தமான விடயம். கணவன் என்பதால் மட்டுமல்ல. நளினி பற்றிய உண்மைகளை அறிந்தவர்களுக்கும், அறிய விரும்புபவர்களுக்கும் மனது வலிப்பது இயல்பானதல்லவா...!"

**மனச்சாட்சியும் உள ஈரமும் தடம்புரண்டிருக்கிறதென்றால் எப்படி? இத்தனை ஆண்டுகள் கழித்து பேரறிவாளனின் விஷயத்தில் நீதிப்பிழை நடந்து விட்டது என்று சொல்லும் தியாகராஜன் அதற்கு தானும் ஒரு பொறுப்பாளி என்கிறாரே?"**

எமது வாழ்க்கை அகராதியில் நீதி என்ற சொல்லே இல்லையென்றுதான் சொல்லவேண்டும். நாம் 23 ஆண்டுகளாக சொல்லியும், எழுதியும் வந்ததனை அவர் இத்தனை வருடங்கள் கழித்தாவது வெளிப்படையாக ஓரளவுக்கு ஒப்புக்கொண்டு அம்பலப்படுத்தி இருப்பதைப் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை. யாரும் குறை சொல்லக்கூடிய நல்ல அணுகுமுறையல்ல. அன்று பல நிர்ப்பந்தங்கள் இருந்ததாகச் சொல்கிறார்கள். அந்த நிர்ப்பந்தங்களும், தயக்கங்களும் முழுமையாக இன்று அற்றுப்போய்விட்டது எனச் சொல்லிவிட முடியாது. அதனையும் மீறி அவர் துணிந்து ஒப்புக் கொண்டிருப்பது நீதிக்கும், சி.பி.ஐ.க்கும் வரவிருந்த களங்கத்தையும் தன்னால் இயன்றவரை துடைத்திருக்கிறார் என்றுகூட சொல்லலாம்.

தியாகராஜன் அவர்களின் வாக்குமூலத்தில் மூன்று விடயங்களைச் சொல்லியிருக்கிறார். 1) மொழிபெயர்ப்பில் தவறு ஏற்பட்டுள்ளது. 2) வழக்குக்காக சில விடயங்களை சேர்த்து எழுதியிருந்தாலும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சாதகமாக வாய்ப்புக் கொடுத்திருந்தேன். ஆனால், அவர்கள் அதனைப் பயன்படுத்தவில்லை. 3) சாவுத் தண்டனை கொடுப்பார்கள் என நான் எதிர்பார்க்கவில்லை என்று.

இது இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எல்லாருடைய வாக்குமூலங்களிலும் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக எனது மற்றும் நளினியின் பெயரில் உள்ள ஒப்புதல் வாக்குமூலங்கள் நாம் சொல்லி எழுதப்பட்டதல்ல என்பதற்கும், நிரபராதிகளான நாம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வரவே இல்லை என்பதற்கும் ஏராளமான சான்றுக் குறிப்புக்களை சி.பி.ஐ.யினரின் ஆவணங்களில் இருந்தே முன்வைத்திருக்கிறோம். குற்றம் செய்தவர் மட்டுமே தனது தவறினை உணர்ந்து



வருந்தி அதன் விளைவாக தானாக கொடுக்க முன்வருவதுதான் ஒப்புதல் வாக்கு மூலம் என உச்சநீதிமன்றம் தெளிவாக வரையறை செய்துள்ளது.

அன்று வருந்தி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வந்தோம் என்று கூறியவர்கள்தான் இன்று எங்கள் மீது வருந்தவில்லை என்ற குற்றச்சாட்டினை எழுப்புகிறார்கள். நான் கொடுத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எனது உண்மையான சொந்தப் பெயர், தந்தை பெயர், முகவரி வேறாக உள்ளது. அதற்குக் காரணம் நான் தான். ஏற்கெனவே எனது தாயார் என் அண்ணனை இழந்து வேதனையில், ஆபத்தில் இருந்தார்.

அந்த நேரத்தில் என் கைதுச் செய்தி போனால் தாயார் உயிருக்கு ஆபத்தாகிவிடும் என்ற பயத்தினாலும், சில நாள்களில் விட்டுவிடுவார்கள் என்ற நம்பிக்கையிலும் நான் அப்படி மாற்றிச் சொல்லியிருந்தேன். இப்படி எனது சொந்த அடையாளங்களையே சொல்ல முன்வராத ஒருவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கத் தானாக முன்வந்தார் என எப்படிச் சொல்ல முடியும். அதனை எப்படி நம்பினார்கள்...?

நளினி கைது செய்யப்பட்டபோது கழுத்தில் தாலி, காலில் மெட்டியுடன் கர்ப்பிணியாக இருந்தார் என்றும், எனக்கு தாஸ் என்ற பெயர் மட்டும்தான் இருந்தது என நளினிக்குத் தெரிந்திருந்தது எனவும் சி.பி.ஐ.யினரின் ஆவணங்களே ஒப்புக்கொள்கின்றன. அப்படியிருக்க எமது காதல், கல்யாணம், கர்ப்பம் பற்றி எவ்வித குறிப்பும் நளினி பெயரில் உள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் இல்லை.

மேலும் அதில் என்னை, நளினிக்குத் தெரிந்திராத முருகன் என்பதைப் போலத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் நளினியின் வாக்குமூலத்தில் அரசியல் படுகொலை என்று ஆங்கிலத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது குற்றம் சாட்டப்பட்டவர்கள் பயன்படுத்தும் வார்த்தையல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

எனது மூத்த சகோதரர் விபத்தில் சாவடைந்தார் என்று சி.பி.ஐ. சமர்ப்பித்த மாவீரர் குறிப்பேட்டில் உள்ளது. அதுதான் உண்மையும்கூட. ஆனால், நான் கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்திய இராணுவத்துடனான மோதலில் அவர் சாவடைந்ததாக வழக்கின் தேவைக்கு ஏற்ப வசதியாக எழுதியிருக்கிறார் தியாகராஜன்.

1988, 1989ஆம் ஆண்டுகளில் யாழ். கோட்டை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது உலகிற்கே தெரியும். ஆனால், அக்காலத்தில் நான் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து அந்த யாழ். கோட்டையில் பணிசெய்ததாக எழுதி வைத்திருக்கிறார்.

மேலும் ஈழத் தமிழனான எனக்கு பரிச்சயம் இல்லாத, தெரிந்திருக்க வாய்ப்பில்லாத பல தமிழ்நாட்டு வழக்கிலுள்ள சொற்களையும், ஆங்கிலச் சொற்களையும் பயன்படுத்தி எழுதியுள்ளார்.

இவைகள் அனைத்தும் நாம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை, அவைகள் அவர்களாகவே எழுதிக் கொண்டவை எனக் கருதப் போதாதா..? போதாதெனில் இன்னும் ஏராளமான அழுத்தமான ஆதாரக் குறிப்புக்களை என்னால் கூறமுடியும்."

**உங்களின் பிரச்சினை மற்றும் சிக்கல் முன்பிருந்ததைவிட இப்போது மாறியிருக்கிறது என நினைக்கிறீர்களா? மாற்றங்கள் குறித்து உங்கள் மனைவி நளினி உங்களிடம் ஏதும் விவாதிப்பாரா?"**

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது எம்மை எதிர்நோக்கி உள்ள வழக்கின் சிக்கல் கொஞ்சம் குறைந்ததுபோல் தோன்றினாலும் எமக்கு எதிராக தனிப்பட்ட ரீதியில் புதிய சிக்கல் உருவாக்கப்பட்டுள்ளது. . தியாகராஜன் உயிர்வலி ஆவணப் படத்தில் நீதிப்பிழை நேர்ந்துவிட்டதாக சொல்கிறார். அதே படத்தில் சிவராசன் பொட்டு அம்மானுடன் நடத்திய தொலைத் தொடர்புக் கருவிமுலமான பேச்சை மேற்கோள் காட்டி ராஜீவ் படுகொலை சதி நளினிக்கும் தெரியும் என்பது போன்ற விஷ வார்த்தைகளையும் தெளித்திருக்கிறார்.

நளினியைப் பற்றிய எதிர்மறையான கருத்துகள் அவசியம் இல்லாமல் பரப்பப்பட்டு வருகிறது. நளினி உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று ஏற்கெனவே நான் பயந்துபோய் இருக்கிறேன். இதில் நளினியைவிட எனக்குத்தான் வேதனை அதிகம்.

எனது சாவுத் தண்டனைக்கு ஒரு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையின் ஆறுதலில், தனக்கு எதிராக எழும் குற்றச் சாட்டையும் நளினி புதைத்துக் கொண் டார். சிறைக்குள் சிறிதளவு மனநிம்மதி கிடைப்பது மிகப்பெரிய விடயம். அவர் கலங்கிவிடக்கூடாது என்று நானும், நளினியிடம் எதுவும் விளக்கிச் சொல்லவில்லை."

**போகிற போக்கில் ஒரு வார்த்தை கூறினீர்கள். அதாவது நளினிக்கு ஆபத்து இருக்கிறது. உயிருக்கு என்னாகும் என்ற கவலையில் இருப்பதாக... ஏன் அப்படி கூறினீர்கள்?**

23 ஆண்டுகளாக சிறையில் வாடுகிறார் நளினி. எத்தனையோ சோதனைகளையும் கொடுமைகளையும் சந்தித்திருக்கிறார். ஆனால் இப்போதுள்ள சிறை அதிகாரியால் அனுபவிக்கும் கொடுமை அதிகம். ஒரு கைதியின் குழந்தையை நளினி தூக்கிக் கொஞ்சினார் என்பதற்காக அந்தத் தாயை அங்கேயே போட்டு அடித்து உதைத்து வதைத்தார்கள்.

ஏன் இப்படி என கேட்டால், உயிர் இருக்காது. முகத்தில் அசிட் அடிக்கச் சொல்வேன். பைத்தியம் என பட்டம் கட்டி விடுவோம். தற்கொலைக்கு முயன்றதாக கூறுவோம். அதிகாரியை அடித்ததாக பதிவு செய்வோம். உயிர்ப் பிச்சை வேணுமா என்று தொடர்ந்து மிரட்டி வருகிறார் அந்த அதி காரி. வீண் வதந்திகளைக் கூறி வருகிறார். நாங்கள் சந்திக்கவும் அனுமதிக்கவில்லை.

கடந்த ஜூன் மாதமே அந்த அதிகாரியைப் பற்றியும் அவரால் ஆபத்து இருக்கிறது என்பது பற்றியும் உயர் அதிகாரிகளுக்கு நானும் நளினியும் தனித்தனியாக மனு அளித்துள்ளோம். இது எல்லாவற்றிற்கும் சேர்த்து உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன். தமிழக முதல்வருக்கும் கோரிக்கை மனு அளிக்க இருக்கிறேன்." என்றார்

*நன்றி- விடியலை நோக்கி*

# குழந்தைகளுக்கு பாதுகாப்புப் பாடம் அவசியம்

பி.விபிஷனா

குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், கடத்தல், மிரட்டல் போன்றவை அதிகரித்து வருகின்றன. அவைகளில் இருந்து குழந்தைகள் தப்பிக்க பாதுகாப்புப் பாடம் அவசியமாகிறது! குழந்தைகளுக்கு எப்போது புரிந்துகொள்ளும் சக்தி உருவாகிறதோ, அப்போதிருந்தே, பெற்றோரின் பெயர், செல்போன் எண், வசிக்கும் இடத்தின் பெயர், தந்தை, தாய் வேலை பார்க்கும் நிறுவனம் போன்றவைகளைச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

பக்கத்து வீட்டினர் மற்றும் நெருக்கமான உறவினர்களின் போன் நம்பர்களையும் முடிந்தால் மனதில் பதிய வைப்பது நல்லது. சாலையில் இடதுபுற ஓரமாக நடந்துசெல்லும்படி கூறுங்கள். பள்ளிக்குச் செல்லத் தொடங்கிவிட்டால் பள்ளி அடையாள அட்டையை, பள்ளி அருகில் செல்லும்போது மட்டும் அணியாமல் வீட்டில் இருந்து கிளம்பும்போதே அணியச் செய்யுங்கள்.

மற்றவர்கள் தரும் எந்தப் பொருளையும் வாங்கக்கூடாது, மற்றவர்கள் தரும் பொருள்களை உண்ணவும் கூடாது, மற்றவர்களை நம்பி அவர்களோடு செல்லவும் கூடாது என்பதைக் கண்டிப்பாகச் சொல்லி வையுங்கள். சிறுவர், சிறுமியர்களாக இருந்தால் பள்ளி, வீடு தவிர மற்ற இடங்களுக்கு செல்லும்போது எங்கே செல்கிறார்கள்? யாரோடு செல்கிறார்கள்? என்பன போன்ற தகவல்களை முதலிலே கூறி, உங்கள் அனுமதியோடு செல்லும்படி கூறுங்கள்.

பள்ளிக்குச் செல்வதாகக் கூறிவிட்டு மற்ற இடங்களில் சுற்றித் திரியக் கூடாது என்பதையும், அதனால் ஏற்படத்தக்க பிரச்சினைகளையும் முதலிலே பிள்ளைகளிடம் எடுத்துக்கூறிவிடுங்கள். குழந்தைகளை மையமாக வைத்து நடக்கும் அசம்பாவிதங்களை அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். அவர்களை பயப்பட வைக்காமல் விழிப்புணர்வு கொடுக்கும் விதத்தில் அந்தத் தகவல்கள் இருக்க வேண்டும். உங்கள் பிள்ளைகள் தவறான நண்பர்கள், தோழிகளிடம் சேர்ந்துவிடக் கூடாது என்பதில் கவனம் செலுத்துங்கள். அவர்களிடம் சேர்ந்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதையும் சுட்டிக் காட்டுங்கள். கோயில்களுக்கோ கடைகளுக்கோ செல்லும்போது பெற்றோரைப் பிரிந்துவிட்டால், அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருக்காமல், அழுது கொண்டிருக்காமல் அங்குள்ள பாதுகாவலரிடம் சென்று, பெற்றோரைப் பிரிந்துவிட்ட தகவலைச் சொல்ல வேண்டும் என்று சொல்லுங்கள்.

பொது இடங்களில் தொலைந்தால் பொலிசாரிடம் சென்று, விவரத்தை கூறும்படி அறிவுறுத்துங்கள். பொலிஸ் உதவிக்கான நம்பரையும் மனதில் பதியவைக்கச் செய்யுங்கள். வீட்டில் தனியாக இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டால், அறிமுகமற்ற தொலைபேசி அழைப்பு வந்தால், தான் தனியாக இருக்கும் தகவலைச் சொல்லவேண்டாம் என்று நினைவுபடுத்துங்கள்.

தனியாக இருக்கும்போது அறிமுகமற்ற யார் வந்தாலும் கதவைத் திறக்க வேண்டாம். ஜன்னல் வழியாக தகவலைக்கூறி அனுப்பிவிடச் சொல்லுங்கள். செல்போன் மற்றும் சமூக வலைத் தளங்களில் தங்கள் தனிப்பட்ட விடயங்கள், விலாசங்கள், படங்கள் போன்றவைகளை பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்று கூறுங்கள்.

பள்ளிக்குச் செல்லும் போதோ, கடைகளுக்கு செல்லும் போதோ குறிப்பிட்ட ஒரு நபர் தொடர்ந்து கண் காணிப்பது போன்று செயற்பட்டால் அந்தத் தகவலை உடனே தங்களிடம் கூறவேண்டும் என்று அறிவுறுத்துங்கள். சிறுவனோ, சிறுமியோ பள்ளிக்கு நடந்து செல்வதாக இருந்தால் தனியாகச் செல்லாமல், மற்ற மாணவர்களோடு சேர்ந்து இணக்கமாகச் செல்லுமாறு கூறுங்கள்.

நண்பர்கள் எப்போதும் தேவை என்று கூறி நட்புப் பாராட்டக் கற்றுக் கொடுங்கள். யாராவது பின்தொடருவது போன்றிருந்தால், உடனே பயந்திட வேண்டாம் என்றும், ஒளிந்து நிற்கவேண்டாம் என்றும் சொல்லுங்கள். ஆபத்து ஏற்படப்போவதாக உள்ளுணர்வு சொன்னால், பக்கத்து வீட்டினரிடமோ, வியாபார நிறுவனத்தில் உள்ளவர்களிடமோ தயங்காமல் உதவி கேளுங்கள்.

அம்மா அழைக்கிறார், அப்பா அவசரமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று யார் அழைத்தாலும் உடனே அதை நம்பி விடவேண்டாம் என்று சொல்லுங்கள். உங்கள் குழந்தையின் உடலைப் பற்றிய விழிப்பு ணர்வை அவர்களிடம் ஊட்டுங்கள். யாரும் உடலைத் தொட்டாலோ, வேறு விதமான நடவடிக்கைகளில் இறங்கினாலோ உங்களிடம் கூற வேண்டும் என்று சொல்லிவையுங்கள்.



# உறவுக்குக் கைகொடுப்போம்

எம்.சடகோபன்

இன்றைய சமுதாயத்தில் எத்தனையோ பேர் தந்தை, தாய், சகோதரர், சகோதரி உறவைத் துறந்து, நட்பை இழந்து, சமுதாயத்தை மறந்து தனிமையாய் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கின்றனர். இவ்வாறு இருப்பவர்களில் பலர் வாழ்க்கை மீது வெறுப்படைந்து தவறான முடிவுகளை எடுக்கின்றனர். இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், மனிதன் மனிதனாக இல்லாமல் இருப்பதே முக்கிய காரணம்.

தந்தை-பிள்ளை உறவு, சகோதரர்கள் உறவு, குடும்ப உறவு என்று உறவுகள் விரிந்து செல்கின்றன. மரபணுத் தொடர்புடைய இவை அனைத்தும் தற்காலத்தில் நன்றாக இருக்கின்றனவா என்று கேட்டால் பெரும்பாலும் இல்லை என்றே பதில் வரும். இவை தவிர, தொழில்முறை உறவுகளும் உள்ளன. ஆனால், இந்த உறவுகளும் இப்போது பணத்துக்காகவும் பரஸ்பர தேவையின் அடிப்படையிலும் மட்டுமே செயல்பட்டு வருவதே உண்மை.

**குறுந்தகவல்களோடு முடியும் உறவு**

முன்பெல்லாம் உறவுகள் தரப்பில் ஏதேனும் நல்ல காரியங்கள் நடந்தாலும், துக்க காரியங்கள் நடந்தாலும் வண்டி கட்டிக் கொண்டு பல கிலோ மீற்றர் தூரம் சென்ற காலம் உண்டு. ஆனால், இப்போது ஒருவர் காலமாகி விட்ட தகவல் கிடைத்தால் வருந்துகிறோம் என்று குறுந்தகவல் அனுப்புவதைப் பார்க்கிறோம். பிறந்த நாள் விழா குறித்த தகவல் கிடைத்தால் பலர் தேடிப்பிடித்து பொம்மை, பூங்கொத்துப் படங்களை குறுந்தகவல் செய்தியில் இணைத்து வாழ்த்து அனுப்பிவிட்டு கடமையை முடித்துக் கொள்கின்றனர். இது தொழில்நுட்பப் புரட்சியின் விளைவுதான் என்பதை மறுப்பதற்கில்லை.

உறவினர்கள், நண்பர்கள் பேசிக் கொள்வதும் சமீப காலமாக மிகவும் குறைந்து வருகிறது. உறவுகளும், நட்புகளும் இன்பம் துன்பத்தில் பங்கெடுத்துக் கொள்வதும் அரிதாகி வருகிறது. இதனால், உறவு, நட்பு வலுவிழந்து விடுகிறது. இது நாளடைவில் தொலைந்துவிடும்.

**தனிமரம் தோப்பாவதில்லை**

தனி மரம் தோப்பாக முடியாது. மனிதனுக்கு உறவுகள் மிகவும் அவசியம். உற்றார், உறவினர்கள் இல்லாமல் வாழ்வு இல்லையே. அப்படிப்பட்ட உறவினர்களும், நண்பர்களும் உண்மையானவர்களாக இருந்தால்தானே மனிதனின் வாழ்வு செழுமை பெறும்.

உறவுகளுடன் வாழும் போது நல்ல முன் மாதிரியாக இருப்பது மிகவும் அவசியம். நல்லதொரு முன்மாதிரியைக் கொண்டிருக்காததால்தானே இன்றைய இளைஞர்கள் விளையாட்டு, சின்னத்திரை, வெள்ளித்திரை நாயகர்கள், நாயகிகளை தங்களது முன்மாதிரியாகக் கொண்டு மாய உலகில் வாழ்ந்து வாழ்க்கையை வீணாக்குகிறார்கள்.

மேலும், உடன் வாழ்வோர்களின் உறவும் சரிவர இல்லாமல் போவதாலும், நல்ல முன்மாதிரிகள் கிடைக்காததாலும் இளைஞர்கள் திசை மாறிச் செல்ல நேரிடுகிறது. இதனால், ஒட்டுமொத்தச் சமுதாயமே ஆரோக்கியமற்ற நிலைக்குத் தள்ளப்படு கிறது.

இன்பத்தை அனுபவிக்க எத்தனை, எத்தனையோ உறவுகள் கூடும். ஆனால், துன்பத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு எந்த உறவும் முன்வருவதில்லையே...! அண்ணன், தம்பி உறவுக்கு இலக்கணம் வடித்ததும், துன்பமான நேரத்தில் கை கொடுத்து உதவிய பக்தரை தம்பியாக்கியதும் தான் ராமாயணம் சொல்லும் பாடம்.

தேசம் மீது பாசம் கொண்டவர்களை தேசத்தந்தை என்றுதானே அழைக்கிறோம். நேசம் கொண்ட மாமனிதரை மாமா என்கிறோம், அறிவுரைவழங்கிய மூதாட்டியைப் பாட்டி என்கிறோம். அன்புக்கு இலக்கணம் கொடுத்த மாதரசியை அன்னை என்றுதானே உலகம் அழைக்கிறது. அருளைப் போதித்து வரும் போதகர்களை அப்பா, சகோதரன் என்றே சொல்கிறோம். பணிவிடை செய்யும் பெண்ணைச் சகோதரி என்கிறோம். இவ்வாறுதான் கற்காலத்திலும், அண்மைக் காலங்களிலும் உறவுகள் விரிந்தன. மனித வாழ்வு சிறக்க, நாடு செழுமை பெற உற வுகள் அவசியமாகின்றன.

எனவே, உரசல்களை ஒதுக்கி வைத்துவிட்டு, கோபத்தைக் குறைத்து, நாக்கை அடக்கி, பகைமை பாராட்டாமல், இனிமேல் வாழ்க்கைக்கு உத்தரவாதம் தருவதாக ஒவ்வொருவரும் சபதமேற்போம். உறவுகளின் இணைப்பை, தொடர்பை விரிவுபடுத்துவோம்.

> இன்பத்தை அனுபவிக்க எத்தனை, எத்தனையோ உறவுகள் முன்வரக் கூடும். ஆனால், துன்பத்தை பகிர்ந்து கொள்வதற்கு எந்த உறவும் முன்வருவதில்லையே...! அண்ணன், தம்பி உறவுக்கு இலக்கணம் வடித்ததும், துன்பமான நேரத்தில் கை கொடுத்து உதவிய பக்தரை தம்பியாக்கியதும் தான் ராமாயணம் சொல்லும் பாடம்.



தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


**மேடம்**: அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப் படும். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.


**இடபம்**: நீண்டநாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துக்கொள் வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர்ப் பய ணங்களால் சந்தோஷமடைவிர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.


**மிதுனம்**: எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளிலிருந்து வந்த தேக்க நிலை மாறும்.


**கடகம்**: வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளி யூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.


**சிங்கம்**:புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத் தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமைய டையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மன நிறைவு கிடைக்கும்.


**கன்னி**: எதிர்பர்ராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திற மையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தி யோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர்ப் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.


**துலாம்**: இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்து நீங்கும். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம்.


**விருச்சிகம்**: அநாவசியச் செலவுகளைக் குறைக்கப் பாருங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியா பாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள்.


**தனுசு**: புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்ப டுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.


**மகரம்**: வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்தி கரமாக இருக்கும். சகோதரவகையில் நன்மை பிறக்கும்.


**கும்பம்**: குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்ட மான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பய ணங்கள் மகிழ்ச்சி தரும்.


**மீனம்**: ஒரே முயற்சியில் முடிக்க வேண்டிய விஷயங் களைப் பல முறை அலைந்து முடிப்பீர்கள். உங்களைப் பற்றித் தவறாகச் சிலர் பேசினாலும் அதற்காக வருத்தப் படாதீர்கள்.

## சாதனை அல்லது உயர் வாழ்வுக்குப் பண்படுத்தல்




### விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

மிருக குணம் மேலோங் கினால்நீஇழிந்தநிலையை அடைவாய், பரிணாமம் மேலோங்கினால் முன் னேறுவாய்.

எனவே மிருக குணத்தைத் தலைதூக்க விடக்கூடாது. இது பற்றிய ஆராய்ச்சி இங்கே நம் உடலிலேயே நடைபெற வேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்க ளைச் சீர்திருத்துவதில்தான் நாம் சுறு சுறுப்புக் கொள்கிறோம். இங்குதான் சிக் கல். சீர்திருத்தம் முதலில் நமது உடலி லேயே தொடங்கப் பெறவேண்டும். இதயம், கல்லீரல் போன்ற எல்லா உறுப் புகளுமே மிருக குணம் படைத்தவை. இவற்றை உங்கள் மனத்தின் ஆதிக்கத் துக்குக் கொண்டு வாருங்கள்; உங்கள் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நடக்கச் செய்யுங்கள். உங்கள் ஆணைகளை நிறைவேற்றச் செய்யுங் கள். கல்லீரலை அடக்கியாளும் ஆற்றல் நமக்கு ஒரு காலத்தில் இருந்தது. அப்போது பசு அசைப்பது போல நாமும் நமது உடம்புத் தோலின் எந்தப் பகுதியை வேண்டு மானாலும் அசைத்துக் காட்டமுடியும். நீண்ட பயிற்சியின் மூலம் மீண்டும் இந்த ஆற்றலைப் பெற்றவர்கள் பலரை நான் கண்டிருக்கிறேன். ஒருமுறை இந்த ஆற் றல் ஏற்பட்டுவிட்டால் பிறகு மறை யாது. இப்போது மறைந்திருக்கும் கடல் போன்ற ஆற்றல்களைத் திரும்பவும் கொண்டு வாருங்கள். நமது முயற்சி யின், ஆராய்ச் சியின் முதல் பகுதி இது. நமது சமூகம் நன்கு வாழ இது முற்றிலும் தேவை. மாறாக, எந்த நேரமும் மன உணர்வு ஆராய்ச்சியில் மூழ்கியிருக்கக்கூடாது.

## இந்தோனேசியக் குகையில் அபாயம்; திகிலூட்டும் இரகசியம் அம்பலம்



இந்தோனேசியக் குகையில் புதைந்து கிடக்கும் சுனாமி பற்றிய நெஞ்சை அதிரவைக்கும் இரகசியம் தெரிய வந்துள்ளது. கடந்த 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேர லையால் நிகழ்ந்த கோரத் தாண்டவம், மக்களின் உள் ளங்களில் மறையாத வடுவைப் போல் பதிந்துவிட்டது. இந்தோனேசியா மட்டுமின்றி இலங்கை, இந்தியா போன்ற ஆசிய நாடுகளிலும் 2,30,000 பேரைக் காவு கொண்ட இந்தச் சம்பவத்தை அவ்வளவு எளிதாக யாராலும் மறக்க இயலாது. இந்தச்சோக நிகழ்வுகள் நடந்து 9 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. இந்நிலை யில் சுமத்ரா தீவில் அமைந்திருக்கும் ஏசஹ் மாகாணத்தில் குகை ஒன்று இருப்பது சமீபத்தில் கண்ட றியப்பட்டது. இந்தக் குகையில் மேற்கொண்ட ஆராய்ச்சி யில் பல திடுக்கிடும் தகவல்கள் தெரியவந்துள்ளன.

சுமார் 7500 ஆண்டுகளுக்கு முன் இந்தக் குகையை சுனாமி தாக்கியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள் ளன. குகையிலுள்ள மணற்படிவங்கள், சிப்பி ஓடுகள், எஞ்சியுள்ள நுண்ணிய உயிரினங்களின் மாதிரியைச் சேகரித்து கதிரியக்கக் கரிம ஆய்வு செய்ததில் 2004 இற்குமுன் 11 சுனாமிகள் ஏற்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1393 மற்றும் 1450 ஆம் ஆண்டுகளில் மிகப்பெரிய அசுர பூகம்பங்கள் ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் உறுதியாகக் கூறியுள்ளனர். இதில் கோடிக்கணக்கான மக்களுக்கு உயிர்ச் சேதம் நேர்ந்திருக்கலாம் என்றும் யூகிக்கப்படுகிறது.

இந்த ஆய்வு பற்றி ஆராய்ச்சியாளர் ரூபின், "கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்டதால் இன்னும் 500 வருடங்களுக்கு சுனாமி வர வாய்ப்பில்லை. ஆனால் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் உடனடியாக உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் இன் றைய காலக்கட்டத்தில் ஆழிப்பேரலைக்குத் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதால் உயிர்ச் சேதத்தைத் தவிர்க்க வாய்ப் புகள் உள்ளன" என்று தெரிவித்துள்ளார். இந்தக்கருத் தையே சிங்கப்பூர் குரூப், கேத்ரின் மொனெக்கெ போன்ற ஆராய்ச் சியாளர்களும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நாளை

மார்கழி-14
ஞாயிற்றுக்கிழமை 29.12.2013
திதி: துவாதசி மு.இ.11.42 வரை
நட்சத்திரம்:
விசாகம் பி.ப.03.39 வரை
சுபநேரம்:
09.28- 10.58 வரை
இராகுகாலம்:04.58 -06.28 வரை

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | | 2 | | 4 | | 3 | |
| | | 7 | 3 | | 6 | | 8 | |
| | | | | | | 4 | | 9 |
| 9 | | | 4 | | | | 7 | |
| | | 4 | 8 | | 7 | 5 | | |
| | 8 | | | | 9 | | | 2 |
| 5 | | 2 | | | | | | 3 |
| | 1 | | 6 | | 2 | 9 | | |
| | 6 | | 5 | | 8 | | 2 | 4 |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 1 | 2 | 9 | 6 | 4 | 7 | 3 |
| 6 | 7 | 9 | 4 | 5 | 3 | 8 | 2 | 1 |
| 3 | 4 | 2 | 7 | 1 | 8 | 6 | 5 | 9 |
| 2 | 5 | 7 | 6 | 3 | 4 | 1 | 9 | 8 |
| 8 | 9 | 6 | 5 | 2 | 1 | 7 | 3 | 4 |
| 1 | 3 | 4 | 8 | 7 | 9 | 2 | 6 | 5 |
| 9 | 6 | 5 | 1 | 4 | 2 | 3 | 8 | 7 |
| 4 | 2 | 3 | 9 | 8 | 7 | 5 | 1 | 6 |
| 7 | 1 | 8 | 3 | 6 | 5 | 9 | 4 | 2 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் [illegible] தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய [illegible]றுவன நிC[illegible]லி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சாதனை: 500 கி.மீ. தூரம் 50 பாகை உறைபனியில்



அந்தாட்டிக்கா கடற்கரையில் இருந்து தென் துருவத்துக்கு வேகமாகப் பயணித்துச் சென்று புதிய சாதனையை படைத்துள்ளார் லண்டனைச் சேர்ந்த ஒரு பதின்மப்பருவ இளைஞர். தென் துருவத்துக்கு இதுவரை பனிச்சறுக்கில் சென்றவர்களில் மிகவும் இளையவர் இவர்தான்.
சுமார் 500 கிலோமீற்றர் தூரத்தை வெறும் 18 நாள்களில் பயணித்து முடித்தார் 19 வயதான பார்க்கர் லியோடோ.
அந்தாட்டிக்கா உறைநிலைக்குக் கீழ் (மைனஸ்) ஐம்பது டிகிரி வெப்பநிலை உள்ள சூழலில், டிரான்ஸ்-அந்தாட்டிக்கா மலைத் தொடரை லியோடோவும் அவரது பயண அணியும் 80 கிலோவுக்கும் அதிகமான எடையுள்ள சக்கரமில்லாத பனிச் சறுக்கு வண்டிகளை இழுத்துக் கொண்டு கடந்து சென்றனர். காலநிலை மாற்றம் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிக்காக பனி மாதிரிகளையும் அவர்கள் சேகரித்துள்ளனர்.



# ஆண்களின் மூக்கு பெரிதாக இருப்பதேன்?

ஆண்களுக்கு ஏன் மூக்கு பெரிதாக உள்ளது? அதிகம் கோபப்படுவதாலா? இல்லை. அதிக அளவு பிராண வாயு தேவைப்படுவதாலேயே ஆண்களின் மூக்கு, அளவில் பெரிதாக இருப்பதாக அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.
அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வாளர்கள், மனித உடல் உறுப்புகளின் அமைப்புப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.
பொதுவாக பெண்களை விட, ஆண்களின் மூக்கு பெரிதாக அமைந்திருப்பதன் காரணம் குறித்து, கடந்த மூன்று ஆண்டுகளாக ஆய்வு நடந்து வருகிறது.
இந்த ஆய்வின் முடிவில், இதற்கான காரணம் விளக்கப்பட்டுள்ளது. ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வு முடிவில் தெரிவித்துள்ளதாவது. பொதுவாக பெண்களை விட, ஆண்களின் மூக்கு, 10 சதவீதம் அளவில் பெரியது. ஆண்களின் உடல் அமைப்பில் சதை அதிகம் உள்ளது.
இதன் வளர்ச்சிப் பெருக்கத்துக்கு, அதிக அளவு ஒக்சிஜன் தேவைப்படுகிறது. பெண்களின் உடலில், சதையை விட கொழுப்பு அதிகம் உள்ளது. ஆண்களை விட, பெண்களுக்கு சதை குறைவு என்பதால், அவர்களுக்கு ஆண்களை விடக் குறைந்த அளவிலான பிராண வாயு (ஒக்சிஜன்) போதுமானது.
ஆண்களுக்கு சுவாசிப்பதற்கு அதிகளவு ஒட்சிசன் தேவைப்படுவதாலேயே அவர்களது மூக்கு நீளமாக இருக்கிறது.

# ஐந்து வயதில் ஒரு தாய்



இந்தச் சம்பவம் நடந்தது இப்போதல்ல. எனினும் வினோதமான இந்தச் சம்பவம் பற்றிப் பார்ப்போம். 1934 ஆம் ஆண்டு பெரு நாட்டில் இந்தியப்பெண் ஒருவர் 3 அடி உயரமுள்ள ஒரு ஐந்து வயது நிரம்பிய சிறுமியைக் கூட்டிக் கொண்டு வந்தார். அந்தக் குழந்தைக்கு மருத்துவர் வயிற்றில்கட்டி என்று பரிசோதனைகளை மேற்கொண்டார். பரிசோதனையை மேற்கொண்ட மருத்துவருக்கு ஆச்சரியம். அந்த ஐந்து வயதுச் சிறுமியின் வயிற்றில் 8 மாதங்கள் நிரம்பிய சிசு இருந்தது! மருத்துவரின் உதவியுடன் சிறுமி பெரு நாட்டின் தலை நகரில் உள்ள பெரிய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டாள். விசேட கவனிப்பில் இருந்த அந்த சிறுமி ஒன்றரை மாதங்களின் பின் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்! குழந்தை 2.7 கிலோகிராமுடன் ஆரோக்கியமாகப் பிறந்தது. (40 வயதில் எலும்பு மச்சையில் ஏற்பட்ட புற்று நோயினால், சாவடைந்தது.) ஆரம்பத்தில், பிறந்த குழந்தை அவரது தம்பியாக இருக்கும் என மருத்துவர்கள் ஊகித்தார்கள் (பெண் குழந்தையின் வயிற்றில் இன்னோர் குழந்தை தங்கும் சம்பவங்கள் நடப்பதுண்டு. எனினும் அக் குழந்தை இறந்த உடலாகவே தங்கும்.) ஆனால், மருத்துவ பரிசோதனைகளில் அக் குழந்தை அச் சிறுமியின் குழந்தை தான் என உறுதிப்படுத்தப்பட்டது. சிறுமியின் கர்ப்பத்திற்கு காரணமானவர் கண்டுபிடிக்கப்படவில்லை. சிறுமியால் அடையாளம் காட்டப்படவுமில்லை. சிறுமியின் தந்தை சந்தேகத்தின் பெயரில் கைதாகினார். எனினும், பல மருத்துவ சான்றுகளின் உதவியுடன் அவர் மீது தப்பு இல்லை என்பது நிரூபணமாக்கப்பட்டது. 1972 இல் வேறு ஒரு நபரைத் திருமணம் முடித்த அந்த பெண் (சிறுமி) இன்னோர் குழந்தையைப் பெற்றெடுத்தார்.


# ஒரு கையால் ஓசை எழுப்பும் மாணவி

### கின்னஸ் சாதனைக்கு முயற்சி

ஆந்திராவில், ஒரு கையால் ஓசை எழுப்பும், மாணவி கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் தமது பெயர் இடம்பெற விரும்புகிறார். நிஜாமாபாத் நகரில், இன்ஜினியரிங் கல்லூரி ஒன்றில், பயின்று வருகிறார் சவுஜன்யா. ஒரு கை ஓசை தராது; இரண்டு கைகள் சேர்ந்தால் தான் ஓசை எழும் என்ற பழமொழியையே இவர் செல்லாததாக்கி விட்டார். தன் கையைத் தானே, உள்நோக்கி மடக்கி, கையின் உட்புறத்தில் தட்டி, ஓசையை எழுப்புகிறார். 1 நிமிடத்துக்கு, 300 முறைக்கும் மேலாக, ஒரு கையால் அவர் தட்டுகிறார். இதை நிமிடத்துக்கு, 360 தடவைகளாக உயர்த்த வேண்டும் என இவர் விரும்புகிறார்.



அதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டுள்ள சவுஜன்யா, கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறத் துடிக்கிறார். உலகில் ஒரு சிலரே ஒரு கையால் ஓசை எழுப்புகின்றனர் என்பதால், கின்னஸ் சாதனை புத்தகத்தில், சவுஜன்யாவின் பெயரும், விரைவில் இடம்பெறும் எனத் தெரிய வருகின்றது.



# நினைவஞ்சலி வைரம்

தமது அன்புக்குரியவர் இறந்துபோக நேரிட்டால் அவரது நினைவைப் பாதுகாக்க மக்கள் பலவிதமான செயல்களில் ஈடுபடுவர். ஆனால் இதுவரை கேட்டிராத புதிய முறையாக தனது இறந்துபோன மகனின் சாம்பரை வைரமாக மாற்றியுள்ளார் இத்தாலியத் தந்தையொருவர்.
சுவிட்சர்லாந்து நாட்டில் இறந்துபோனவரை எரித்தபின் கிடைக்கும் சாம்பரில் உள்ள கார்பனைப் பிரித்தெடுத்து ஒரு அறையில் பாதுகாத்து, அதன்பின் அதிக அழுத்தம் மற்றும் எரிமலையை ஒத்த வெப்பத்தை அந்த அறைக்குள் செலுத்துவதன் மூலம், அதனை வைரமாக மாற்றுகின்றனர்.
இந்த நினைவஞ்சலி வைரம் செய்யப்படுவதற்கு 18,000 டாலர் செலவாகும் என்று உள்ளூர் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருந்தது.
இத்தாலியின் வடக்குப்பகுதியில் உள்ள டிரேவிசோ என்ற நகரில் வாழ்ந்துவரும் 55 மதிக்கத்தக்க செல்வந்தர் ஒருவரின் 20 வயது மகன் இந்த ஆண்டு ஆரம்பத்தில் கார் விபத்து ஒன்றில் இறந்துபோனான். அவனது உடல் சொந்த ஊரிலேயே புதைக்கப்பட்டது. அதன்பின்னரே அவருக்குத் தனது ஆசை மகனை என்றென்றும் அருகில் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.
இதனால் புதைக்கப்பட்ட அவனது உடல் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டு எரிக்கப்பட்டது. எரித்தபின் கிடைத்த சாம்பரைச் சேகரித்து அந்தத் தந்தை சுவிட்சர்லாந்துக்கு அனுப்பினார். சரியாக எட்டு மாதங்கள் கழிந்த நிலையில் அவரது மகனின் நினைவஞ்சலி வைரம் அண்மையில் அவருக்குக் கிடைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட பெறு பேறுகள் வருமாறு:-

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கணிதம்**

தங்கவடிவேல் சிவதாஸ்-3ஏ, ராசேந்திரன் கிருஷ்ஷிகா-3ஏ, தர்மராஜா தர்ஷிகன்-2ஏபி, சிவசுப்பிரமணியம் செந்தூர்குமரன்-3பி, சண்முகானந்த சர்மா விசாகன்-ஏ2பி, வீரவாகு ராஜ்குமார்-ஏ2பி, பாலகிருஷ்ணன் சத்திய குகன்-3பி, பாலகுமார் பரந்தாமன்-3பி, ராஜேஸ்வரசர்மா நித்தீஸ்ராம்-3பி, நடராஜா பிரதீபன்-2பிசி, நந்தகுமார் கேகஜன்-2பிசி, அருளானந்தம் விமலினி-பி2சி, உலகநாதன் கிருத்திகா-பி2சி, இராமநாதன் கீர்த்தனன்- பி2சி, கணபதிப்பிள்ளை கஜசுமணி- பி2சி.

**உயிரியல்**

ஜோகநாதன் கௌதமி-ஏ2பி, கிருஷ்ண உதயலிங்கம் டிலக்ஷனா-3பி, நல்லதம்பி கஜீபன்-ஏபிசி, மகேந்திரன் கேதாரணி-2பிசி, புவனேந்திரன் ஜென்சி-பி2சி, கனகராஜா அபிராமி-2பிசி, சிவானந்தம் தபிரா-2பிசி, திருநாவுக்கரசு துர்க்கா-பி2சி.

**வர்த்தகம்**

ஜெயகுமார் கஜேந்திகா-2ஏபி, புஸ்பகரன் ஜெயவிகிர்தா-2ஏபி, தங்கராசா துஜீவா-2ஏபி, செல்லத்துரை நிஷாந்தினி-2ஏபி, சிறிசந்திரன் அபிவர்ணா-ஏ2பி, பரமநாதன் பிரதீபா-3பி, பத்மலிங்கம் அபிவர்ணா-3பி, சிவபாலன் கஜானி-2பிசி, பரந்தாமன் கார்த்தீபன்-2பிசி, சற்குணநாதன் சஜீசன்-பி2சி, விசாகரெத்தினம் சங்கீர்த்தனன்-பி2சி, சின்னராசா வினோஜன்-பி2சி, பாலசுந்தரம் சதீஸ்கரன்-பி2சி.

**கலை**

துரைநாதன் வின்சன்-3ஏ, சிவராசா கமலதீபன்-3ஏ, மகேஸ்வரன் சுஜிதா-2ஏபி.பரிகரன் நிதுர்ஷன்-2ஏசி, யோகநாதன் நிர்ச்சனா-ஏ2பி, முருகமூர்த்தி கிருத்திகா-ஏ2பி, சிறிதர் இந்துசா-3பி, சுந்தரலிங்கம் பிரதீபா-ஏபிசி, சிவசுப்பிரமணியம் பிந்துயன்-ஏ2பி, பத்மநாதன் மோகனரதி-ஏபிசி, கணேசலிங்கம் வண்ணமதி-ஏபிசி, நடராஜா யசிந்தன்-ஏபிசி, கிருஸ்ணபிள்ளை விஜயதரன்-ஏபிசி, சத்தியசீலன் கம்சிகா-3பி, கவீந்திரன் சுகிர்ணா-ஏபிசி, முருகதாஸன் லக்ஷியா-ஏ2பி, சிறிதரன் தினேஷிகா-3பி, கைலாயபிள்ளை நிஜிந்தினி-ஏபிசி, செல் வரட்ணம் தர்மிகா-ஏபிசி, வித்தியநாதன் சொரூபினி-ஏபிசி, ஆறுமுகம் குகதாசன்-ஏபிசி.

**யாழ்.மத்திய கல்லூரி**

**கணிதம்**

எஸ்.கஜீவன்-3பி, ஜீ.ராகுலன்- 2பிசி, எஸ்.டிலக்ஷன்-பி2சி, எஸ். அனோஜன்-பி2சி, எஸ்.கிருஷாந்தன்-3எஸ், ஆர்.யதுர்சன்-3சி, டபிள்யூ. பெனாஜா-ஏ2பி.

**உயிரியல்**

கே.தஜீவன்-2சிஎஸ்,கே.சிந்துஜன்-3ஏ, பி.துஷாந்-3ஏ, ஏ.தனுசன்- 2ஏபி, கே.சுதர் சன்-ஏபிசி.

**வர்த்தகம்**

ஜெ.அன்ரனி பிளின்ரன்-3பி, எம்.பாலேந்திரா-2பிசி, கே.மயூரன்-பி2சி, ஆர்.மதிரூபன்-பி2சி, எஸ்.கவிஷாந்தன்-ஏபிசி, எஸ்.பவிலராஜ்-2ஏபி, ஏ.டினோஷ்ரன்-2ஏசி, எஸ்.சஞ்சீவன்-ஏசிஎஸ், ஏ.சயந்தன்-2பிசி.

**கலை**

பி.டார்வீன்-ஏபிசி, எம்.பவில்-ஏ2எஸ், எஸ்.கர்சன்- ஏசிஎஸ், ஆர்.நாதீஸ்-2ஏசி, ரி.கொலின்ரன் - ஏபிஎஸ். (ந)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை

திருமதி இந்திராணி சிவனடியான் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி பதஞ்சலி கந்தையா**

அவர்கள் காலமானதை அறிந்து கவலையடைவதோடு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி! (41719)2.6.3

**யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியவட்டம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

**பத்மாவதி சிவரத்தினம்**



மண்மகிழ 05.04.1940

கண்நெகிழ 28.11.2013

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
குவலயத்தே மிளிர்ந்தீரே
கூரறிவு கொண்டவராய்
எமையென்றும் வளர்த்தீரே
பாரினிலே பண்புயர் தெய்வமாய்த் திகழ்ந்தீரே
பல்லாண்டு சென்றிடினும் மறவோம் உம்மை.
ஓம் சாந்தி.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

(41686) (7.6.3)

## ஒன்று கூடலும் கௌரவிப்பும்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலும், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்துகொள்வார். பிரதேச செயலக ஊழியர்களின் கலை நிகழ்வு களும் இடம்பெறும். (ஒ-9)

## வலய மட்ட இடமாற்றம்

வடமராட்சி கல்வி வலயத்தில் பாடசாலையொன்றில் தொடர்ச்சியாக 7 வருடங்கள் சேவை செய்த 53 வயதுக்குட்பட்ட ஆசிரியர்கள் வலய மட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி முதலாம் தவணை ஆரம்பமாகும்போது இந்த இடமாற்றம்நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (ந-8)

## 31ஆம் நாள் நினைவுகளில் நிறப்பவை



எமது இல்லத்தரசி

திருமதி

**கனகம்மா குணரட்ணம்**

தோற்றம் 20.04.1944

மறைவு 28.11.2013

எம் குடும்பத் தலைவியே! குத்து விளக்கே! அன்புத்தெய்வமே அம்மா! எம்மை ஆதரவுடன் அணைத்த கரங்கள் எங்கே அம்மா! ஆசை வார்த்தை கூறும் அன்பு மொழிகள் எங்கே அம்மா! உங்கள் அன்பு வதனம் எங்கே அம்மா! உங்கள் விதியால் நீங்கள் பட்டபாடு எம் நெஞ்சை உருக்குதம்மா! நீங்கள் இல்லாத வீடு வெறிச்சோடிக்கிடக்குதம்மா!

பெற்றவர்களுக்கு நல்ல பிள்ளையாய்! கணவனுக்கு ஏற்ற மனைவியாய்! பிள்ளைகளுக்கு ஏற்ற அன்னையாய்! மருமக்களுக்கு ஆதரவு காட்டும் நல்ல மாமியாய்! பேரப்பிள்ளைகளுக்கு பெற்ற அன்னை போல்! உறவினர்களுக்கு அன்பு காட்டும் பெண்மணியாய்! வாழும் போது ஒளி வீசிய நிலவு நீங்கள் அம்மா! நாங்கள் எத்தனை பணிகள் செய்திருப்பினும் நீங்கள் எமக்குச் செய்த பணிக்கு ஈடாகுமா அம்மா! நாம் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நீங்களே எம் தாயாக வேண்டுமம்மா!!!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.12, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி. (41698)(3.6.4)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மார்கழி மஹோற்சவ ஆடலரங்கம்

நர்த்தனஷேத்திராவின் மார்கழி மஹோற்சவ ஆடலரங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத் தூது கலையரங்கில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் நிருத்தியார்ப்பணம், மட்டக்களப்பு பரத கலாலயா வழங்கும் மோகினி ஆட்டம், நர்த்தனஷேத்திரா கனிஷ்ட மாணவர்களின் 'உதித்தனன் உலகம் உய்ய' நடன நாடகம் என்பன இடம்பெறும். (ந)

## மரண அறிவித்தல்கள்

### பேரம்பலம் சிவபாதம்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தையும், கொழும்பையும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் சிவபாதம் 25.12. 2013 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம் பலம்- பரமேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட மக னும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம்- அன்னமுத்து தம்பதியரின் மருமகனும், சேரலாதன், ஞானமோகன், பிரணவன் (கனடா) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், அனிதா, கீர்த்திகா ஆகியோரின் மாமனும், சங்கரநாராயணன், சம்பகலதா, கீர்த்திகா, தாழபூரிசன், விஸ்வன், நிமாகி ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 26.12.2013 வியாழக்கிழமை தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மனைவி, பிள்ளைகள்.**

(2.6.3)(41721) தொ.பே. 078 562 8850, 077 444 9729

### கந்தசாமி ஜெயரட்ணம்



வீரபத்திரர் கோயிலடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஜெயரட்ணம் 23.12.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நவமலரின் அன்புக் கணவரும், வசீகரன் (கனடா), உமாசுதா (ஆஸ்திரேலியா), கிரிஷாந்தி (லண்டன்), கோவர்த்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணரட்ணம் (கனடா), அரசரட்ணம் (கனடா), பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்), குலேந்திரன் (கனடா), கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருந்தவராஜா, பூமலர், நாகேஸ்வரி, சோதிமலர், ராணிமலர், நடராசா, ஆனந்தராசா, காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, வியாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தவயோகேஸ்வரி (கனடா), ஸ்ராலின் (லண்டன்) ஆகியோரின் மாமனும், வர்ஷிகா (கனடா), அஸ்வின் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2013) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கரும்பாவி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(2.6.3)(43025)

வீரபத்திரர் கோயிலடி,
உடுப்பிட்டி தெற்கு, உடுப்பிட்டி.

**தகவல்: குடும்பத்தினர்.**
தொ.பே. 021 205 5883, 077 907 7055

### ஐறின் புஸ்பகுமாரி பிளசிடஸ் (RATHY)



யாழ்.சில்லாலையைப் பிறப்பிடமாகவும், அவரிவத்தை, வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐறின் புஸ்பகுமாரி பிளசிடஸ் (RATHY) 26.12.2013 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் பிலிப்பையா மற்றும் மேரி திரேசா புஸ்பம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான இம்மானுவல் ஆரோக்கியசாமி தம்பதியரின் மருமகளும், A.J.பிளசிடஸ் அவர்களின் ஆசை மனைவியும், எல்மோடினேஸ், எல்மிடிலக்ஷி (CANADA) ஆகியோரின் அருமைத் தாயாரும், றொசான் (CANADA), சர்மினி(CANADA) ஆகியோரின் அன்பு மாமி யாரும், லிடியாவின் பேர்த்தியும், அன்ரன் புஷ்ப குமார் (BABA-CANADA), டெனிஸ் ஜெயந்தகுமார்(BABI-CANADA), நொயலின், ஜெயக்குமாரி (REGI-NORWAY), அருட்சகோதரி டொறின் (திருக் குடும்பக்கன்னியர்மடம், யாழ்ப்பாணம்), டொறிஸ் சாந்த குமார் (RAVI-HOLLAND), பொலின் விஜியகுமாரி(VIJI-NORWAY) ஆகி யோரின் சகோதரியும், மேரிபுஷ்பராணி(CANADA), ஷாமலின் பென டிக்ரா (CANADA), அன்ரனி ஜெயசீலன்(NORWAY), நந்தினி (HOLLAND), அன்ரன் ஜோசப் (NORWAY), காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை, லூக் ஆரோக்கியசாமி மற்றும் பத்திமா லூக், S.சவரிமுத்து, மேரிமாட்டீனா கமலா சவரிமுத்து, A.E. நவரட்னராஜா, காலஞ்சென்ற ராஜிநவரட்னராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.12.2013 வியாழக்கிழமை முதல் 115/8, அவரிவத்தை வீதி, வத்தளை என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (29.12. 2013) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் வத்தளை கத்தோலிக்க சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(41697)(3.6.4)

தொடர்பு:
A.J.பிளசிடஸ் தொ.பே.+941 129 37320 கை.பே.+947 751 03823
எல்மோ டினேஸ் செல்லிடப்பேசி:+947 738 18947
எல்மி டிலக்ஷி செல்லிடப்பேசி: +947 782 96208

தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### டேவிட் இராஜேந்திரன்



யாழ். பாஷையூரைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிட் இராஜேந்திரன் லண்டன் மருத்துவமனையில் 19.12.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாவியார் தீயோ முடியப்பு இராஜேந்திரன்-அஞ்சலினா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான யுவக்கீம்பிள்ளை-மரியை தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராவின் அன்புக் கணவரும், சந்திரகுமார், றூபி, இராஜேந் ஆகியோரின் அன்புத் தந்தையும், சட்டத்தரணி T.M. அன்ரனிப்பிள்ளை, M.அல்போன்சஸ், திருமதி பிபியானா அன்ரனி, திருமதி யூலியானா பிறின்ஸ், M. பிரான்சிஸ், M. யோசவ், M. வெனான்சியஸ் ஆகியோன் அன்புச் சகோதரனும், யுவக்கீன் வில்சன், P.P.அன்ரனி எட்வேட், திரேசா அன்ரனிப் பிள்ளை, P.P.கேபிரியேல் பிறின்ஸ், எட்னா அல்போன்சஸ், வசந்தா பிரான்சிஸ், இமெல்டா யோசவ், சாந்தி வெனான்சியஸ், அருட்தந்தை P.P.பிலிப் அ.ம.தி, காலஞ்சென்ற P.P.மத்தியூஸ் (ஆசிரியர்) மற்றும் P.P.செபஸ்ரியன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருசாந்தா, ஓரலின்- சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், றொபின், அக்சேல் ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் பூதவுடல் லண்டனில் (30.12.2013) திங்கட்கிழமை ஆத்மசாந்தி திருப்பலியின் பின் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 14, 2ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
T.P. No. 021 222 3179 (41696)(7.6.3)

தகவல் :
**P.P.கேபிரியேல் பிறின்ஸ்**
*(மைத்துனர்)*

# ஆழிப்பேரலை நினைவுப் பதிவுகள்

ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்ட ஆயிரக்கணக்கானோரின் ஒன்பதாம் ஆண்டு நினைவு தினம் வியாழக் கிழமை நடைபெற்றது. இதன்போது வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு, வலி.மேற்கு பிரதேசங்களில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

**மணற்காட்டில்**

72 பேரை அடக்கம் செய்த மணற்காடு நினை வாலயத்தில் மணற்காடு பங்குத் தந்தை அருட் திரு ஜே.எல்மோ தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் காலை 6 மணி முதல் 8.30 மணி வரை ஆன்ம ஈடேற்ற பிரார்த்தனை இடம்பெற் றது.

தொடர்ந்து பொதுச்சுடரை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய முன்னணியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மணற்காடு, சக்கோட்டை கரவெட்டிப் பங்குத் தந்தையர்களான ஜே.எல்மோ அடிகள், எஸ்.நிருபன் அடிகள், எமில்போல் அடி கள் ஆகியோர் ஏற்றினார்கள். தொடர்ந்து 72 பேரின் நினைவிடங்களில் மலர்மாலை அணிவித்து தீபங்கள் ஏற்றி உற்றார் உறவினர்கள் கண்ணீர் விட்டு அழுது புலம்பினார்கள். அந்தப் புலம்பல் பரந்த வெளி காற்றோடு சங்கமமானது.

**தாளையடியில்**

தாளையடியில் 8 பேரை அடக்கம் செய்த அந்தோனியார் கோயிலடியில் பிரதான வீதியுடன் உள்ள நினைவுத் தூபியில் காலை 8.30 மணிக்கு பிரார்த்தனை வழிபாடுகளில் உறவினர்கள், நண்பர்கள் ஈடுபட்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

**கட்டைக்காட்டில்**

கட்டைக்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் கட்டைக்காடு கிராமத்தில் காவுகொள்ளப்பட்டோருக்கான நினைவுத் தூபி ஒன்று புதிதாகக் கட்டப்பட்டிருந்தது.

அந்த தூபியில் அந்தக் கிராமத்தில் காவுகொள்ளப்பட்ட 45 பேரின் புகைப்படங்கள் வைக்கப்பட்டிருந் தன. முற்பகல் 10 மணியளவில் தாளை யடி பங்குத் தந்தை அருட்திரு. எம்.பி. யேசுரட்ணம் நடத்திய விசேட பூசைப் பிரார்த்தனையைத் தொடர்ந்து 55 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி தூபியைத் திறந்து வைத்தார். தொடர்ந்து பொதுச் சுடர் ஏற்றப்பட்டு உறவினர்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

**வடமராட்சி வடக்கில்**

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் உள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் ஆழிப் பேரலையில் காவு கொள்ளப்பட்டோரின் நினைவாக விசேட பூசைகள் வழிபாடுகள் உறவினர்களால் நடத் தப்பட்டன. பருத்தித்துறையில் உள்ள மெதடிஸ்த திருச்சபையின் நேசகத்தில் அருட்திரு. றெஜினோல்ட் ஈஸ்வரன் தலைமையில் ஆன்ம ஈடேற்றப் பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெற் றன.

**வலி.மேற்கில்,**

வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற் றது.

பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் வி.சிவ குமார் கலந்துகொண்டார்.

ஆசியுரையை சித்தன்கேணி சிவ சிதம்பரேஸ்வரர் ஆலய பிரதம குரு பிரம்ஸ்ரீ. வாசுதேவ குருக்களும் வண. பிதா அன்ரனியும் வழங்கினர்.

ஆழிப்பேரலை தொடர்பான 1000 இற்கும் மேற்பட்ட ஊடகத் தொகுப்புக்களை தொகுத்து காட்சிப்படுத்திய வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் நூலகர் மாணிக்கம் கணேஷ் சேவையை பாராட்டி "வரலாற்றின் ஆவண காப்பாளர்" என்ற சிறப்புப் பட்டமும் உயர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மாணிக்கம் கணேஷின் சேவையைப் பாராட்டி யாழ்.செயலக இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் ஆழிப்பேரலையின் 1000 தொகுப்பு கண்காட்சியை, பார்வையிட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. (ரு-8-50)



கொழும்பில் நடைபெற்ற 2013ஆம் ஆண்டுக்கான அரச சிறுவர் நாடக விழாவில் மட்டுப்படுத்தப்பட்ட பிரிவில் "பெத்தம்மா" நாடகத்தில் நடித்த யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவிகளான வி.சதுர்த்திகா இந்த ஆண்டின் சிறந்த நடிகையாகவும், ஆ.தர்மிதா சிறந்த துணை நடிகையாகவும், திறந்த பிரிவில் "வாழ்வோம் வளர்வோம்" நாடகத்தில் நடித்த க.ஓவியா இந்த ஆண்டின் சிறந்த நடிகையாகவும் தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர். இவ்விரு நாடகங்களையும் நெறியாள்கை செய்தவர் யாழ்.கல்வியியற்கல்லூரி நாடகத்துறை விரிவுரையாளர் க.இ.கமலநாதன். (ஓ)

# உதவும் நெஞ்சங்கள் நற்பணி மன்றம் ஆரம்பம்

உதவும் நெஞ்சங்கள் கனகராயன்குளம் என்ற நற்பணி மன்றம் ஒன்றை அண்மையில் தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் துஸ்யந்தன் கனகராயன்குளத்தில் ஆரம்பித்து வைத்துள் ளார்.

உதவும் நெஞ்சங்கள் கனகராயன்குளம் என்ற நற்பணி மன்றத்தின் தலைவராக சி.சியாந்தன், செயலாளர் யோ.நிதர்சன், உபதலைவர் ஆ.சசிநாத், உபசெயலாளர் அனோசன், பொருளாளர் சி.நிலக்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக கஜிவன், அருந் தவன், தவநீதன், மிதுரசன், சதீஸ்குமார், சுதர்சன், சுஜிதன், தர்சன், சிறிகாந், தனு சன், பார் தீபன், கன்ஸ் ரன் மற்றும் வி.தர்சன் ஆகி யோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் துஸ்யந்தன் தெரிவித்ததாவது:

நாங்கள் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 காலப்பகுதி வரை சமூகப்பொருளாதார நிறுவ னம் என்ற நிறுவ னத்தை உருவாக்கி வடக்கு கிழக்கு உட்பட பல பகுதிகளில் பெரும் செயற்றிட் டங்களையும் வறிய மக்களுக்கு பலதரப்பட்ட உதவி களையும் செய்து வந்தோம். மீண்டும் 2003 ஆம் ஆண் டுக்குப் பிற்பட்ட காலப் பகுதியில் ஈரோஸ் அமைப்பு மூலமாக வும் சுயமாகவும் குறிப்பாக வன்னிப் பகுதியில் பாடசாலை மாணவருக்கான உதவிகள், வறிய மக்களுக்கான உதவிகள் போன்றவற்றையும் அரசியல் ரீதியாகவும் மக்களுக்காக இன்றுவரை சேவையாற்றி வருகின்றோம். எமது சேவையை வலுப்படுத்தும் முகமாக இந்த நற்பணி மன்றத்தை ஆரம்பித்து வறிய மாண வர்களின் கல்வியையும் வறிய மக்களின் பொருளாதாரத்தையும் மேலுயர்த்துவதே எமது முக்கிய குறிக்கோளாகும் என அவர் மேலும் தெரி வித்தார். (ரு-421-402)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

**சுப்பிரமணியம் பசுபதி (மாமா)**



தோற்றம்
06.11.1935
மறைவு
26.11.2013

திதி: 28.12.2013

கடந்த 26.11.2013 ஆம் திகதியன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (28.12.2013) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அவ்வமயம் தாங்கள் தங்களது குடும்பத்தாருடன் சமுகம் தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது பிரிவுச் செய்திகேட்டு உடன் வந்தும் அனுதாபச் செய்திகள் ஊடாகவும் ஆறுதல் கூறியோருக்கும். அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா இறைவனடியில் இளைப்பாறிச் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

ச.உதயகுமார் (மருமகன்)
(C/10807) (2.6.3) பிரசாத் நகை அகம், யாழ்ப்பாணம்.



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**அருணாச்சலம் திருநாவுக்கரசு**

திதி : ஏகாதசி (28.12.2013)

தோற்றம்
04.12.1943

மறைவு
07.01.2013

ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததையா
மறையாது உம் நினைவு ஆறாது எம்துயரம்
இன்னும் சிலகாலம் எங்களுடன் வாழ்ந்திருப்பீர்கள்
என்று கனவு கண்டோம்
காலன் உங்களைவிட்டு வைக்கவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர் கந்தனின்
அருள் வேண்டி நிற்கின்றோம்.

541/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

மனைவி
021 222 0036

(சி/10808)(7.6.3)



# 8 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி

**பிரகாசம் கிறேஸ்**

(உப தபாலதிபர் - சூரியகட்டைக்காடு நானாட்டன், மன்னார்)



மண்ணில் 17.08.1961
விண்ணில் 20.12.2013

(20.12.2013) அன்று சிவபதமடைந்த எமது பிரகாசம் கிறேஸ் அவர்களின் இறுதி நல்லடக்கத்தில் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் மலர்வளையம் வைத்து அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி ஊடாக அனுதாபச் செய்திகளை தெரிவித்தும் எமது துயரில் பங்கெடுத்தவர்களுக்கும், இவர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளில் இருந்த வேளையில் உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் செப உதவி செய்தவர்களுக்கும் வைத்தியசாலைகளில் சிகிச்சை அளித்த மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்களுக்கும் பூதவுடலை எமது இல்லத்திற்கு பெற்றுத் தர உதவி புரிந்த நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (28.12.2013) காலை 7.00 மணிக்கு கட்டைக்காடு புனித செபஸ்தியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

சூரியகட்டைக்காடு,
நானாட்டான்.
T.P: 077 369 2201,
077 489 0660

குடும்பத்தினர்.

(7.6.3)


## ஆன்மிக வதிவிட முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் உபநிடதத்தைக் கருப்பொருளாகக் கொண்டு பெரியோர்களுக்கான ஆன்மிக வதிவிட முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா மாவட்ட ரம்போடை ஸ்ரீ பக்த ஹனுமான் ஆலயத்தில் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைத்தன்ய தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-14)

## பாராட்டு விழாவும் மாணவர் கௌரவிப்பும்

சிவஸ்ரீ கமல்ராஜ் குருக்களுக்கான பாராட்டு நிகழ்வும், மாணவர் கௌரவிப்பும் நல்லை ஆதீனத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்துவார். (ந)

## திருவாசகம் முற்றோதல்

சுழிபுரம், டிசெ.28

சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமி ஆலயப் பெரிய தம்பிரான் கோயிலில் திருவாசகம் முற்றும் ஓதுதல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. மதியம் அன்னதான மும் நடைபெறும். (ந-28)

## ஆறாம் வகுப்புக்கு மாணவரை இணைத்தல்

தென்மராட்சி, டிசெ.28

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆறாம் வகுப்பில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான பதிவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

கல்லூரியில் இணைவதற்கு விண்ணப்பித்த மாணவர்களை உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு அதிபர் அ.கயிலாயபிள்ளை அறிவித்துள்ளார். (ந- 9)

## 9 அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

பளை, டிசெ.28

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அடுத்த வருட வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் சபை நிதியிலிருந்து 9 அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அலுவலகங்களுக்கு கணினி, தளபாடங்கள், உபகரணங்கள் கொள்வனவு, இயக்கச்சி உப அலுவலக மலசலகூடம் திருத்தம், தலைமை அலுவலகத்துக்கு நீர் விநியோகம், பளை பொதுச் சந்தை புனரமைப்பு, மயானம் புனரமைப்பு, சனசமூக நிலையங்களுக்கு தளபாடம் வழங்கல், நூலக தளபாடக் கொள்வனவு, புத்தக இறாக்கைகள் மற்றும் புத்தகங்கள் கொள்வனவு ஆகியவற்றுக்கு மொத்தமாக 22 லட்சத்து 850 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் 22 வேலைத் திட்டங்களுக்கு 16 கோடியே 68 லட்சம் ரூபாவுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-9)

## பஜனைக் குழுவினர் கௌரவிப்பு

யாழ்.வண்ணை வைத்தீஸ்வரர் ஆலய பஜனைக் குழுவில் இணைந்து திருவெம்பாவை திரு வீதிப் பஜனையில் கலந்து கொண்ட மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு திருவெம்பாவை இறுதி நாளில் ஆல யத்தில் நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு விக்னேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் மாணவர்களுக்குப் பரிசில்களை திருமதி கந்தப்பச் செட்டியார் வழங்கினார்.

பஜனையை வழிநடத்திய நா.கோபால கிருஷ்ணனுக்கு ஆலயக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌர வித்தார். (ந)

* * *

திருவெம்பாவை திரு வீதிப் பஜனையில் கலந்து கொண்ட யாழ்.வண்ணை வைத்தீஸ்வரர் ஆலய பஜனைக் குழுவினர் இணைந்து கௌரவிக்கப்பட்டனர். திருவெம்பாவை இறுதி நாளில் வெள்ளாந்தெரு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய நிர்வாகிகளால் ஆலயத்தில் வைத்து கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது. இதன்போது திருவீதி பஜனையில் கலந்து கொண்ட மாணவர்களை ஊக்குவிக்கும் முக மாக சண்முக ரெத்தினம் ராஜன் என்பவரால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (ந)

## வினைத்திறன் பரீட்சைகள் இன்றும் நாளையும்

வடமராட்சி, டிசெ.28

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை இன்று சனிக்கிழமையும்,

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை இன்றும் நாளையும் கொழும்பில் நடைபெறவுள்ளன.

அத்துடன் அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் பயிலுநர் வங்கி உதவியாளர் பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக் கிழமையும் கொழும்பில் நடைபெறவுள்ளது. (ந-8)

## விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி, டிசெ.28

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவினால் இளைஞர் யுவதி களுக்கான ஆடைவடிவமைத்தலும்கைவேலைப் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம் பிக்கப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அந்தந்த கிராம அபி விருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களில் பெற்று 30 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித் துள்ளார்.

பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோருக்கு மாதாந் தம் ஊக்குவிப்புப்படி வழங்கப்படுமெனவும் பயிற்சிகள் 6 மாதங்கள் நடைபெறுமெனவும் அறிவித்துள்ளார். (ந-9)


# ஓராண்டு ஓடிப்போனதே

திருமதி

**கமலாம்பிகை செல்லக்கிளி**

(ஓய்வுபெற்ற பரிசாரகர் யாழ்.போதனா வைத்தியசாலை)



திதி: அபரபக்க ஏகாதசி 28.12.2013

மலர்ந்தது 01.08.1941
உதிர்ந்தது 08.01.2013

அன்போடு எமை அரவணைத்தாயம்மா
ஏற்றமிகு வாழ்விற்கு ஏணியாயிருந்தாயம்மா
கண்ணில் எட்டாத்தூரம் காலன் அழைத்தானே
இமைப்பொழுதில் எமைவிட்டு ஏனம்மா
நீர் பிரிந்தீர் வலிக்குதே இதயமம்மா...
உமைப்போல் உதவிட எமக்கொருவரும்
இல்லையம்மா...எமது அன்னையின்
ஆத்மாசாந்தியடைய பிரார்த்திப்போமாக!

குடும்பத்தினர்.
த.மு: முதலிகோயில் வீதி,
கொக்குவில்.
நி.மு: மறவன்புலோ.

(41728)(3.6.4)


# மரண அறிவித்தல்கள்


## சுப்பையா தம்பிராசா



நவக்கிரி, புத்தூரைப் பிறப்பிடமாகவும் தோப்பு அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரபாகு சுப்பையா தம்பிராசா 25.12.2013 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வீரபாகு சுப்பையா-பறுபதிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும், செல்லையா-செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், புரந்தரநாதனின் (கனடா) தந்தையும், கலாறூபியின் அன்பு மாமனும், போதினி, ஆரணன் ஆகியோரின் அன்புப்பேரனும், கோபாலகிருஷ்ணன், வைகுந்தநாதன், திருஞானசம்பந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(29.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு,
அச்சுவேலி.

(41751)(3.6.4)

தகவல்:
புவனேஸ்வரி (மனைவி)



## துரைஐயா மகேந்திரன் (இந்திரன்)



புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம், கண்ணகைபுரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் சூரிச்சை வசிப்பிடமாகவும் கொண்ட துரைஐயா மகேந்திரன் 24-12-2013 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைஐயா - கனகமணி தம்பதிகளின் அன்பு மகனும், இரத்தினம் - மனோன்மணி (யாழ்- கொழும்புத்துறை மேற்கு ) தம்பதிகளின் அன்பு மருமகனும், ரஞ்சினி அவர்களின் ஆருயிர்க் கணவரும், மதுசிகா, ரதுசிகா, ரதீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரசேகரம்(சுவிஸ்), மகாலட்சுமி(பிரான்ஸ்), விஜயலட்சுமி (இலங்கை), ஞானசேகரம்(குணம்- சுவிஸ்), ராஜசேகரம் (கனடா), ஜெயசேகரம் (சுவிஸ்), விஜயசேகரம் (கனடா), சரஸ்வதி(சுவிஸ்) ஆகியோ ரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீட்டுமுகவரி:
Au Strasse -19,
Zurich, 8045,Swiss (2.6.3)(41725)

தகவல்:
இரத்தினம் (மாமா)
90,கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். 077 662 2064

# அபிவிருத்தி காணாத ஒட்டுசுட்டான் பிரதேசம்

## வடமாகாண சபை உறுப்பினர் விசனம்

முல்லைத்தீவு, டிசெ.28
ஒட்டுசுட்டான் பிரதேசம் அபிவிருத்தி எதையும் காணாத நிலையில் உள்ளதாக வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.சிவமோகன் தெரிவித்துள்ளார்.
அண்மையில் இங்கு வசிக்கும் மக்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கும்போது:
இங்குள்ள வீதிகள் மிகவும் மோசமான வகையில் காணப்படுகின்றன. முத்துஐயன்கட்டுக் குளத்தின் வாய்க்கால்கள் நெடுங்காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் குளத்திலிருந்து விடுவிக்கப்படும் நீர் விரயமாகி வருகின்றது.
கட்டடங்கள் இல்லாத நிலையில் சில முன்பள்ளிகள், மரங்களின் கீழ் இயங்கி வருகின்றன. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களின் ஆசிரியர்கள் இல்லை. வெறுமனே விஞ்ஞான ஆய்வு கூடத்தைக்கட்டினால்மட்டும்போதாது. பாடங்களைப் போதிப்பதற்கு ஆசிரியவளம் அவசியமாகும். மேலும் அறிவை ஊட்டக் கூடிய நூல் நிலையமும் இங்கு இல்லாத நிலையே காணப்படுகின்றது.
சிறந்த விளையாட்டு மைதானம், குடிதண்ணீர் வசதி என்பனவும் இங்கு காணப்படவில்லை. இதனால் ஒட்டுசுட்டான் மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். வேலைகள் கிடைக்காததால் இளைஞர், யுவதிகள் வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர். தொழில் வாய்ப்புகளில் பாரபட்சம் காட்டப்படுவதால் இளைஞர், யுவதிகள் மனமுடைந்த நிலையில் காணப்படுகின்றனர் என்று தெரிவித்தார்.
(க-500)

## கிராம அலுவலர் வீட்டுக்கு கல்வீச்சு

உடுவில் பிரதேச செயலக கிராம அலுவலர் ஒருவரின் வீட்டின் மீது இனம் தெரியாதவர்கள் கல்வீச்சு மேற்கொண்டதில் அவருடையவீட்டுயன்னல்கண்ணாடிகள் உடைந்துள்ளன.
நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் இணுவில் காங்கேசன்துறை வீதியில் இடம்பெற்றுள்ளது.
கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட கிராம அலுவலர் தமது பகுதியில் இடம் பெறும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்பாகக் கூட்டத்தில் தெரிவித்த நிலையில் இவருடைய வீட்டின் மீது குறிப்பிட்ட சிலர் கல்வீச்சை மேற் கொண்டனர். இதனால் குறித்த கிராம அலுவலர் கூறியதற்கு எதிராகக் குறித்த இளைஞர்களின் நடவடிக்கைக்கு ஆதரவாக பொலிஸார் கருத்துத் தெரிவித்து அவருடைய முறைப்பாட்டையிட்டுநடவடிக்கை எடுக்காது கைவிட்ட நிலையில் மீண்டும் நேற்றுமுன்தினம் இரவுகல்வீச்சு இடம்பெற்றுள்ளது.
குறித்தசம்பவம் தொடர்பாகசுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கிராம அலுவலரால் முறையிடப்பட்டுள்ளது. (வ-68)

## மரண அறிவித்தல்

### மலக்கியாஸ் ஆசீர்வாதம்

(ஆசிரியர் - மண்டைதீவு, குருநகர்)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், குருநகர் மற்றும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட மலக்கியாஸ் ஆசீர்வாதம் (24.12.2013) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - பார்பரம்மா (தங்கச்சியம்மா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், விக்ரோறியா ஆனந்தராணி (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும், கய சிந்தப்பர் (சிறில்), லொரென்சியா (புஸ்பராணி), லெற்றீசியா (நேசக்கிளி), காலஞ்சென்ற அந்தோணிபர்ணாந்து (மனோகரன்), காலஞ்சென்ற மரியசீலன் (நேசகுமாரன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் விக்ரர் இளங்கோ (பிரான்ஸ்), பெலிசியா தேன்மொழி (பிரான்ஸ்), போல்சியா கனிமொழி (பிரான்ஸ்), யூட் இளந்திரையன் (பிரான்ஸ்), அன்ரனிஸ் இளஞ்செழியன் (லண்டன்), றெமிசியா அருள்மொழி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனா ரும், ஜெயரூபவதி (பிரான்ஸ்), பொன்னையா சிறீகாந்த் (பிரான்ஸ்), பீலிக்ஸ் பிலேந்திரன் (தயா-பிரான்ஸ்), தயாளகுமாரி (பிரான்ஸ்), பற்றீசியா (ரூபி-லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரான்சிஸ் அனந்தராயர் இராசக்கோன்-மரியநாயகி (குருநகர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும், விஜய், சலோமி, லேவி, மனாசே, மிரியம், எப்பிராயிம், யோயல், டெபோறா, ரெபேக்கா, எப்சியா, ஆன்சியா, யோன்சியா, கெற்சியா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் (30.12.2013) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்ரர் இளங்கோ 06 26 22 98 64 (41733)(7.6.3)
யூட் இளந்திரையன் 06 27 78 93 73
அன்ரனிஸ் இளஞ்செழியன் 0044 798 488 4033
தகவல் : குடும்பத்தினர்.

**A/L CHEMISTRY**
ஆங்கிலம்/ தமிழ்
1979 - 2013 வருட பரீட்சை வினாத்தாள்கள் சிறந்த முறையில் கற்பிக்கப்படும். 2016 A/L மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு:- 077 6246865

மாப்பியன் அரிசி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
சிவா பிறதர்ஸ்
205 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**மில் தளபாடங்கள் தேவை**
தொடர்பு: 077 7722215
மாப்பியன் மில் சுதுமலை, யாழ்ப்பாணம்.

**CHEMISTRY CENTRE**
1. 287, பலாலி வீதி, கந்தர்மடம்.
2. 33, அராலி வீதி, ஓட்டுமடம் சந்தி அருகில்
A/L CHEMISTRY DAY CLASS
பிரிவு I Tue - Fri 11.15 - 2.00p.m
பிரிவு II Tue - Fri 6 - 8p.m
General, Basic உட்பட சகல அலகுகளின் கடந்த கால, மாதிரி வினாக்கள் 25இற்கு மேற்பட்ட கருத்தரங்குகளை உள்ளடக்கியது.
ஆரம்பம் : 01.01.2014 புதன்கிழமை
A/L 2014 Physical Chemistry
A/L 2015 Inorganic சக்தியியல்
A/L 2016 General Chemistry
By : அன்பு
Group Classகட்கு தொடர்பு : 077 434 1393

**கார் விற்பனைக்கு**
SUZUKI SWIFT Car Japan H.G. A/C Fulloption Auto Cantral Lock DVD T.V. Alloy Wheel Prverze camara Subwhoober
நல்ல நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு.
(43027)(4.6.3) T.P:077 188 2119

CEYLON THEATRES
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
MAJESTIC CINEPLEX AT Cargills SQUARE யாழ்ப்பாணம்
(Opposite Jaffna Teaching Hospital)
10.30am, 2.30pm, 6.30pm
குடும்பத்தோடு பார்க்கவேண்டிய யதார்த்த த்ரில்லர்
CEL வெளியீடு



GV Prakash Kumar
JSK FILM CORPORATION J. SATISH KUMAR Presents
மதயானைக் கூட்டம் (U)
விக்ரம் சுகுமாரன்
www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

## விளையாட்டு விஞ்ஞான அலகு

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

11 ஆம் அணியைச்சேர்ந்த மாணவர்களுக்கான இரண்டாம் வருட உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறி எதிர்வரும் 06.01.2014 திங்கட்கிழமையன்று ஆரம்பமாகவுள்ளமையால் அனைத்து 11 ஆம் அணி மாணவர்களும் 06.01.2014 அன்று மு.ப. 10.00 மணிக்கு விளையாட்டு விஞ்ஞான அலகிற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம். (சி/10810)(3.6.4)

## வாடகைக்கு வாகனம் தேவை

மகேந்திர கப் அல்லது பட்டா (Cap or Patta) வாகனம் வாடகைக்குத் தேவை. மேற்கொண்டு விவரங்கள் பேசித் தீர்மானிக்கப்படும். தொ.பே : 077 8315916

## தவறிவிட்டது

பாஸ்கரதேவன் ஜெகதீஸ்வரன் (682863293V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், ATM Card மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் மானிப்பாய்க்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது.
தொடர்பு : 077 664 6975 (41730) (7.6.3)

## தவறிவிட்டது

திருமதி ஜெயதரன் சுதாயினி (838014186v) என்பவருடைய தேசிய அடையாள அட்டை மற்றும் பெறுமதியான பொருள்கள் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:077 699 1074 (41734)(4.6.3)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடம்

### மனிதவள முகாமைத்துவம் டிப்ளோமாக் கற்கை நெறிக்கான பரீட்சை ஜனவரி 2013

மேற்படி கற்கை நெறிக்கான பரீட்சை 2014 ஜனவரி மாதம் 11, 12, 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதால் விண்ணப்பங்களை இதுவரை கையளிக்காதவர்கள் கற்கை நெறி இணைப்பாளருடன் அலுவலக நேரத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு அதற்கானநடவடிக்கைகளை ஜனவரி மாதம் 03 ஆம் திகிதிக்கு முன்னராக மேற்கொள்ளும்படி மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
இப் பரீட்சைகளுக்குரிய நேரசூசியை பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடவும்.
பதிவாளர் டிசெம்பர் 26.2013

## தேவை

யாழ். நகரில் உள்ள ஆங்கில மருந்தகத்துக்கு மருந்தாளர் தராதரச் சான்றிதழ் உடைய மருந்தாளர் (Pharmacist) தேவை.
சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல: 4481,
C/O.உதயன்
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (41727)(4.6.3)

விசுவமடுவில்.....
மெகா இங்கிலிஸ் அக்கடமி
**(M.E.C.A English Academy)**
◇ Grammar & Spoken (3 Months)
◇ O/L, A/L எழுதிய மாணவர்களுக்கு ஆரம்பம்
நேரம் : 7.00 - 10.00a.m
3.00 - 5.00p.m
7.00 - 9.00p.m
◇ திங்கள் தொடக்கம் வெள்ளி வரை வார நாள்களிலும்
◇ சனி, ஞாயிறு வார இறுதி நாள்களிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன.
◇ தரம் 03-10 வரையான மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடு செல்வோர் அனைவருக்கும் தனியாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: (41726) (7.6.3)
ஆசிரியர் : S.K. மதி - 077 435 8167


## கஞ்சா புகைத்த மாணவர்கள் கைது



நத்தார் கொண்டாடுவதற்காக கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரபல பல்பொருளங்காடியில் கஞ்சா புகைத்துக்கொண்டிருந்த பல சர்வதேச பாடசாலைகளைச் சேர்ந்த எட்டு மாணவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாணவர்களை நத்தார் தின இரவு வேளை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களை கொழும்பு கோட்டை பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்திய போது நீதவான் இவர்களை தலா 50,000 ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவித்தார். (எ)



நாடு முழுவதிலுமுள்ள கரையோரப் பிரதேசங்களில் ஆழிப்பேரலை இடரால் காவு கொள்ளப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களை நினைவு கூரும் 9 ஆவது ஆண்டு நினைவு தினமான நேற்று முன்தினம் சமய நிகழ்வுகள் நாட்டின் அனைத்து இடங்களிலும் பரவலாக இடம்பெற்றன. ஜனாதிபதி தேரர் ஒருவருக்குத் தானம் வழங்குகிறார்.

## தங்க பிஸ்கட்டுடன் ஒருவர் கைது

கொழும்பு.டிசெ.28

தங்க பிஸ்கட்டுக்களை நாட்டுக்குள் கொண்டுவந்த குற்றச்சாட்டின் பேரில் டுபாயிலிருந்து வந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் 10 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுக்களை பெருங்குடலின் கீழ்ப்பகுதியில் மறைத்துக் கொண்டு வந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

கிட்டத்தட்ட 1,800 கிராம் நிறையுடைய குறித்த தங்க பிஸ்கட்டுக்கள்24கரட்தரமுடையவை என்பதுடன், சுவிஸில் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தங்கத்தைக் கடத்துவதற்காக ஒரு லட்சம் ரூபா தனக்கு வழங்கப்பட்டதாக திருகோணமலையைச் சேர்ந்த 48 வயதான இந்தச் சந்தேகநபர் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். (எ)

## சந்தேகநபர்களை எம்.பி பலவந்தமாக விடுவித்தமை தொடர்பில் விசாரணை

கொழும்பு, டிசெ.28

வன பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் கைதுசெய்யப்பட்ட ஆறு சந்தேகநபர்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பலவந்தமாக விடுவித்து அழைத்துச்சென்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொடகவெல பகுதியிலுள்ள அரச வனப்பகுதியில் சட்டவிரோதமாக கற்குவாரி நடத்தி வந்த சிலரையே நாடாளுமன்ற உறுப்பினர் அழைத்துச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.



இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப் பத்திரமின்றி கற்குவாரி நடத்திவந்தமை தொடர்பில் சந்தேக நபர்களைக் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்ற போது. அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினரின் தலையீட்டினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் வன பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் கொடகவெல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## பாவனைக்கு உதவாத வெங்காயம் கைப்பற்றல்

யாழ்ப்பாணம், டிசெ. 28

பாவனைக்கு ஒவ்வாத ஒரு தொகை பெரிய வெங்காயம் கொழும்பு முகத்துவாரம் பிரதேசத்திலுள்ள களஞ்சியம் ஒன்றி லிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகாரசபையின் விசேட சுற்றிவளைப்பின்போது நேற்றுமுன்தினம் இந்த வெங்காயம் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த களஞ்சியத்தில் 30 லட்சம் ரூபா பெறுமதியான 25,000 கிலோ கிராம் பெரிய வெங்காயம் இருந்துள்ளது.

சுற்றி வளைப்பின்போது அங்கிருந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

## வங்கியில் கொள்ளை

மாலபேயில் தனியார் வங்கியொன்றிலிருந்து 13 இலட்சம் ரூபாவை கொள்ளையிட்டு தப்பிச்சென்ற சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான தேடுதல்நடவடிக்கைகளைபொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். இதன்பொருட்டு இரண்டு பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும்,சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித் தார்.

இந்த இரண்டு பொலிஸ் குழுக்களில் அதுருகிரிய பொலிஸ் குழுவொன்றும்அடங்குகின்றன. மோட்டார் சைக்கிளில் வந்ததாக கூறப்படும் இரண்டு கொள்ளையர்களே இந்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த சம்பவம் நேற்று முன்தினம்முற்பகல் 11மணியளவில் இடம்பெற்றுள்ளது. (எ)

## மாநாட்டுக்காக வெளியேற்றிய மிருகங்களுக்கு நடந்தது என்ன?

### *தகவல் வெளியிடுமாறு கொழும்பு மாநகர சபையிடம் சவால்*

கொழும்பு.டிசெ.28

பொது நலவாய நாடுகளின் அரசதலைவர்களது மாநாட்டை முன்னிட்டு கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மிருகங்களுக்கு என்ன நடந்தது என்பதை முடிந்தால் கொழும்பு மாநகர சபை வெளிப்படுத்திக் காட்டட்டும் என மிருக நலப் பொறுப்பகம் சவால் விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்து கொண்ட மிருக நல பொறுப்பகத்தின் தலைவர் அசிராங் கனி டி சில்வாவே இந்தச் சவாலை விடுத்துள்ளார்.

“ - ”

மிருகங்களை எங்கு கொண்டு சென்று விட்டார்கள் என்ற தகவல் இன்று வரை வெளிப் படுத்தப்படவில்லை.

மிருகங்களை எங்கு கொண்டு சென்று விட்டார்கள் என்ற தகவல் இன்று வரை வெளிப்படுத்தப்படவில்லை. அந்த மிருகங்களுள் பலவற்றைக் கொன்று விட்டார்கள் என்று நாங்கள் எண்ணுகிறோம். அவ்வாறு கொல்லப்படவில்லை என் றால் அது தொடர்பில் அறிவிக்க வேண்டும். -எனத் தெரிவித்துள்ளார். (12)

**காணி விற்பனைக்கு**

பிரதான வீதி, சங்கானையில் (துபால் கந்தோருக்கும் சேச் றோட்டுக்கும் இடையில்) 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்)

தொடர்பு: 0776257905, 0212213010

**யூஸ் பைக்கற் தயாரிக்கும் இயந்திரம் (Machine) தேவை**

நல்ல நிலையில் உள்ள யூஸ் தயாரிக்கும் இயந்திரம் (Machine) விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 7949246

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07.08.1954

இறப்பு 09.12.2012

**சுப்பன் வடிவேலன்**

எமது அருமை உத்தம அப்பாவே !
அவனியில் மலர்ந்து பாசத்துடன் எமை வளர்த்து
நேசத்துடன் உறவாடி எமை எல்லாம்
அன்பால் வழி நடத்திய எம் குலவிளக்கு
அணைந்து ஒராண்டு சென்றாலும்
எம்மோடு எம் பாசக்கூண்டில் இருப்பீர் அப்பா....
ஓம் சாந்தி !

கைதடி மேற்கு கைதடி — குடும்பத்தினர்.

**வீடு வாடகைக்குத் தேவை**

உள்ளூரில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு பலாலி வீதியில் அல்லது அதை அண்மித்து உரும்பிராய்க்கும் நல்லூருக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் தேவை.

T.P:- 077 5062261

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் மேற்கு கலட்டி ஒழுங்கையில் (K.K.S. வீதியிலிருந்து முத்தட்டுமட வீதியூடாக 100 மீற்றர் தூரத்துக்குள்) 3 1/2 பரப்பு விஸ்தீரணமுள்ள சுற்றுமதில் கிணற் றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: 077 4440300

**கணினி மலிவு விற்பனை**

HP FULL SET COMPUTER & LCD MONITOR

24750/= மட்டுமே

FREE 4GB PEN/WEB CAM/ H.PHONE

ONE YEAR WARRANTY

ST. ANTONY'S
187, K.K.S. ROAD,
JAFFNA TOWN
021 222 4865, 0750698608

## மரண அறிவித்தல்

**சபாபதிப்பிள்ளை கந்தசாமி (காந்தி)**

(பிரபல வர்த்தகர், காந்தி ஸ்ரோர்ஸ், காளுவன் சந்தி சுழிபுரம்.)



கல்லைவேம்படி சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை கந்தசாமி (காந்தி) நேற்று (27.12.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் சபாபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தெய்வானைப் பிள்ளையின் அன்புக்கணவரும் காலஞ் சென்றவர்களான வைத்தி லிங்கம், குமாரவேலு, அன்னமுத்து ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஞானகுரு, ஞானாம்பாள், ஞானகுமாரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நடராஜா, மல்லிகாதேவி, இந்துமதி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆதவன், பவானி, கல்யாணி, சியாமினி, போஜினி, கோவர்த்தன் ஆகியோரின் பேரனும். ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2013) சனிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லைவேம்படி சுழிபுரம்.

தகவல்:
நடராசா
குடும்பத்தினர்

# கூட்டமைப்பின் நிலைப்பாட்டை சாடுகிறது அரசு

இனப்பிரச்சனை தீர்வு தொடர்பில் அரசு அமைத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நம்பகத்தன்மை அற்றது என்றும், அதில் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் எடுத்திருந்த தீர்மானத்தை அரசு கடுமையாக விமர்சித்துள்ளது.

சர்வதேச அரசியல் இலாபங்களைக் கணக்கில் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உள்நாட்டுத் தீர்வுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் விடுத்திருந்த திறந்த அழைப்பை நிராகரித்திருப்பதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைப் பற்றி மட்டுமே ஆராயும் நோக்கம் கொண்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கருதுவது சிறுபிள்ளைத் தனமானது என்றும் அவர் கூறினார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி வாக்குறுதி அளித்திருந்த சந்தர்ப்பத்தில், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவந்ததையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கூட்டமைப்பு இதுமாதிரி நடந்துகொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் அல்ல இது. ஜனாதிபதி வடக்கு மாகாண சபையின் தேர்தலை நடத்தி தனது அரசுக்கே சாதகமற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்வார் என்று அவர்கள் நம்பியிருக்க வில்லை. ஆனால் தேர்தல் நடந்து, இன்று கூட்டமைப் புக்கே மாகாண சபையின் ஆட்சியதிகாரம் கிடைத்துள்ளது' என்றார் அமைச்சர்.

இந்தத் தெரிவுக்குழு 13ஆவது திருத்தம் பற்றி மட்டும் பேசுகிறது என்று கூட்டமைப்பு சொன்னால் அது சிறுபிள்ளைத் தனமானது. அரசமைப்பின் ஏதாவது பிரிவுபற்றி மட்டும் பேசுவதற்காக இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப் படவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (த)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கால அவகாசம்

பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கும், அதன் பிரசைகளின் உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பதற்கும் இலங்கை தன்னை முழு அளவில் தயார் படுத்திக்கொண்டுள்ளது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

"எங்களிடம் நிறுவனங்கள் இருக்கின்றன. மூலவளங்கள் இருக்கின்றன. இவற்றின் மூலம் எங்கள் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம். எங்கள் பொருளாதாரத்தைத் தொடர்ந்து பலப்படுத்துவோம். எல்லோருக்குமான கௌரவமான வாழ்வுக்கு உத்தரவாதமளிப்போம். அவர்களின் சமயம், இனம், அரசியல் ஈடுபாடு எவையாகவும் இருக்கலாம். பாரபட்சமற்ற முறையில் எங்கள் பணிகள் தொடரும்" என்றும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தமது பேட்டியில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்து நான்கு வருடங்களுக்கும் மேலாகிறது. எங்கும் முன்னேற்றத்துக்கான அறிகுறிகள் பரவலாகத் தென்படுகின்றன. எங்கள் நாட் டில் எங்கு சென்றாலும் இவற்றை உங்களால் அவதானிக்கமுடியும்.

முப்பது வருடகால சண்டையால் ஏற்பட்ட குளறுபடியான சூழ்நிலைக்கு மத்தியிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ வின் அரசு நல்லிணக்கப்பாட்டு ஆணைக்குழு வகுத்துள்ள 300 திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. நாட்டின் வடபகுதியில் கண்ணிவெடி அகழ்வுப் பணி நிறைவடைந்துள்ளது. 11 ஆயிரத்துக்கு மேற்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சமூகத்தில் மீள சேர்க்கப்பட்டுள்ளார்கள். சமத்துவமான உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தொகையில் அதிகளவில் தமிழர்களைக் கொண்ட வடமாகாணத்தில் மீன்பிடித் தொழில், விவசாயம், பொருளாதாரத்துறை ஆகியவற் றில் மேற்கொள்ளப்பட்ட தீவிர முதலீட்டுத்திட்டங்கள் கூடிய பலன்களை அளித்துள்ளன. சமீப வருடங்களில் 22 சதவீத வளர்ச்சியை வடமாகாணம் எட்டியுள்ளது.

வீடுகள், நெடுஞ்சாலைகள், பாடசாலைகள், மருத்துவமனைகள் ஆகிய வற்றை மீளக்கட்டி எழுப்புவதற்கும், இதர சமூக நலத்திட்டங்களை மேற்கொள்வதற்கும், போரால் இடம்பெயர்ந்த 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும், காணாமற்போன ஆயிரக்கணக்கானோரைத் தேடுவதற்கும் மேலும் கால அவகாசம் தேவை. எனினும், மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளில் அபிவிருத்திகளைக் காணக்கூடியதாக உள் ளது.

2012ஆம் வருட மார்ச்சிலும், 2013 ஆம் வருட மார்ச்சிலும் ஐ.நா. மனித உரிமைகள் சபை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் துரிதமடையுமாறு இலங்கையை வலியுறுத்தும் இரு தீர்மானங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் சபை இவ் விடயத்தை மீள்பரிசீலனை செய்யும். அச்சமயம் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளைக் கண்காணிக்க சுயாதீனமான சர்வதேச விசாரணையை மேற்கொள்ளுமாறு அநேக மேற்கத்தேய நாடுகள் இலங்கையைக் கோரக் கூடும்.

எனினும், அச்சுறுத்தலும், சர்வதேச அழுத்தங்களும் நாங்கள் முன் நோக்கிச் செல்ல ஒரு வழியை அமைக்காது. சர்வதேச சமூகம் நம்பிக்கையின் அடிப்படையில் எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். தம்மால் தெரிவுசெய்யப்பட்ட தராதரங்களை இலங்கை மீது திணிப்பது ஒரு தவறான நடவடிக்கையாகும். ஐ.நா. மனித உரிமைகள் சபை தனது சொந்தத் திறமைகளின் அடிப்படையில் இதனைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

இலங்கை மேற்கொண்டுள்ள சுயா தீன வழிக்கு எதிராக சில அரசுகள் செயற்படுகின்றன. வெளிநாடுகளில் குடியேறி பொருளாதார வளங்களுடன் வாழும் முன்னாள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து இந்த அரசுகள் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத் தும் பிரசாரங்களிலும் ஈடுபட்டு வருகின்றன" என்றார் அவர். (த-சி)

### நுவரெலியாவில்

விய இந்த வெப்பநிலை குறைவாகக் காணப்பட்டபோதும், இதைவிடவும் குறைவான வெப்பநிலை அங்கு நிலவியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 23ஆம் திகதி நுவரெலியாவின் வெப்பநிலை 8 பாகை செல்சியஸாகக் காணப்பட்டது. கடந்த வாரத்தில் மழையுடன் கூடிய பனிமூட்டம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு கிடைக்கும் காற்று வடகிழக்கு திசை நோக்கி வீசுகின்றமை மற்றும் தற்போது நாட்டில் வடமேல் பருவப் பெயர்ச்சிக் காலநிலை நிலவுகின்றமையுமே இதற்கு காரணம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-சி)

### மன்னார்

காகக் குழி தோண்டிய வேளை மூன்று மனித மண்டையோடுகளும் மனித எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டன.

இந்த விடயம் மன்னார் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து நீதிவான் முன்னிலையில் புதை குழியைத் தோண்டும் நடவடிக்கைகள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் முன்னெ டுக்கப்பட்டன.

இதன்போது 11 மனித மண்டையோடுகள் மீட்கப்பட்டன.

இதன் பின்னர் புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை திடீரென இடைநிறுத்தப்பட்டன. புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கை இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் மீட்கப்பட்ட மனித மண்டையோடுகளும் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த நிலையில் புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கைகள் இன்று காலை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (த-12)

### ஜெனிவாவில்

தீர்மானித்துள்ளது எனவும் சுரேஷ் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கு எதிராக அனைத்துலக சமூகம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இம்முறை கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மாபெரும் எழுச்சி மாநாட்டை நடத்தவுள்ளன.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் சபை அமைந் துள்ள வளாகத்தில் கவனவீர்ப்புப் போராட்டத்தையும், இலங்கை அரச படைகளினால் ஈழத் தமிழர்களுக்கு நேர்ந்த கொடுரங்கள் தொடர்பான புகைப்படக் கண்காட்சியையும் நடத்தவுள்ளன. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஜெனிவா வந்தால் அது பெரும் சக்தியாக இருக்கும் என்று உலகத் தமிழர் பேரவையின் தலைவர் வண. இம்மானுவேல் அடிகளார் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் நேற்று 'உதயன்' கேட்டபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழத் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்குமாறு சர்வதேச சமூகத்தை வலியுறுத்தி புலம்பெயர் தமிழ் அமைப்புகள் ஜெனிவாவில் நடத்தவுள்ள மாபெரும் எழுச்சி மாநாடு மற்றும் கவனவீர்ப்புப் போராட்டங்களை நாம் வரவேற்கின்றோம்; எமது ஆதரவையும் வழங்குவோம்.

கடந்த முறை போல இம்முறையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா செல்லவுள்ளது. ஆனால், இம்முறை எமது பரப்புரையைத் தீவிரப்படுத்தவுள்ளோம். இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணையே எமது முக்கிய வலியுறுத்தலாக உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஏற்கனவே இரண்டு தடவைகள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறியதால் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக மிகவும் கடுமையான பிரேரணை நிறைவேற்றப்படும் என நாம் நம்புகின்றோம்.

அண்மையில் இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பெயானி மற்றும் அமரிக்காவின் உயர் குழுவினர் ஆகியோரிடமும் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணையை வலியுறுத்துமாறும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்குமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் தமிழ் சிவில் சமூகத்தினர் வலியுறுத்தியிருந்தனர் - என்று சுரேஷ் தெரிவித்தார். (த-சி)

### திருமலை

மலை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

இத்துடன் அவரின் சகோதரர்களான றிமாஸ்(வயது-10), றினோஸா (வயது-3) ஆகியோர் இருவரும் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்திய சாலையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், தங்கள் வீட்டு வளவில்கிடந்தமர்மபொருளொன்றை எடுத்து ஆணியை அறையமுற்பட்ட போது குறிந்த அந்த பொருள் வெடித்ததாகத் தெரிக்கப்படுகின்றது.

குச்சவெளிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (த)

### 19 வயது

பாணத்துக்கு வந்திருந்த போதே சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்தே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட யுவதி சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடையவர்களை இதுவரை கைது செய்யவில்லை - என்றார். (த-4)

### அமெரிக்க

ரிக்கா. ஜனவரி 2 ஆம் வாரத்தில் இலங்கை வரும் அவர் அரச மற்றும் எதிர்க்கட்சி பிரமுகர்க ளைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன் கடந்த முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றங்கள் குறித்தும் அவர் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வார்.

அத்துடன் தீர்மானம் தொடர்பில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அவர் இலங்கைவெளிவிவகாரஅமைச்சர் ஜி.எல்.பிரீஸிடம் வினவுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த)

### மீனவர்கள்

ஷித் உறுதியளித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து கச்சதீவுக்கு அருகே மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டு வருவதுடன் மீனவர்களுடைய படகுகள் மற்றும் உபகரங்கள் என்பவற்றைச் சேதமாக்குவதுடன் மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடற்படையினரின் தாக்குதலைக் கண்டித்து தமிழக மீனவர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டபோதும் எது விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான டி.ஆர்.பாலு, விஜயன் மற்றும் தமிழக மீனவர் பிரதிநிதிகள் ஆகியோர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை நேற்றுச் சந்தித்து, இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க நடவடிககை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது இந்திய - இலங்கை மீனவப் பிரதிநிதிகளுக்கிடையில் ஜனவரியில் பேச்சு நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்றும், இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார். (த-400)

### இப்படியும்

கூட்டமைப்பின் வரவு செலவுத் திட்டங்களைத் தோற்கடிக்கும் உறுப்பினர்களுக்கு எதிராகச் கட்சி நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர்களை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூட்டமைப்பு இந்த வார ஆரம்பத்தில் அறிவித்திருந்த நிலையில் இப்படி வினோதமான ஒரு சூழ்நிலையில் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

"வரவு செலவுத் திட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மூவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவரும் ஆதரவளித்து நிறைவேற்றினர்" என்று தெரிவித்தார் சபையின் தவிசாளர் நடராஜா அனந்தராஜ்.

கூட்டமைப்பு உறுப்பினர்கள் சபையின் உபதவிசாளர் கனகராஜா ஜெயராஜா, திருமதி கைவாகின் இந்திரன் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் பொன்னுத்துரை தெய்வேந்திரன் ஆகியோர் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். உறுப்பினர்களான ம.மயூரன், க.கந்தசாமி, சூ.குலநாயகம், ச.பிரதீபன் ஆகியோர் சபைக்குச் சமூகமளிக்கவில்லை என்று தவிசாளர் தெரிவித்தார்.

சபைக் கூட்டத்திற்காக வருகை தந்த தம்மை தவிசாளர் அனந்தராஜின் ஆதரவாளர்கள் வாயிலில் தடுத்து நிறுத்தி உள்ளே நுழைய விடாமல் செய்த கால அவகாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று சபைக்கு வருகை தரமுடியாது தடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குற்றஞ் சாட்டினர்.


காலையில் சபை 9 மணிக்குக்கூடியபோது வாயிலில் தவிசாளரின் ஆதரவாளர்கள் கூடியிருந்தனர். உறுப்பினர்கள் ம.மயூரன், க.கந்தசாமி, சூ.குலநாயகம், ச.பிரதீபன் ஆகியோர் கூட்டத்திற்கு வருகை தந்தபோது அவர்களை உள்ளே நுழையவிடாமல் இவர்கள் வழிமறித்தனர். சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர். தம்மை இழிவுபடுத்தும் விதத்திலான வாசகங்கள்கூட அதில் அடங்கியிருந்ததாக உறுப்பினர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

தடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளே செல்வதற்குப் பொலிஸாரின் உதவியை நாடினர். எனினும் அனந்தராஜின் ஆதரவாளர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்து தொடர்ந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் சபை உறுப்பினர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் வாய்த் தர்க்கமும் இடம்பெற்றது.

இதற்கிடையே அங்கு வருகை தந்த சபையின் முன்னாள் உறுப்பினரும் வடமாகாண சபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கத்தையும் உள்ளே செல்லவிடாது எதிர்ப்பாளர்கள் வாயிலை மறித்துக்கொண்டனர்.

வெளியே இந்தக் களேபரம் நடந்துகொண்டிருந்த வேளையில் உள்ளே வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. தவிசாளர் அனந்தராஜ் வெளியே வந்து அந்தச் செய்தியை அறிவித்தார். அவரது ஆதரவாளர்கள் அவரைத் தமது தோள்களில் தாங்கி ஆரவாரம் செய்தனர்.

கூட்டத்தில் தம்மைப் பங்கு கொள்ள விடாது தடுத்து வைத்துக்கொண்டு வரவு செலவுத் திட்டத்தைத் தவிசாளர் நிறைவேற்றியதை ஒருபோதும் ஏற்க முடியாது என்று கூறிய நான்கு உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தை செல்லுபடியற்றது என்று அறிவித்து வரவு செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பை நடத்த மீண்டும் ஒரு கூட்டம் கூட்ட வேண்டும் என்று தாம் உள்ளூராட்சி சபைகளின் உதவி ஆணையாளரிடம் மனுச் செய்யப் போகிறார்கள் என்றுதெரிவித்தனர். (உ-422)



யாழ்ப்பாணம்-வவுனியா மாவட்டங்களின் மேசைப்பந்தாட்ட சங்கங்கள் நடத்தும் மேசைப்பந்தாட்ட தரம் I பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
இரண்டாம் நாளாகிய நேற்று இடம்பெற்ற பயிற்சியின் போது...... (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.28
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதய தாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் இளம்தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதவுள்ளது. (த-23)

# டைமன்ஸ், மேரிஸ் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.28
சூராவத்தை நியூ வொரியஸ் விளையாட்டுக் கழகம் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நியூ வொரியஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.



இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை பூமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ்விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் இரண்டு அணியினரும் ஆட்ட முடிவில் தலா 3 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்ட போதும் இரு அணியினரும் கோல் போடவில்லை.
இதனால் 3 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 9:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## அரைஇறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.28
கொம்மாந்துறை விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குகொள்ளும் 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை கொம்மாந்துறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.



அரையிறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். போஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## 786 அணி வெற்றி


வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங் குளம் யங்ஸ்ரார் விளை யாட் டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஏ.பி.சி. விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து 786 விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் 786 விளையாட்டுக் கழக அணி 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## வெற்றியீட்டிய அணிகள்

யாழ்ப்பாணம், டிசெ.28
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் கரவைச்சுடர், நெடியகாடு அணிகள் வெற்றி பெற்றன. முதலாவது ஆட்டத்தில் தொண்டமானாறு விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதிக் கொண்டது.
இதில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெறவிருந்த ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவிருந்த ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி உரிய நேரத்துக்கு போட்டிக்கு சமுகம் கொடுக்காமையால் நெடியகாடு விளையாட்டுக் கழக 'பி' அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (த-23)

## அராலி மாவத்தை வி.க. நடத்தும் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.28
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் விழாவை முன்னிட்டு வலிகாமம் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் இன்று சனிக்கிழமை மாவத்தை விளையாட்டுக் கழகத் தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)





உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய 9 பேர் பங்குகொள்ளும் 12 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் ஆட்டத் தொடர் நாயகனாகத் தெரிவாகிய உடுவில் கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வீரர் மயூரனுக்கு உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் வீரன் றொகான் விருது வழங்குகிறார். (த-23)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு, டிசெ.28
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளையொட்டி நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.
தெல்லிப்பழை நாமகள் வியைாட்டுக்கழக 'பி' அணி எதிர் அராலி அண்ணா விளையாட்டுக்கழக 'ஏ' அணி.
நாமகள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி எதிர் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம். (த-86)

## மென்பந்து கிரிக்கெட்



யாழ்ப்பாணம், டிசெ.28
தெல்லிப்பழை கிழக்கு கலைச் செல்வி இளைஞர் கழகம் நடத்தும் 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சனிக் கிழமை கட்டுவன்புலம் மகா வித்தியாலய மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
இதில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கழகங்கள் பங்கு கொள்ளவுள்ளன எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

# அஸ்வினுக்கு விருது




இந்திய கிரிக்கெட் சபை ஆண்டுதோறும், அகில இந்திய அளவில் சிறந்த வீரர்களைத் தேர்ந் தெடுத்து கௌரவித்து வருகிறது. இதன்படி 2012-2013-ஆம் ஆண்டுக்கான விருதுப் பட்டியலைக் கிரிக்கெட் சபை வெளியிட்டது.
இதில் பாலி உம்ரிகர் விருதுக்கு சுழற்பந்து வீச்சாளர் ஆர்.அஸ்வின் தேர்வு செய்யப்பட்டுள்ளார். விருதுக்குரிய காலக்கட்டத்தில் (2012 ஒக்ரோபர் 1 முதல் 2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை) அஸ்வின் எட்டு டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 43 டெஸ்ட் இலக்குகளைக் கைப்பற்றியதுடன், 263 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.
இதே போல் ஒரு நாள் போட்டியில் 24 இலக்குகளையும், 20/20 போட்டியில் 3 இலக்குகளையும் கைப்பற்றி இருக்கிறார். அது மட்டுமின்றி 80 ஆண்டு கால இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிவேகமாக 100 இலக்குகளைக் கடந்த இந்தியர் என்ற சாத னையும் இந்தக் காலக்கட்டத்தில் அவர் படைத்தி ருந்தார்.
அவருக்கு பாலி உமர்ரிகர் விருதுடன் ஐந்து லட்சம் ரூபாவுக்கான காசோலையும் வழங்கப்படும்.
இந்த விருதை ஏற்கனவே சச்சின் டெண்டுல்கர் (2 முறை), ஷேவாக், கவுதம் கம்பீர், ராகுல் டிராவிட், விராட் கோஹ்லி ஆகியோர் பெற்றிருக்கிறார்கள்.
இந்தியா - மேற்கிந்திய தீவுகள் டெஸ்ட் தொடரில் சிறப்பாகச் செயல்படும் வீரருக்கு வழங்கப்படும் திலிப் சர்தேசாய் விருதை ரோகித் ஷர்மா (ரூபா 15 லட்சம் பரிசு)வும், ரஞ்சி கிரிக்கெட்டில் சகல துறை ஆட்டக்காரராக ஜொலித்த அபிஷேக் நாயர் லாலா அமர்நாத் விருதையும் (ரூபா 8 லட்சம் பரிசு ) பெறுகிறார்கள்.
விருது வழங்கும் விழா ஜனவரி 11ஆம் திகதி மும்பையில் நடைபெறவுள்ளது.
(த)

# பீற்றர்சனுடன் பிரச்சினை இல்லை

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி விளையாடி வருகிறது. முதல் 3 டெஸ்டிலும் தோற்று இங்கிலாந்து அணி தொடரை இழந்துவிட்டது. இந்த நிலையில் ஆஷஸ் தொடரின் போதே இங்கிலாந்து சுழற்பந்து வீரர் சுவான் திடீரென ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
இது பலருக்கு ஆச்சரியத்தை அளித்தது. தான் உடல் தகுதி யுடன் இல்லை என்பதால் ஓய்வு பெறுவதாக அவர் தெரிவித்து இருந்தார்.
இந்த நிலையில் பீற்றர் சனு டன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே அவர் வெளியேறி யதாக தகவல் வெளி யானது. இதை சுவான் மறுத்து உள் ளார். பீற்றர்சனுடன் தனக்கு எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. பிரச்சி னையும் இல்லை என்று அவர் தெரிவித்தார். ஓய்வு முடிவைத் தான் தனது விருப்பப்படி தான் எடுத்ததாகத் தெரிவித்துள்ளார்.
இதேபோல பீற்றர்சனும் சுவானுடன் எந்தவித பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்துள்ளார். (த)





# பாகிஸ்தான் அணியில் மீண்டும் ஹபீஸ்

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணியில் முகமது ஹபீஸ் இடம்பெற்றுள்ளார்.
பாகிஸ்தான்- இலங்கை அணிகள் ஐந்து ஒருநாள் போட்டிகள் மற்றும் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றன. இவ்விரு அணிகளுக்கிடையே நான்கு ஒருநாள் போட்டிகள் முடிவடைந்துள்ள நிலையில், 3-1 என்ற கணக்கில் பாகிஸ்தான் முன்னிலையில் உள்ளது.
இந்நிலையில் இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போட்டி அபுதாபியில் 31ஆம் திகதி தொடங்குகிறது. இந்தப் போட்டிக்கான அணி வீரர்களைப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.
முகமது ஹபீஸ் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் முகமது தல்கா ஆகியோர் அணிக்குத் திரும்ப அழைக்கப்பட் டுள்ளனர்.
மேலும் டெஸ்ட் போட்டிக்காகத் தொடக்க ஆட்டக்காரர் குர்ரம் மன்சூர், ஷான் மசூத், நடுக்கள வீரர்கள் யூனுஸ்கான், அஷ்கர் அலி, இலக்குக் காப்பாளர் அட்னன் அகமல், வேகப்பந்து வீச்சாளர் ரகத் அலி ஆகியோரும் அணியில் சேர்க்கப்பட்டு உள்ளனர். (த)




# ஆசியக் கிண்ணம் இலங்கையில்?




பங்களாதேஷில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள ஆசியக் கிண்ணப் போட்டிகளை வேறொரு நாட்டுக்கு மாற்றுவது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.
அந்த நாட்டில் காணப்படுகின்ற அசாதாரண அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, அது தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது. இது தொடர்பில் விரைவில் கொழும்பில் பேச்சு ஒன்று நடை பெறும் என்று தெரிவிக்கப் படுகிறது.
பெரும்பாலும் இந்த முறை ஆசிய கிண்ணப் போட்டிகள் இலங்கையில் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. த)

# சமியால் தப்பியது மேற்கிந்திய தீவுகள்

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 2 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.
நியூசிலாந்து- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதிய முதல் ஒருநாள் போட்டி நேற்று ஒக்லாந்தில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தா டிய நியூசிலாந்து அணி, மேற்கிந்திய தீவு களின் அபார பந்துவீச்சால் திணறியது.
முடிவில் 42.1 பந்துப்பரிமாற்றங்களில் 156 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் பறிகொடுத்தது.
அதிகபட்சமாக பிரண்டன் மக்கலம் 51 ஓட்டங்களும், நாதன் மெக்கலம் 47 ஓட்டங்களும் எடுத்தனர்.
மேற்கிந்திய தீவுகளின் அணி சார்பில், வெய்ன் பிராவோ 4 இலக்குகளையும், ராம்பால், ஹோல்டர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பின்னர் 157 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப் பெ டுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, அடுத்தடுத்து இலக்குகளைப் பறிகொடுத்துப் பரிதவித்தது. ஒரு கட்டத்தில் 121 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 7 இலக்குகளை இழந்தது.
ஆனால் டரன் சமியின் நேர்த்தியான ஆட்டத்தால் மேற்கிந்திய தீவு கள் அணி 27.3 பந்துப்பரிமாற்றத் திலேயே 8 இலக்குகள் இழப்புக்கு 157 ஓட்டங்கள் எடுத்து 2 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
டரன் சமி 27 பந்தில், 5 நான்குகள் , 3 ஆறுகளுடன் 43 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு வித்திட்டார்.
நியூசிலாந்து தரப்பில் மெக்கிளேநாகன் 5 இலக்குகளை வீழ்த்தினார்.
ஆட்டநாயகன் விருதை டரன் சமி தட்டிச்சென்றார். இந்த வெற்றி மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், மேற்கிந்திய தீவுகள் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. (த)



DCM யாழ் நகர்
கலை, வர்த்தக பிரிவுகள்
DAY CLASS ஆரம்பம்
30.12.2013 திங்கள் 9.00A.M

# கிரிக்கெட் வீரர்களிடம் நள்ளிரவில் பொலிஸார் திடீர் விசாரணை

கொழும்பு, டிசெ. 28

ரஞ்சி கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்று வரும் ஜம்மு- காஷ்மீர் கிரிக்கெட் வீரர்களிடம் பொலிசார் திடீரென விசாரணை நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஜம்மு காஷ்மீர்- ஐதராபாத் அணிகளுக்கு இடையிலான ரஞ்சி கிரிக்கெட் லீக் போட்டிகள், ஜம்முவில் உள்ள கல்லூரி மைதானம் ஒன்றில் நடந்தது. 4 நாள் கொண்ட இந்த ஆட்டம் கடந்த புதன் கிழமை முடிவு பெற்றது.

இதற்கு முன்னதாக கடந்த 24ஆம் திகதி ஜம்மு- காஷ்மீர் அணி வீரர்களிடம் பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

இது குறித்து ஜம்மு காஷ்மீர் அணியின் சகலதுறை வீரன் சமியுல்லா பெய்க் தனது முகப்புத்தகத்தில் குறிப்பிடுகையில், பொலிசார் எங்களது ஹோட்டலுக்கு நள்ளிரவில் வந்து சோதனை நடத்தினர்.

அதிகாலை 1.15 மணி அளவில் அவர்கள் எங்களிடம் விசாரணை மேற்கொண்டனர். இதனால் இரவு முழுவதும் எங்களால் தூங்க முடியவில்லை.

ஹோட்டலில் எங்களின் ரஞ்சி வீரர்கள் மட்டுமே தங்கியிருந்ததால் நாங்கள் அறையைப் பூட்டவில்லை. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த போது எந்த முன்அறிவிப்பும் இன்றித் துப்பாக்கி சகிதமாக எங்களைச் சூழ்ந்து கொண்டு பொலிஸார் நின்றதை நினைக்கும் போது இன்னும் அதிர்ச்சியாகவும் பீதியாகவும் இருக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜம்முவில் பெரும்பாலான ஹோட்டலில் சோதனை நடத்தியதாகவும், இது வழக்கமான ஒன்று தான் என்றும் பொலிஸ் உயரதிகாரி ஐ.ஜி. ராஜேஷ் குமார் தெரிவித்துள்ளார். (த)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

Mega Sale மங்களா மலிவு விற்பனை
10% → 50% கழிவு
சகல தளபாடங்களுக்கும் விசேட விலை குறைப்பு
29.12.2013 ஏல விற்பனை
கையிருப்பு உள்ளவரை மட்டுமே முந்துங்கள்
536, K.K.S. Road, மனோகராச்சந்தி யாழ்.
31.12.2013 வரை மட்டும்

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L Day Class
கலை, வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம்: 30-12-2013 திங்கள் 8.00

கட்டார் நாட்டில்
உடனடி வேலை வாய்ப்பு
Airport Helpers (விமான நிலையத் தில்)
அதி உயர்சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம் வயது எல்லை 18 தொடக்கம் 35 வரை ஒரு வாரத்தில் பயணம்.
தொடர்பு:- Lanka Voice
075 0650084

விடுதலைப் பெருவிழா
"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."
கவலையா, கண்ணீரா, தீராத வியாதியா, பிசாசின்பிடியா, கடன் தொல்லைகளா, பில்லி-சூனியக்கட்டுக்களா, பாவங்களா, பரம்பரை சாபங்களா, அடிமைத்தனங்களா, ஆகியவற்றிலிருந்து...
இயேசு விடுதலை கொடுக்கிறார்...
பிரவேசம் இலவசம்
காலம் : 27,28,29 மார்கழி 2013
நேரம் : தினமும் மாலை 4.00 மணிக்கு
இடம் : சங்கிலியன் பூங்கா, முத்திரைச்சந்தி, நல்லூர்.
கடந்த விடுதலைப் பெருவிழாக்களில் அநேகர் அற்புத விடுதலையைப் பெற்றுக்கொண்டார்கள். சுகம் பெற்ற அற்புத சாட்சிகள் சில...
இருதயத்தில் இருந்த கட்டி மறைந்தது...

மாணிக்கம் சண்முகநாதன் - ஆனைக்கோட்டை அண்மைக்காலமாக ஏற்பட்ட தீவிர மார்பு வலியினால் அவஸ்தைப்பட்ட நிலையில் வைத்திய சிகிச்சையை நாடியிருந்தேன். சிகிச்சையின் போது இருதயத்தில் கட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்காக ஆலோசனை வழங்கப்பட்டது. எனது மனைவியின் ஆலோசனைக்கிணங்க திருச்சபைக்குச் சென்று பிரார்த்தனை செய்த போது மார்பு வலி அற்புதமாக மறைந்தது. மீண்டும் "SCAN" செய்த போது கட்டி மறைந்ததை வைத்தியர்கள் உறுதி செய்தார்கள். அற்புத சுகத்தைத் தந்த இயேசுவுக்கு நன்றி.
மரணப்படுக்கையில் இருந்து மீண்டேன்...

பொன்னுத்துரை பத்தி நாதன் - உரும்பிராய் மாரடைப்பு நோயினால் தாக்கப்பட்ட நான் 07 நாட்களாக மீளாத்தூக்க (கோமா) நிலையுடன் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் போது திருச்சபையினர் எனக்காக இயேசுவை நோக்கி பிரார்த்தனை செய்தார்கள். இயேசு அற்புதகரமாக என்னை சுகப்படுத்தினார். தற்போது நான் ஆரோக்கியமாக உள்ளேன்.
மூளையில் இருந்த கட்டி மறைந்தது...

செல்லையா சுபேந்திரராஜா - அளவெட்டி எனது மூளையில் இருந்த ஆபத்தான கட்டியின் நிமித்தம் மிகவும் உபாதைப்பட்டு வைத்தியரை நாடிய போது பல இலட்சம் ரூபா செலவில் சத்திர சிகிச்சையின் மூலம் கட்டியை அகற்ற வேண்டும் என்றார்கள். திருச்சபையை நாடி பிரார்த்தனை செய்த போது கட்டி மறைந்து அற்புத சுகமடைந்தேன். இதனை வைத்திய சான்றுகளும் நிரூபித்துள்ளன.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
முத்திரைச்சந்தியில் இருந்து கொடிகாமத்திற்கும், பருத்தித்துறைக்கும் பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை
673, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

COLLEGE OF PHYSICS
Palam Road, Kantharmadam.
A/L 2016
ஆரம்பம் : இன்று (28.12.2013)
Sat:4.30 p.m Sun:7.00 a.m
A/L DAY CLASS
Mon,Tue Wed,Thu } 4.30 p.m
N.KAPILAN B.Sc அனுமதிக்கு பெற்றோருடன் வரவும்

இத்தாலி 3 மாதங்களில் பறக்கலாம்
100% சட்டரீதியாக படிக்க உழைக்க ஆலோசனை முடிவு-30.12.2013
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com (41692)4.3.6)


கனடா இரண்டு மாதம் போதும்
இவ்வாய்ப்பு 29.12.2013 வரை மட்டுமே.
படிக்க, உழைக்க, சட்ட ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்
(41691)(3.6.4)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com


G.C.E(O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!
விசேட கட்டணக் கழிவுகள்
பல்கலைக்கழக கல்வி, வேலைவாய்ப்பு, வெளிநாட்டில் உயர்கல்வி, ஏனைய கற்கை நெறிகளை மேற்கொள்ள காத்திருக்கிறீர்களா?

ஆங்கில அறிவு இல்லாமல் இவை தேவமே சாத்தியப்படாது.
சர்வதேச தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் உங்களுக்காக எமது நிறுவனம் வழங்கும்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
(Quick Learning Course) (1 1/2 Months)
DIPLOMA IN ENGLISH (2 Months)
- இப்பாடநெறிகளை பூர்த்தி செய்பவர்கள் City & Guilds இன் English examக்கு தோற்ற முடியும்.
- Birtish Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சைகளுக்கும் தோற்ற முடியும்.
- Excellent Teachers' Panel & Individual attention
- எமது நிறுவனம் City & Guilds, British Council அங்கீகாரம் பெற்ற முகவர்கள்
Batch1: 06-01-2014
Batch2: 11-01-2014
Batch3: 15-01-2014
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15, Sirambiyady Lane, (Off Stanley Road), Jaffna. Tel: 021-2224550
HotLines:0777222422, 0714299935, 0777730074
No.3, 6th Lane, Vairavar Kovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel :024-3245287


கபிலா பாதணியகம்
13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
பாடசாலை மாணவர்களுக்கான Bata DSI பாதணிகளைப் பெற்றுக்கொள்ள
பொறுத்த விலையைவிடக் குறைவான விலையில்.... அசத்தலான தள்ளுபடி
கபிலா காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.